கல்கி



KALKI 8.12.1963 30 காசு



கல்கி

பொருளடக்கம்

சோபகிருது, கார்த்திகை 22 ★ டிசம்பர் 8



விளக்கம் 31-ம் பக்கம் பார்க்க



புகைபிடிக்கும் இங்கிதம்

உதவுவீர் முன்னே, ஊதுவீர் பின்னே



நாலுபேருக்கு நடுவில் புழங்கும் போது, சொந்த சிகரெட்டைப் பற்றவைப்பதற்கு முன்பாக, பிறருக்கு வழங்குவதே ஒழுங்கு. ஒரு பெட்டியைக் கச்சிதமாக நீட்டினீர்களேயானால் அதுவே மெச்சதற்குரிய வழி. பிறரிடமிருந்து பெறும் ரகங்களைக் குறைகூறாமலிருத்தல் சிறந்த பண்பாட்டுக்கு அறிகுறி.

உயரிய பண்போடு உபயோகிப்பதற்கும் உதவுவதற்கும் உகந்தது **பனாமா**



விசேஷக் கலவை செய்வோர்:
கோல்டன் டொபாக்கோ கம்., ப்ரைவேட் லிட்.
பம்பாய்-56.

இழுக்க இழுக்க இன்பம் — இறுதிவரை

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT. 616 TAM

Greens' Advtg.



மலர் 23 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 19

தமக்குவமை இல்லாதார்

சத்தியத்தின் ஜயந்தியாக மதிக்கத்தக்க ராஜாஜி ஜயந்தி இம்மாதம் எட்டாந் தேதி நிகழ்கிறது. எண்ணுவதற்கே பெருமையூட்டும் எண்பத்தைந்து ஆண்டுகளில் மாசு மறு இன்றிப் புனிதப் பெருவாழ்வு வாழ்ந்த அன்புத் தலைவர் எண்பத்தியாறாவது பிராயத்தைத் தொடங்குகிறார். அவர் நமக்கு ஊட்டியுள்ள ஆத்மிகத்தின் சக்தியாலேயே அவரை இன்று வாழ்த்துகிறோம்.

ராஜாஜி அயராமல் சலியாமல் சுறுசுறுப்புடன் ஆற்றுகிற மகத்தான பணியைக் கண்டு, 'இவருக்கா எண்பத்தியாறு வயசு?' என்று அதிசயிப்பவர்கள் இருக்கலாம். நாமும்தான் அதிசயிக்கிறோம் — 'இவருக்கு எண்பத்தியாறு வயசுதானா?' என்று. இமாசலத்துக்கும் இந்துமகா சமுத்திரத்துக்கும் எத்தனை ஆயிரம் வயது என்று நம்மில் யாராவது எண்ணிப் பார்த்ததுண்டா? அறிவில் இமயமாகவும், அன்பில் ஆழ்கடலாகவும் விளங்கும் ராஜாஜிக்கும் அத்தனை ஆயிரமாண்டுகள் ஆகியிருப்பதாகத்தான் நமக்குத் தோன்றுகிறது. சத்தியமும், தர்மமும், நீதியும், ஞானமும், ஆத்மிகமும், தயையும் தோன்றி எத்தனை யுக யுகாந்திரமாகின்றனவோ, அத்தனை காலமாக ராஜாஜியும் வாழ்ந்து வந்திருக்கிறார் என்றே நமக்குத் தோன்றுகிறது. இந்த உன்னதத் தத்துவங்கள் இன்னும் எத்தனையோ யுகங்களுக்கும் இருந்தேயாக வேண்டுமென்றால், ராஜாஜியும் அவ்வளவு ஆண்டுகள் வாழத்தான் வேண்டும். ஆண்டுகளால் அளக்கக் கூடிய வாழ்வை வாழும் மானுடரல்ல ராஜாஜி. யுகங்களால் அளக்கவேண்டிய அமர தத்துவம் அவர். எனவே, ஆசாரிய வினோபா பவே அவர்களுடன் நாமும் ராஜாஜிக்குப் 'பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு' கூறுவோமாக!

ராஜாஜியின் பெருமைகளை எண்ணிப் பார்க்கவே நமக்கு மலைப்பாக இருக்கிறது. எத்தனையோ கொடுமுடிகளைக் கொண்ட இமயம் போல், பல துறைகளிலும் சிகரங்களைக் கொண்ட மகத்தான வாழ்வு அவருடையது. ஆத்மிகம் என்று ஒரு சிகரம்; அரசியல் என்று ஒரு சிகரம்; கலை என்று ஒரு சிகரம் — இப்படி எத்தனையோ. இமயச் சிகரங்கள் அநவரதமும் உருகி, ஆறுகளாகப் பாய்ந்து, மக்களுக்குப் பயன்படுவது போல் ராஜாஜி என்ற அறிவு மலைத் தொடரின் சிகரங்களும் அன்பில் உருகிப் பல்வகைத் தொண்டு நதிகளாக மாந்தரிடையே பாய்கின்றன. இவருக்கு இலக்கணம் கூறுவது இயலுமா?

ஒருவரைப் பற்றிச் சுருக்கமாகவும், அழகாகவும் வர்ணிக்க உதவுவது உவமைதான். இப்படி ராஜாஜியையும் பல மகாபுருஷர்களுடன் ஒப்பிடுகிறார்கள். வியாஸர், வால்மீகி, பீஷ்ம பிதாமகர் என்றெல்லாம் சொல்கிறார்கள். அவரே ஒருமுறை 'ஆட்சியாளர்களின் ஆணவத்தைப் பறித்த பரசுராமனாக இருக்க விரும்புகிறேன்' என்றார்.

ஆனால் இந்த உவமை எதுவுமே அவருக்குப் பூரணமாகப் பொருந்தவில்லை.

வியாஸரும், வால்மீகியும் தெய்வப் பணி மூலமே மனிதகுலத்துக்குப் பணி புரிந்த ஞானக் கவிகள். அவர்களுக்கு ஆட்சி விவகாரங்களில் புக வேண்டிய அவசியமிருக்கவில்லை. ஆனால் இறைவன் திரு உள்ளம் ராஜாஜியின் விஷயத்தில் வேறு விதமாக இருந்துவிட்டது. ஆத்மிகத்தில் ஊறிய அவர் அரசியல் சேவை புரிய வேண்டும் என்ற பிறவிப் பணி அவருக்கு ஏற்பட்டுவிட்டது. இதனால்தான் ராஜாஜியை எண்ணும்போது ஜனக மகாராஜரை எண்ணுவதும் உண்டு. ஆனால் ஜனகமகாராஜன் வாழ்ந்த யுகத்தில் இன்று போல் தீமையும், பொய்யும், சூதும், வாதும் இருக்கவில்லை. ராஜாஜியோ எல்லையில்லாத கொடும் சக்திகளை எதிர்த்துப் போராட நேர்ந்திருக்கிறது. பூர்வ


யுகத்தில் ஆட்சியாளர் இழைக்கும் கொடுமைகளைக் கண்டு கொதித்தார் பீஷ்ம பிதாமகர். ஆனாலும் இறுதி வரை கொடியோருடனேயே சேர்ந்து நிற்கும்படியாக அவருக்கு விதி இருந்தது. இந்த அம்சத்தில் ராஜாஜி பாக்கிய சாலி. தீமைகளுக்குக் காரணமானவர்களை விலக்கி, அவர்களிடமிருந்து பிரிந்து இன்று சத்திய தர்ம பராக்கிரமனாக அவர்களை எதிர்த்துப் போராடி மனச்சாட்சியை நிறைவு செய்துகொள்ளும் பாக்கியம் அவருக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால் பரசுராமனைப் போல் சுய காரியத்துக்காக அவர் எதிர்க்கவில்லை. பொது நலனுக்காகவே எதிர்ப்புப் பணி புரிகிறார்.

எனவேதான் ராஜாஜியுடன் வேறு யாரையும் ஒப்பிட முடியவில்லை. தெய்வப் புலவர் ஆண்டவனைத் 'தனக்குவமை இல்லாதான்' என்று கூறினார். ராஜாஜியையும் 'தமக்குவமை இல்லாதார்' என்றுதான் கூறவேண்டும்.


சில கட்சித் தலைவர்கள், நேருஜியைத்தான் காந்திஜி தமது வாரிசு என்று குறிப்பிட்டார் என்று கூறி, ராஜாஜியின் சுதந்திரக் கட்சி காந்தீயக் கட்சியல்ல என்ற மாபெரும் அபாண்டத்தைச் சென்ற தேர்தல் காலத்திலிருந்து விடாமல் வீசிவருகிறார்கள். இவர்களுக்குக் காந்திஜி ராஜாஜியைப் பற்றிக் கூறியதை நினைவூட்ட விரும்புகிறோம். 'ராஜாஜி எனது மனச்சாட்சியின் காவலர்' (Conscience-keeper) என்று அடிகள் கூறினார். தந்தையின் செல்வத்தை விரயமாக்கும் பிள்ளைகள் உண்டல்லவா? இன்று காந்திஜியின் வாரிசு அப்படித்தான் செய்து வருகிறார். அதனைக் கண்டித்து, காந்தியத்தின் காவலராக நிற்கிறார் ராஜாஜி.

நம் ஆசாரிய புருஷர்களைப் பற்றிச் சிலருக்கு ஒரு தப்பான அபிப்பிராயம் உண்டு: அவர்கள் அறிவு மட்டும் பெற்றவர்கள், அன்புள்ளம் பெற்றவரல்ல என்பதாக. ஆசாரிய புருஷர்களுடன் வைத்து மதிக்கத்தக்க ராஜாஜியைப் பற்றியும் இப்படி ஓர் அபிப்பிராயம் இருப்பது பொருத்தம்தானே?

உண்மை இதுதான்: மணமற்ற பூக்களைப் புஷ்பிக்கும் பலவகைச் செடிகள் பகட்டாகக் கொத்துக் கொத்தாகப்



ஊர் வம்பு



பூத்துக் கண்ணைப் பறிக்கும். ஆனால் சுகந்தம் வீசும் மல்லிகையும், மகிழம்பூவும், சம்பங்கியும் இலையடியில் அடக்கமாக மறைந்துதான் இருக்கும். உள்ளுணர்ச்சி என்ற மணம் கலவாத 'பேச்சாளர்கள்', தங்களுக்கு இல்லாத அன்பை வேஷம் போட்டுக் காட்டுவார்கள். அன்பே உருவானவர்களோ, நம் ஆலயங்களில் அன்புருவான ஆண்டவன் கருவறையில் தெரிந்தும் தெரியாமல் உறைவது போல விநயத்தில் குடிபுகுந்து வாழ்வார்கள்.

பேச்சை வைத்தா அன்பை மதிப்பது? தாய் தனது அன்பைக் குழந்தைகளிடம் ஓயாமல் பிரகடனம் செய்துகொண்டாயிருக்கிறாள்? ஆனால் அவள் செய்வதவ்வளவும் குழந்தைகளுக்குத்தானே? இன்று ராஜாஜி தமது எண்பத்தியாறுவது பிராயத்தில் ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கிப் போரிடுகிறார் என்றால் அது யாருக்காக? அவருடைய குழந்தைகளாகிய இந்த நாட்டு மக்களுக்குத்தானே! ராஜாஜி இப்போராட்டத்தில் வெற்றி காணத் தொடங்கிவிட்டார் என்பதைச் சமீபகால சுப சூசகங்கள் உணர்த்துகின்றன.

ராஜாஜி இந்நாட்டு மக்களுக்காக மட்டும் போராடவில்லை. உலக மக்கள் யாவருக்குமே போராடி, அணு ஆயுத நிறுத்தத்திலும் ஓரளவுக்கு வெற்றி கண்டிருக்கிறார்.

எனவே, இன்று நம் நாட்டவர் மட்டுமின்றி நானிலத்தார் யாவரும், 'சத்தியமேவ ஜயதே', என்ற மறைமொழி மெய்யானால் சத்தியத் திரு உருவாகிய ராஜாஜியும் விரைவில் பூரண வெற்றி காணவேண்டுமென ஆண்டவனைப் பிரார்த்திப்போம்!

போகிற போக்கில்...



நான்கு ஆண்டுகளுக்கு முன் இந்திய அரசியல் வானில் நல்லதொரு எதிர்க்கட்சி வருமா என்ற ஒரு கேள்விக் குறி மின் விட்டுக் கொண்டிருந்தது. அப்போதுள்ள நிலையில் நல்லதொரு எதிர்க் கட்சி வருவதற்கு மார்க்கமே இல்லை. எதிர்ப்பாளர்களெல்லாம் காங்கிரஸ் எந்தக் கொள்கையைக் கூறுகிறதோ அதே கொள்கையில்தான் போட்டி போட்டுக்கொண்டு சோஷலிஸ்டுகளாகவும், அதி சோஷலிஸ்டுகளாகவும், அதி தீவிர சோஷலிஸ்டுகளாகவும் காட்சி தந்து கொண்டிருந்தார்கள். இந்த நிலையில்தான் இருளைக் கிழித்துக் கொண்டு வெளிக் கிளம்பும் கதிரவனைப் போல் சுதந்திரக் கட்சி உருவாகியது. அப்போது, ''இருளை ஓட்ட வெளிச்சம் தேவை. இந்த வெளிச்சத்தை ஒரு சிறு தீக்குச்சிகூடச் செய்யும். இந்த மாதிரியான நெருப்புக் குச்சியாகத்தான் நான் வந்திருக்கிறேன். என்னுடைய இயக்கம் நல்லதொரு சமவெளியில் இயற்கை வளங்களோடு பயிர் செய்யப்பட்ட செடியாகும். இது தழைத்து வளர நீண்ட காலம் ஆனாலும் ஆகலாம்; ஆனால் இது நிச்சயமாக வளரும். இதனால் உண்மையில் பலனும் இருக்கும்'' என்று ராஜாஜி கூறினார். அது எப்படி முடியும் என்று சிலர் பேசினார்கள். அவர்கள் பேச்சைக் கேட்ட ராஜாஜி சிரித்துக் கொண்டார்.

அந்தச் சிரிப்புக்கு அர்த்தம் சில ஆண்டுகளில் தெரிந்தது. இரண்டு ஆண்டுகளில் பொதுத் தேர்தல் நடந்தது. லாபநஷ்டக் கணக்கு போட்டுப் பார்த்தபோது ராஜாஜி பெருமிதம் கொண்டார். பம்பாயில் அவர் பேசும்போது சொன்னார்: ''பாராளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாகவும், நான்கு மாநிலங்களில் வலுப்பெற்ற எதிர்க் கட்சியாகவும், இன்னும் பல மாநிலங்களில் ஓரளவுக்குப் பிரதிநிதித்துவம் பெற்றும் சுதந்திரக் கட்சி இருப்பதைக் கண்டு நான் பெருமிதம் கொள்கிறேன். எத்தனையோ கஷ்ட நஷ்டங்களுக்கு இடையில் இந்த அளவுக்கு வெற்றி கிடைத்தது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.'' இவ்வாறு அவர் கூறியதும் எழுந்த கரகோஷத்தைக் காது கொடுத்துக் கேட்ட ராஜாஜி அது அடங்கிய பிறகு சொன்னார்: ''எல்லாம் ஆண்டவன் செயல்'' என்று. ராஜாஜியின் தன்னடக்கத்தைக் கண்டு பேச்சைக் கேட்டு வந்த ஒரு பெரியவர் கண்ணீர் வடித்தார்.

அரும்பெரும் தேசபக்தர்

துரும்பென மெலிந்ததேகம், சோர்வறியாத ஊக்கம்,
சுயநலம் கருதாத்தன்மை, சுசிகர ஒழுக்கவாழ்க்கை,

இரும்பென வலியநெஞ்சம், எதிர்ப்புகட் கஞ்சாதீரம்,
இறைவனை மறவாபக்தி, இடித்துரைத் தறிவுகூறி

வரும்பொருள் உணர்த்தும் ஆர்வம் வாய்ந்தநல் காந்திசீடன்
வாழ்த்தினும் தாழ்த்தினாலும் களிப்பதும் வருந்தலில்லான்

அரும்பெரும் தேசபக்தர் அறிஞராம் ராஜாஜியை
ஆண்டவன் அருள்சுரந்து நீண்டநாள் காக்கவேண்டும்.



நாமக்கல் கவிஞர்

எந்தை வாழ்க!



நாட்டின் நலமே நினைப்பதன்றி
　　நாளும் பொழுதும் எக்காலும்
வீட்டின் நினைவோ தன்னலமோ
　　விழுடிப் போதும் எண்ணுதோன்
ஏட்டின் எழுத்தும் பேச்சுமெல்லாம்
　　எண்பத் தாறும் ஆண்டினிலும்
மூட்டும் வேகம் இளமையல்லால்
　　முதுமை அறியா மூர்த்தியவன்!

இந்த நாட்டின் தலைமகனாய்
　　இருந்த நாளில் எவ்வாறோ
அந்த விதமே இந்நாளும்
　　அகிலம் மதிக்க வாழ்ந்திடுவோன்
நிந்தை மொழியும் புகழுரையும்
　　நிகராய் ஏற்கும் மதியாளன்
விந்தை மேதை ராஜாஜி
　　வீறு கொண்டு வாழியவே!

எந்தை அனைய பரிவாளன்
　　எங்கள் ராஜ கோபாலன்
எந்த இடரும் வாராமல்
　　என்றும் இளமை குன்றாமல்
சிந்தை மகிழ்ந்தே எந்நாளும்
　　சிதம்பர நாதன் திருவருளால்
இந்த உலகில் நெடுங்காலம்
　　இனிது வாழ்க வாழ்கவே!

-சோமு-

மேல்நாடுகளின் கவனத்தை இன்று பரவலாகக் கவர்ந்திருக்கும் கட்சி சுதந்திரக் கட்சி ஒன்றுதான். அமெரிக்காவில் ரிபப்ளிக் கட்சிக்கும் டெமோகிராடிக் கட்சிக்கும் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார்களோ, தொழிற் கட்சிக்கும் கன்சர்வேடிவ் கட்சிக்கும் பிரிட்டனில் எவ்வளவு கவனம் செலுத்துகிறார்களோ அதே அளவுக்கு இந்தியா என்றால் காங்கிரஸ் கட்சி — சுதந்திரக் கட்சி எனக் கருத்துச் செலுத்திக் கணக்கும் போடுகிறார்கள்.

சர்வாதிகார நாடுகள் என்ன நினைத்துக் கொண்டிருக்கின்றன என்றும் பார்க்க வேண்டும். சுதந்திரக் கட்சியையும் அதன் தலைவரான ராஜாஜியைப் பற்றியும் பேசாத நாளெல்லாம் பிறவாத நாளெனப் பீகிங் ரேடியோ கருதுகிறது. ராஜாஜியைப் பற்றி மாஸ்கோ ரேடியோவும் விட்டு வைக்கவில்லை. நடுநிலைமைக் கொள்கையை அவர் சாடும் போதெல்லாம் இந்த ரேடியோக்கள் அலறுகின்றன. இக் கண்டனம் ஒன்றே போதும் எவ்வளவு சிறந்த கொள்கையை ராஜாஜி எடுத்து ஓதுகிறார் என்று அறிவதற்கு!

முன்னொரு சமயம் காந்திஜி சேவாக்கிராமத்தில் வாழ்ந்து வந்தபோது உடனே சில குறிப்புகள் வேண்டுமெனப் பம்பாய் பிரதேச காங்கிரஸ் கமிட்டிக்குத் தெரிவித்தார். கமிட்டியின் காரியதரிசி காகிதக் கட்டுக்களை எடுத்துக்கொண்டு வார்தாவுக்கு வந்தார். அங்கே கனமழை. ஆறுகளி லெல்லாம் ஒரே வெள்ளம். படகுக்காரர் யாரையும் காணவில்லை. காரியதரிசி தயங்கவில்லை. தம்மிடமிருந்த துணிகளால் காகிதக் கட்டை நன்றாகச் சுற்றிப் பத்திரப்படுத்திவிட்டு, ஆற்றில் நீந்தலானார். சேவாக்கிராமத்துக்குச் சென்று காந்திஜியிடம் குறிப்புகளை ஒப்புவித்தபோது அவற்றில் சிறிதுகூட ஈரமில்லை. காரியதரிசி தான் சொட்டச் சொட்ட நனைந்திருந்தார். இதைக் காணக் காந்திஜியின் உள்ளமும் நெகிழ்ச்சியால் நனைந்தது. இப்படிக் கடமை உணர்வை எடுத்துக் காட்டிய காரியதரிசி தான் சமீபத்தில் காலமான மகாராஷ்டிர முதன் மந்திரி கன்னம்வார் அவர்கள். காந்தியவாதிகள் யாவருக்கும் அவரது மறைவு பெரு நஷ்டமாகும்.

'சிட்டுக்குருவி'



1919-ம் ஆண்டு டிஸம்பரில் லோகமான்ய திலகர் சென்னைக்கு விஜயம் செய்தபோது எடுக்கப்பட்ட" இப் படத்தில் நாற்காலியில் உட்கார்ந்திருப்பவர்களில் வலமிருந்து இரண்டாவதாகக் காண்பவர்தான் ராஜாஜி. அவருக்குப் பக்கத்தில், படத்தின் வலக் கோடியில் அமர்ந்திருப்பவர் திரு. வி. க. திலகரின் வலதுபுறம் கஸ்தூரி ஸ்ரீநிவாசய்யங்காரையும், இடதுபுறம் பி. வி. நரசிம்மய்யரையும் காணலாம். இவ்வரிசையை அடுத்து நிற்பவர்களில் இடமிருந்து இரண்டாவதாகக் காண்பவர் கங்காதரராவ் தேஷ்பாண்டே. ஏழாமவர் டாக்டர் சுப்பராயன். மேல் வரிசையில் இடமிருந்து மூன்றாவது நபர் எம். எஸ். காமத். தரையில் அமர்ந்திருப்பவர்களில் இடமிருந்து இரண்டாவதாக ஜியார்ஜ் ஜோஸப். ஐந்தாவது நபர் சுதேசமித்திரன் ஸி. ஆர். ஸ்ரீநிவாசன். வலக்கோடியிலிருந்து இரண்டாமவர் (ராமாயணம்) வி. ஆர். ஸ்ரீநிவாச அய்யங்கார்.

குறிப்பாக எங்கள் பாப்ளின்கள், செண்ட்ஸ், வாயில்கள் போன்ற துணிகளில் அச்சிடப்பட்டுள்ள மனோகரமான பொட்டுப் பூவேலைகள் ஆடைகளை ஒரேயடியாக மாற்றிவிடுகின்றன. கணக்கற்ற கண்கவர் வர்ணங்களில் நவீன மோஸ்தரிலோ, பண்டைய பாணியிலோ எழில்மிகு ஸல்வார் கமீஸ் ஜோடிகள், புடவைகள், மற்றும் விளையாட்டுக்கான ஆடையணிகள் எதையுமே நீங்கள் உயரிய வகையில் அமைத்துக்கொள்ளலாம். ஸயாஜி மில்ஸ் அளிக்கும் பிரிண்ட் வகைகள் அழகிய அமைப்புடையவை. மீண்டும் மீண்டும் அவற்றை அணிய விரும்புவீர்கள்.

ஸயாஜி மில்ஸ் ந. 1 பரோடா
ஸயாஜி மில்ஸ் லிட், அஹமதாபாதின் ஒரு பிரிவு, சுபலக்ஷ்மி மில்ஸ் லிட், கேம்பே

பூவேலை ஆடையை ஒரேயடியாக மாற்றி விடுகின்றன!



SPY-8



35

மீண்டும் மீண்டும் பிறந்து இறந்து உழல்கிற வினைத் தொடரினின்று தப்புவதற்குரிய மார்க்கத்தை உபதேசிக்கிறார் ஆழ்வார்.

ஓர்த்த மனத்தராய்
  ஐந்தடக்கி ஆராய்ந்து
பேர்த்தால் பிறப்பேழும்
  பேர்க்கலாம்—

[ஓர்த்த மனத்தராய் - விஷயங்களை நீக்கி இறைவனோடு ஒன்றி நிற்கிற மனத்தோடு கூடியவராய். ஐந்தடக்கி - ஐம்புலன்களையும் அடக்கி. ஆராய்ந்து பேர்த்தால் - விஷயங்களின் தோஷங்களைக் கண்டு, அவற்றின்மீது செல்லும் இச்சையைப் பேர்த்து எடுத்து விட்டால். பிறப்பேழும் பேர்க்கலாம் - ஏழு ஜன்மங்களையும், அதாவது பிறவித் துன்பத்தைக் கடந்துவிடலாம்.]

—கார்த்த
விரைஆர் நறுந்துழாய்
  வீங்கோத மேனி
நிரைஆர மார்வனையே
  நின்று

[கார்த்த - கரிய நிறம் கொண்ட. விரை ஆர் - வாசனை பொருந்திய. நறும் துழாய் - திருத்துழாய் தரித்த. வீங்கோத மேனி - பொங்கும் கடல் போன்ற திருமேனி கொண்ட. நிரைஆர மார்வனையே-வனமாலை அணிந்த மார்பனாகிய சர்வேசுவரனை. நின்று-ஸ்திரமாக மனத்திற்கொண்டு]

கடல் போன்ற மேனியுடையவனும், மார்பில் வனமாலை விளங்கும் பெருமானுமாகிய திருமாலை ஐம்புலன்களை அடக்கி ஏகாக்ரசித்தத்தோடு தியானித்து நின்றால் பிறவித் துன்பத்திலிருந்தும் விடுபடலாம்.

ஐம்புலன்களின் வழியே சென்று விஷயங்களைப் பற்றிக்கொள்ளும் சித்தத்தைப் பேர்த்து எடுத்து இறைவனிடம் ஒன்றச் செய்தோமானால் அது பிறவித் துன்பத்தைப் போக்கும் உபாயம்.

ஓர்த்த மனத்தராய்
  ஐந்து அடக்கி ஆராய்ந்து
பேர்த்தால் பிறப்பேழும்
  பேர்க்கலாம்— கார்த்த
விரைஆர் நறுந்துழாய்
  வீங்கோத மேனி
நிரைஆர மார்வனையே
  நின்று.




det
Swastik

உலகப் பெருந் தலைவரில் ஒருவர்

பி. சிவராவ்

சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம். டிரான்ஸ் — அட்லாண்டிக் விமானமொன்றில் ராஜாஜிக்குப் பக்கத்தில் அமர்ந்திருக்கிறேன். அணு ஆயுத சோதனையை நிறுத்தக் கோரும் சமாதான தூதுகோஷ்டியினராக நாங்கள் செல்கிறோம். அப்போது நான் என் மனத்துக்குள் இந்தத் தூது வெற்றி பெறும் வாய்ப்புக்களைப் பற்றிச் சிந்திக்கிறேன். ராஜாஜியுடன் நான் செல்லும் இந்தத் தூதுப் பணியைப் பற்றி மட்டும்தான் சிந்தித்தேனா? இல்லை. இதற்கு முன், ஒரு நாற்பத்தைந்து ஆண்டுக் காலமாக, தேச விடுதலைப் போராட்டத்தின் பல கோணங்களில் எங்கள் இருவரையும் விசித்திரமான தெய்வ சங்கல்பம் எத்தனை சந்தர்ப்பங்களில் பிணைத்து வைத்தது என்பதை யெல்லாம் சிந்தித்துப் பார்க்கிறேன்.


ஃ முதல் உலக மகாயுத்தம் நடந்து கொண்டிருந்த சமயம் அது. அப்போதுதான் சென்னை கோகலே மன்ற மேடையில் நான் ராஜாஜியை முதன் முறையாகக் கண்டேன். 'ஹோம்ரூல்' எனப்படும் சுயாட்சி இயக்கம் மக்களைத் தங்கள் பழைய பொந்துகளிலிருந்து வெளிப்படச் செய்து, அவர்கள் கிளர்ச்சி மிகுந்த பொது வாழ்வில் ஈடுபடுமாறு தூண்டிய காலம் அது. யுத்தம் முடிந்த பின் பாரதம் சுதந்திரம் பெறும் என்ற அகக் கண்காட்சியில் அப்போது பலருடைய உள்ளத்தின் ஆழத்திலிருந்து உணர்ச்சிகள் கொந்தளித்துக் கொண்டிருந்தன. ஆனால் இதோ சென்னை கோகலே மன்ற மேடையில் நான் காணும் இந்த மனிதர் மட்டும் உணர்ச்சி வசப்படாமலே சுயாட்சி இலட்சியத்தை அணுகுகிறார். ஆகா, அசாதாரண முறையில் பிரச்னைகளைப் பகுத்துப் பார்க்கும் இவரது கூரிய அறிவை என்னவென்பது !

ஃ யுத்தமும் முடிந்தது. யுத்தத்தின் முடிவும் காந்திஜி காங்கிரஸின் தலைமையை எய்தியதும் ஏககாலத்தில் நிகழ்ந்தன. அமிருதசரஸ் துயர நிகழ்ச்சிக்குப் பின் ஏற்பட்ட அரசியல் சர்ச்சையில் நானும் ராஜாஜியும் ஒருவரிடமிருந்து மற்றவர் ஓரளவுக்கு விலகி விட்டோம்.* காந்திஜியின் காந்த சக்தியில் ராஜாஜி ஆகர்ஷிக்கப்பட்டார். அவரோடும், அவரது கொள்கைகளோடும் நெருக்கமாக இணைந்தார். ராஜாஜியைவிட மிகவும் எளிய பாகம் ஏற்ற நானோ ஸ்ரீமதி பெஸண்டிடம் கொண்டிருந்த விசுவாசத்தில் உறுதியாக நின்றேன். இருந்தாலும் எங்கள் இருவரையும் பிணைத்து வைக்கும் ஒரு விந்தையான சங்கிலியாக இருந்தார் ஜார்ஜ் அருண்டேல் என்ற அன்பு உள்ளம் படைத்த ஆங்கிலேயர். நட்புக்கள் பூணுவதில் அலாதியான திறமை பெற்றிருந்த அருண்டேலும் நானும் ஸ்ரீமதி பெஸண்ட் அம்மையாரின் 'நியூ இந்தியா' பத்திரிகையில் பணி செய்த நேரம் போக எஞ்சிய பொழுதில் சென்னையின் தொழிலாளர்களுக்கு ஒரு சங்கம் அமைப்பதில் ஈடுபட்டிருந்தோம். ராஜாஜி எவ்வாறோ — எவ்வாறு என்பது எனக்கு நினைவு வரவில்லை — இந்தப் பணியில் ஈடுபாடு கொண்டார். நாங்கள் அடிக்கடி பெரம்பூருக்குச் சேர்ந்து செல்வோம். ரயில்வே தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளிகளுக்கிடையே கூட்டம் போட்டுப் பேசுவோம். அரசியல் நோக்கத்தில் எங்களுக்கு இருந்த மாறுபாடு அப்போது ஒரு பொருட்டாகவே இல்லை. அப்போது ராஜாஜிக்கும் அருண்டேலுக்குமிடையே ஏற்பட்ட நல்லுறவு என்னையும் பற்றிக் கொண்டது. அவ்வாறு ஏற்பட்ட ஆதிகாலத்துத் தொடர்பு என்னுடைய உள் மனத்தில் ஆழப் பதிந்திருக்க வேண்டும்!

ஃ சில ஆண்டுகளுக்குப் பின், ஸைமன் கமிஷனைப் பகிஷ்காரம் செய்து காங்கிரஸ் நடத்திய இயக்கம் இடர்ப்பாடுகள் உற்றது. 1928-ம் ஆண்டில் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டுக்கு ஸ்ரீமதி பெஸண்டும் நானும் சென்ற அதே ரயிலில் ராஜாஜியும் வந்தார். வழியில் ஏதோ ஒரு ஸ்டேஷனில் ராஜாஜி என்னிடம் ஒரு யோசனை சொன்னார். சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்துவதால் பொதுமக்கள் உணர்ச்சி வசப்பட்டு விடு

---

* உலக மகாயுத்தத்தின் இறுதிக்காலத்திலிருந்து டாக்டர் பெஸண்டு அம்மையார் மிதவாதியாகி விட்டார். காந்தியடிகளோ, சுதந்திர இயக்கங்களை அடக்க உதவும் ரவ்லட் சட்டத்தை எதிர்த்துச் சத்தியாக்கிரகம் செய்வது, பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் படிப் படியாக ஒத்துழையாமை புரிவது முதலிய திட்டங்களைச் செயல்படுத்தி வந்தார். கட்டுரை ஆசிரியர் டாக்டர் பெஸண்டையும், கட்டுரையின் நாயகரான ராஜாஜி காந்திஜியையும் பின்பற்றினர். ரவ்லட் சட்டத்தை எதிர்த்து நாடெங்கும் சத்தியாக்கிரகம் நடந்தபோது அமிருதசரஸ் ஜாலியன் வாலாபாக் தோட்டத்தில் பிரிட்டிஷ் ஆட்சியாளர் நடத்திய பீரங்கிப் பிரயோகத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.



ராஜாஜியுடன் சிவராவ்

வார்கள் என்று ஸ்ரீமதி பெஸண்ட் கொண்டிருந்த பயத்தைக் கைவிடும்படி அவரை நான் ஊக்க வேண்டும் என்றும், இதன் மூலம் காந்திஜியும் ஸ்ரீமதி பெஸண்டும் ஒன்று சேர்ந்து ஸைமன் கமிஷன் பகிஷ்காரத்துக்குப் புத்துயிர் ஊட்ட முடியும் என்றும் ராஜாஜி கூறினார்.

கல்கத்தாவில் நானும் ஸ்ரீமதி பெஸண்டும் தங்கியிருந்தபோது நான் அம்மையாரிடம் ராஜாஜியின் யோசனைக்கேற்ப வாதம் செய்தேன். தனிப்பட்ட பயிற்சி பெற்ற ஒரு சிலர் மட்டும், ஒரு சில சட்டங்களுக்குப் படிய மறுக்கும் முறையில் சட்ட மறுப்பு நடத்தினால் ஸ்ரீமதி பெஸண்ட் அதற்கு இணங்கக் கூடும் என்று தோன்றியது. காந்திஜியையும் ஸ்ரீமதி பெஸண்டையும் சந்திக்கச் செய்யுமளவுக்கு நான் வெற்றி பெற்றுவிட்டதாக எண்ணினேன். ஆனால் என் நம்பிக்கை அற்ப ஆயுளில் மடிந்து விட்டது. தாற்காலிகமாக ஒப்பந்தம் காண நான் வகுத்திருந்த வழியும் ஆபத்தானதே என்று ஸ்ரீமதி பெஸண்ட் கருதத் தொடங்கி விட்டார். என் முயற்சி தோற்றுவிட்டது. மீண்டும் என் பிரயாசைக்குப் புனர்வாழ்வு தருவதில் பயனிராது என்று நான் ராஜாஜியிடம் வருத்தத்துடன் தெரிவித்தேன்.



வாழ்க்கை முழுதும் சத்தியமும், தர்மமும் பழுதுபடாமல் எல்லாவித விவகாரங்களும் நடைபெற வேண்டும். இல்லாவிடில் வாழ்க்கையில் தோல்வியடைவோம். சத்தியமும் தர்மமும் புறக்கணித்த அரசியலாவது வியாபாரமாவது வெற்றி யடையாது.

☆ மேலும் சுமார் பத்து ஆண்டுகள் ஓடின. முற்றிலும் மாறுபட்ட ஒரு சூழ்நிலையில் ராஜாஜியும் நானும் மீண்டும் ஒன்று சேர்ந்தோம். 1937ம் ஆண்டு இளவேனிற் காலத்தில் நடைபெற்ற தேர்தல்களுக்குப் பிறகு கவர்னரின் விசேஷ அதிகாரங்களைப் பற்றி ஒரு சர்ச்சை எழுந்தது. இந்தச் சர்ச்சையில் ஒரு முடிவும் ஏற்படாமல் முறிவு ஏற்படுமெனத் தோன்றியது. பேச்சு முறிந்து போகாமல், 1935-ம் வருஷத்திய அரசியல் சாஸனத்துக்கு உட்பட்டு, காங்கிரஸ் பெரும்பான்மை ஸ்தானங்கள் பற்றியிருந்த மாகாணங்களில் அது மந்திரி சபை அமைக்கவும், அதன் சமூக, பொருளாதாரச் சீர்திருத்தத் திட்டத்தை அமுல் செய்வதில் நியாயமான அளவுக்கு கவர்னர்கள் தலையிடாமல் இருக்கவும் உபாயம் காணமுடியுமா என்று தலைவர்கள் விசாரப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

அப்போது நான் 'ஹிந்து', 'மாஞ்செஸ்டர் கார்டியன்' ஆகிய பத்திரிகைகளுக்குப் புதுதில்லி நிருபராக இருந்தேன். ராஜாஜியுடன் மேற்சொன்ன விஷயமாக விவாதித்துவிட்டு இவ்விரு பத்திரிகைகளுக்கும் ஒரே மாதிரி செய்தியை அனுப்பி வைத்தேன். நான் விவரத்தைப் புரிந்து கொண்டிருந்த முறையிலிருந்து, முட்டுக்கட்டை ஏற்படாமலிருப்பதற்கு உதவக் கூடிய ஒரு யோசனையை வெளியிட்டிருந்தேன். சுமார் இரண்டு வாரங்களுக்கு அப்புறம் வைஸ்ராயின் மாளிகைக்கு வருமாறு எனக்கு டெலிபோன் செய்தி வந்தது. நான் சென்றேன். சம்பிரதாய உபசாரங்களில் பொழுதைக் கழிக்காமல் லின்லித்கோ பிரபு நேரடியாக விஷயத்துக்குவந்தார். 'மான்செஸ்டர் கார்டியனில்' வெளியாகியிருந்த என் குறிப்பைப் பற்றிப் பேசியவாறு தமது தஸ்தாவேஜிகளிலிருந்து ஒரு செய்தித்தாள் துணுக்கை எடுத்தார். அதை என் முன் ஆட்டியபடியே, ''இந்தியா மந்திரியான ஜெட்லண்ட் பிரபு இதை எனக்கு அனுப்பியிருக்கிறார். இந்த யோசனையின் அடிப்படையில் மந்திரி சபை அமைக்குமாறு மிஸ்டர் காந்தி காங்கிரசுக்கு நல்லுரை சொல்லுவார் என்று நீங்கள் கூறியிருக்கிறீர்கள் அல்லவா? எந்த உறுதியின் பேரில் நீங்கள் இப்படிக் கூறியிருக்கிறீர்கள் என்று விசாரிக்குமாறு ஜெட்லண்ட் எனக்கு எழுதியிருக்கிறார்'' என்றார் ராஜப் பிரதிநிதி.

''இந்தச் சூத்திரத்தின் கர்த்தா ராஜாஜி தான். அவருக்குக் காந்திஜியின் உள்ளம் எப்படிச் செயல்படுகிறது என்று தெரியும்'' என்றேன் நான்.

''ஓ, அப்படியா? இது ராஜாஜியின் யோசனை எனில் முற்றிலும் வேறு விஷயமாகும்'' என்றார் லின்லித்கோ பிரபு.

இந்தப் பேட்டியின் விளைவாக நான் முன்திட்டம் ஏதுமின்றிக் காந்திஜியைக் காணச் சென்றேன். அப்போது காந்திஜி பெல்காம் மாவட்டத்தில் ஏதோ ஒரு கிராமத்திலிருந்தார். நான் காந்திஜியைக் கண்டபின் ராஜாஜியினது யோசனையின் அடிப்படையில் ஓர் அறிக்கை தயாராயிற்று. வார்த்தைகளை சர்வ ஜாக்கிரதையாக உபயோகித்து உருவான இந்த அறிக்கையின் முடிவாகத்தான் காங்கிரஸ் கட்சியானது மந்திரி சபைகள் அமைக்க ஒப்புக் கொண்டது.

☆ இரண்டாம் உலக யுத்தம் மூண்டபோது பிரிட்டிஷ் சர்க்காருக்கும் காங்கிரசுக்கும் இடையே தீவிரமான மன வேற்றுமைகள் ஏற்பட்டன. 1939ம் ஆண்டு இறுதியில் நான் லின்லித்கோ பிரபுவிடம் அவர் தமது நிர்வாகக் குழுவில் (Executive Council) உண்மையான மக்கள் தலைவர்கள் சிலரைச் சேர்த்துக் கொண்டு அதனைப் புனர் நிர்மாணம் செய்ய வேண்டுமென வலியுறுத்தினேன்.

''நீங்கள் யார் யாரைச் சேர்க்கலாம் என்கிறீர்கள்?'' என்று கேட்டார் ராஜப் பிரதிநிதி.

''ராஜாஜியையும், பண்டித கோவிந்த வல்லப பந்தையும்'' என்றேன். அதைவிட



தந்தை ராஜாஜிக்கு
அநேக நமஸ்காரங்கள்
பல்லாண்டு பல்லாண்டு
பல்லாயிரத்தாண்டு
வாழ்க."
விநோபாவின்
ஜய் ஜகத்
18.11.1963

சிலாக்கியமான தேர்வு இருக்க முடியாது என்று கருதினேன்.

வைஸ்ராய் சொன்னார்: ''எல்லாக் காங்கிரஸ் தலைவர்களும் இவர்களைப் போலவே இருந்து விட்டால் எனக்கு ஒரு பிரச்னையும் இராது. யுத்தம் நடக்கும் சமயத்தில் வாரத்துக்கொரு நெருக்கடியை உண்டாக்கக் கூடியவர்களை அரசாங்கத்தில் நான் எப்படி வைத்துக் கொள்ள முடியும்?''

ஃ 1942-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், சர்ச்சில் சர்க்காரின் சார்பில் ஸர் ஸ்டாஃபோர்ட் கிரிப்ஸ் தமது பிரசித்தி பெற்ற திட்டத்துடன் இந்தியாவுக்கு வந்தபோது ராஜாஜி காங்கிரஸ் தலைவர்களில் தனித்து ஒருவராக நின்றார். * கிரிப்ஸ் நடத்திய பேச்சு வார்த்தைகளில், யுத்தப் பாதுகாப்பு விஷயமாகப் பேதக் கருத்துக்கள் நிலவியதால், ஆரம்ப நிலையிலேயே பேச்சு முறிந்தது.

ஒரு நாள் காலை கிரிப்ஸ் என்னிடம், ''எனக்கு ஒரு வழியும் தெரியவில்லை. ஸாப் ரூ, ராஜாஜி, பி. என். ராவ் மூவரையும் கூட்டி ஒரு சமரஸத் திட்டம் வகுக்க முயல்கிறீர்களா?'' என்று கேட்டார்.

அன்றிரவே மேற்சொன்னவர்களுடன் ஸ்ரீ வி. பி. மேனனும் சேர்ந்து சில மணிநேரம் விவாதித்தோம். அதன் பயனாக யுக்தமான ஒரு திட்டம் உருவாயிற்று. மறுநாள் காலை அந்தத் திட்டத்தைப் பெற்ற கிரிப்ஸ் மிகவும் நன்றி தெரிவித்தார். திட்டத்தினால் திருப்திகரமான முடிவு ஏற்படும் என்றே ராஜாஜியும் நம்பினார். ஆனால் அப்படி நடைபெறவில்லை. பிரிட்டிஷ் சர்க்காருடனோ, முஸ்லிம் லீகுடனோ எவ்வித சமரஸமும் செய்து கொள்ள மற்ற காங்கிரஸ் தலைவர்கள் இசையவில்லை.

ஃ கிரிப்ஸின் தூது தோல்வியுற்றபின் ராஜாஜிக்கும் அவரது காங்கிரஸ் சகாக்களுக்கும் கருத்து மாறுபாடுகள் அதிகரித்தன. மகாயுத்தத்தில் பிரிட்டன் தத்தளித்துக் கொண்டிருந்த போது, ''வெள்ளையனே, வெளியேறு'' என்பதாக இயக்கம் நடத்துவதை ராஜாஜி அங்கீகரிக்கவில்லை. 'பாதாள'த் தொண்டர்களின் உற்சாக மிகுதியில் நடைபெற்ற நாச வேலைகளைக் கண்டு அவர் ஆழ்ந்த வேதனை கொண்டார். எனினும், யுத்த காலம் முழுவதிலும், மேடைக்குப் பின்னிருந்தபடியே சமரஸம் காணுவதில் அவர் முனைந்து செயலாற்றி வந்தார். அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டின் விசேஷ தூதராகப் புதுதில்லியில் பணியாற்றிய வில்லியம்

* பாகிஸ்தான் பிரிவினைக் கோரிக்கையை இதர காங்கிரஸ் தலைவர்கள் ஆதரிக்காத காலம் அது. ராஜாஜி ஒருவரே எப்படியும் பாகிஸ்தான் ஏற்பட்டுத்தான் தீரும் என்பதை உணர்ந்து முஸ்லிம் லீகுடன் சமரஸம் செய்து கொண்டு, சுதந்திரம் பெற முயல வேண்டும் என அப்போது கூறி வந்தார். பிரிட்டன் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள அந்தச் சமயத்தில் காங்கிரஸும், முஸ்லிம் லீகும் விவேகமாக நடந்து கொண்டால் சுதந்திரம் பெற முடியும் என்று ராஜாஜி கூறியதற்கும் மற்றவர்கள் இணங்காமல் கிளர்ச்சிகளைப் பற்றி நினைத்து வந்த சமயம் அது.

கிபிலிப்ஸ் கருப்படியான யோசனைகளைச் சொல்லும் தலைசிறந்த ஓர் அரசியல்வாதி ராஜாஜி என மதித்து, அவரது முடிவு களையே பெரும்பாலும் ஏற்று வந்தார். (வில்லியம் ஃபிலிப்ஸைச் சென்ற ஆண்டு ஹார்வர்ட் சர்வகலாசாலை விழாவில் சந்திக்கும் நல் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது.)

•

ஃ இதன்பின் பத்தாண்டுகளுக்கு மேலாக நான் ராஜாஜியுடன் கொண்டிருந்த தொடர்பு மிகவும் குறைந்து விட்டது. 1962-ம் ஆண்டு கோடையில் புதுதில்லியில் நடைபெற்ற அணு ஆயுத எதிர்ப்பு மகாநாடு தான் எங்களை ஒன்று சேர்த்தது — புதியதொரு துறையில் ஒன்று சேர்த்தது. காந்தி சமாதானக் கழகத்தின் சார்பில் இந்தியாவிலிருந்து ஒரு தூதுகோஷ்டி செல்ல வேண்டும் என்று நான் அப்போது யோசனை தெரிவித்தேன். அது உடனே ஆமோதிக்கப்பட்டது என்றாலும் சில மாதங்கள் ஆகும் வரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. ராஜாஜியைத் தூதுகோஷ்டியின் ஓர் அங்கத்தினராக இருக்குமாறு அழைத்திருக்கிறார்கள் என்று நான் செப்டம்பர் மாதத்தில் கேள்விப் பட்ட போது அது என் மனத்துக்கு உகந்த ஓர் அதிசயமாக இருந்தது. நான் இல்லாமல் அவர் செல்ல விரும்ப வில்லை என்றும் சொல்லப்பட்டது. மேற்குநாடுகளுக்கு ஒரு தூதுகோஷ்டியும், மாஸ்கோவுக்கு இன்னொன்றுமாகச் செல்ல இருந்ததால் பயன் விளையும் என்பதில் அவருக்கு நம்பிக்கையில்லை.

எனினும் ராஜாஜி இல்லாமல் தூதுகோஷ்டிக்குப் போதிய அந்தஸ்து இருக்காது என்று கருதப்பட்டது. அவரை மேல்நாட்டு யாத்திரைக்கு இணக்குமாறு நான் சென்னைக்கு அனுப்பப்பட்டேன். மகத்தான இடுக்கண்களை மீறித் தூதுகோஷ்டியால் வெற்றி காண்பது சாத்தியமா என்பது பற்றி ஆலோசித்தோம். வெற்றிக்கான சாத்தியக் கூறுகள் மிகவும் எட்டியே உள்ளன என்பதை நான் ஒப்புக் கொண்டேன்.

'இருந்தாலும் ஒரு முயற்சியைச் செய்து பார்ப்பதில் தவறில்லை. தூதுகோஷ்டியால் இந்தியாவுக்கு உலகின் நல்லெண்ணம் என்ற நிதியத்தைப் பெற்றுத் தர முடியும் என்று நம்புகிறேன். இதற்காக மனித சக்தியையும் பணச் செலவையும் தந்து பார்க்கலாமே!' என்றேன் நான். ராஜாஜி இணங்கினார்.

நான் ஆச்சரியமடைந்தேன் என்பதை ஒளிக்காமல் சொல்கிறேன்.

ஃ உடனடியாகப் பலன் காணாவிடினும்; ஸ்தூலமாகப் பலன் பெறாவிடினும், எங்கள் தூதுகோஷ்டி ஒரு நிரந்தரமான நல்லபிப்பிராயத்தை எப்படியேனும் பதிவு செய்யும் என்று உள்ளூற நான் நம்பினேன். இந்த நம்பிக்கைதான் வாஷிங்டனிலும், நியூயார்க்கிலும், லண்டனிலும் எங்கள் அலுவலின் போதெல்லாம் தெம்பளித்தது. தினந்தோறும் நாங்கள் கண்ட விளைவுகளிலிருந்து என் நம்பிக்கை வலுப் பெற்று வந்தது.

நாங்கள் வாஷிங்டன் சென்ற அன்று, ஜனாதிபதி கென்னடியின் பேட்டிக்காக எங்கள் கார் வெள்ளை மாளிகையின் வெளி வாயிலுக்குள் நுழைந்த போது ராஜாஜி என் பக்கம் திரும்பினார். அவர் பார்வையில் நம்பிக்கையின்மையின் சாயல் தெரிந்தது.

''நான் களைத்திருக்கிறேன். கென்னடி அவர்களிடம் என்ன சொல்லப் போகிறேன் என்பதே தெரியவில்லை'' என்றார்.

''எல்லாம் நல்லபடியாகும்; கவலைப்பட அவசியம் இல்லை'' என்றேன் நான்.

நான் சொன்னது எவ்வளவு சரியாகப் போயிற்று!

முப்பத்தைந்து நிமிஷங்களுக்குக் கென்னடி ராஜாஜி பேசுவதைக் கேட்டுக் கொண்டே உட்கார்ந்திருந்தார்.

இந்த முதுமகனார் சகல ஜீவராசிகளின் சார்பிலும் விடுத்த வேண்டுகோளின் ஆழ்ந்த அந்தரங்க சுத்தத்தில் கென்னடி அப்படியே வசியமாகி விட்டார்.

சர்ச்சைக்கு இடமளித்த பாதாளச் சோதனையை நீக்கி, மற்றச் சோதனைகளை ரத்து செய்யும் விஷயத்தில் வல்லரசுகள் உடன்பாடு காண வேண்டும் என்பதே ராஜாஜி அளித்த சூத்திரம். உடனடியாக இப்படி ஓர் உடன்பாடு காண முடியும் என்ற நம்பிக்கை கென்னடியைச் சந்தித்த பின் எங்களுக்கு ஏற்பட்டது. 1962-ம் ஆண்டு இறுதிக்குள் உடன்படிக்கை ஏற்படும் என்ற நன்னம்பிக்கை ஓங்க நியூயார்க்குக்குச் சென்றோம். அங்கு பிரான்ஸின் வெளி நாட்டு மந்திரியைக் கண்டு பேசியவுடன் அந்நாட்டின் மனப் போக்கும் சாதகமாகத் திரும்பக் கூடியதே என்று தெளிந்தோம். எல்லாருக்கும் மேலாக ருஷ்ய வெளிநாட்டு மந்திரி குரோமிகோ அவர்கள் விட்டுக் கொடுத்துப் பேசியது ஆச்சரியமாக இருந்தது.

ஃ இவ்வருடம் ஜூலை மாதத்தில் ஸோவியத் யூனியன், பிரிட்டன், அமெரிக்கா ஆகியவை அணுசோதனை ரத்து விஷயமாக உடன்படிக்கை செய்து கொண்டதைப் பற்றிப் பத்திரிகைச் செய்திகளைப் பார்த்த போது என் எண்ணங்கள் தம்மையறியாமல் ராஜாஜியிடம் சென்றன.

சென்ற ஆண்டு நாங்கள் தூதுப் பணி புரிந்த பதினைந்து நாட்களின் பலப் பல சந்திப்புகளில் ராஜாஜியைச் சந்தித்த தலைவர்களில் யாராவுமே, அணுப் போரின் பயங்கரத்திலிருந்து மனித குலத்தைக் காப்பதற்காக ஓர் எண்பத்தைந்தாண்டுத் தொண்டு கிழவர் சாந்தித் தூது சென்றதை மறக்க முடியாது.

பூரண வெற்றி காண இன்னும் எவ்வளவோ நடந்தாக வேண்டி யிருக்கிறது. ஐ. நா. பொதுச் சபையிலும், ஜினீவா ஆயுத பரிகரண மகாநாட்டிலும் விவாதிக்கப்பட விருக்கும் சிக்கலான பிரச்னைகளைத் தீர்க்க எல்லையற்ற பொறுமையும், புத்தித் திட்பமும், மனித குலத்திடம் நன்னம்பிக்கையும் தேவைப்படுகின்றன. இந்தச் சபைகளுக்கு இந்தியாவின் பிரதிநிதியாக ராஜாஜி சென்றிருந்தால் மிகவும் சிறந்த தேர்வாக இருந்திருக்கும். அப்படி ஒரு வாய்ப்புக் கிட்டா விடினும், ராஜாஜி இது வரையில் ஆற்றியுள்ள பணிகளுக்காகவே அவர் உலகப் பெரும் தலைவர்களில் உன்னதமான ஒரு ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறார்.



CFY- 9-TAM.



காட்பரீஸ்
மில்க் சாக்கலேட்

மிட்டாய் மட்டுமல்ல... ஒரு உணவும் கூட!

ஜனநாயக உணர்வின் உருவகம்

கே.எம்.முன்ஷி

மகாத்மா காந்திக்கு அத்தியந்தமாயிருந்த பெருந் தலைவர்களில் பெரும்பான்மையோரிடம் பரஸ்பர அன்பு கொள்ளும் பாக்கியம் எனக்குண்டு. அவர்களில் ராஜாஜியும், ஸர்தார் பட்டேலும் பல்லாண்டுகளாக எனக்கு மிகவும் அன்பானவர்கள்.

1930ல் அலகாபாத்தில் காங்கிரஸ் தலைவர்கள் கூடி விவாதித்த யோசனைகள் பின்னர் காந்தி - இர்வின் ஒப்பந்தம் ஏற்பட அடிப்படையாயின. இக் கூட்டத்துக்குச் சென்று கொண்டிருந்த நான் ஜான்ஸியில் ரயில் மாறினேன். இதே போல் சென்னையிலிருந்து வந்த பல பிரயாணிகளும் ரயில் மாறினார்கள். அவர்களில் ராஜாஜி ஒருவர். நாங்கள் அப்போதுதான் முதன் முதலாகச் சந்தித்தோம். அன்றிலிருந்து அவரது நட்பையும் நம்பிக்கையையும் பெறும் கௌரவம் எனக்கு உள்ளது. பல இக்கட்டான சந்தர்ப்பங்களில் ராஜாஜி ஒரு சக்தி மலையாக இருந்து எனக்குத் தெம்பூட்டியிருக்கிறார்.

ராஜாஜியை இந்திய அரசியலின் பீஷ்ம பிதாமகர் எனலாம். இந்த முதுபெரும் தலைவர் உன்னதமான தார்மிக சிந்தனையாலும், ஆத்மிக உணர்வாலும் தூண்டப்பட்டுச் சந்நியாச வாழ்க்கை வாழ்ந்து வருகிறார். அவருடைய தீரம் அளவிட முடியாதது. அவரது வியத்தகு நிலை குலையாமையின் உள்ளே அன்பு இதயம் ஒன்று துடித்துக் கொண்டிருக்கிறது.

மக்களைப் பற்றியும் பிரச்னைகள் பற்றியும் ராஜாஜி போல் உள் நோக்கு பெற்ற இன்னொரு தலைவரை நான் கண்டதில்லை. ஒரு விநாடிப் பழக்கத்திலேயே அவர் ஒருவரின் பலத்தையும், பலவீனத்தையும் கணித்து விடுவார். திறந்துள்ள புத்தகத்தைப் படிப்பது போல் பிறருடைய உள்நோக்கங்களை எளிதில் படித்துவிடுவார் ராஜாஜி.

சாதுரியமும் தந்திரமும் மிக்க சாணக்கியர் அவர் என்பதாகச் சிலர் மேலெழுந்தவாரியாகச் சொல்வதுண்டு. அவர் தந்திரசாலியல்ல. தமது சகாக்களை யெல்லாம்விட அவர் அறிவில் மிக மிக உயர்ந்தவர் என்பதுதான் உண்மை. இதனால் மற்றவர்களை விடப் பிரச்னைகளை அவரால் தெளிவாகக் காண முடிகிறது. இதைச் சாமானிய அரசியல்வாதியால் சகித்துக் கொள்ளவோ, மன்னிக்கவோ முடிவதில்லை. தமது தெளிந்த தீர்க்க தரிசனம் காரணமாகவே கஷ்டங்களைக் கண்டிருக்கிறார் ராஜாஜி. ஆனால் இதற்காக அவர் ஒருபோதும் வருந்தியதில்லை.

முஸ்லிம் லீகின் தூண்டுதலின் கீழ் 1942ல் பாகிஸ்தான் அமளிகள் நடந்தபோது நான் காந்திஜியிடமிருந்தும் காங்கிரஸிலிருந்தும் பிரிந்து சென்று, 'அகண்ட ஹிந்துஸ்தான்' இயக்கத்துக்குப் பொது மக்கள் ஆதரவைத் திரட்டுவதற்காக நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்தேன். தேச ஐக்கியத்தைக் காப்பாற்றியே தீருவது என்று அப்போது காங்கிரஸ் பிரதிக்ஞை பூண்டிருந்தது. காந்திஜியோ தமது சடலத்தின் மீதுதான் பாகிஸ்தான் தோன்ற முடியும் என்றார். பாகிஸ்தான் கோரிக்கை பிசுபிசுத்துவிடும் என்றே ஸர்தார் பட்டேலும், நேருஜியும் கருதினர்.

ராஜாஜி ஒருவர்தான் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ், அதுவும் முஸ்லிம் லீகினர் தேசமெங்கிலும் ஹிம்சை மார்க்கத்தில் இறங்கிவிட்டபோது அந்த எதிர்ப்பைச் சமாளிக்க முடியாது என்று கண்டார். பாகிஸ்தான் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது; ஆகையினால் ஜின்னாவுடன் பேச்சு வார்த்தை நடத்தி ராஜி செய்துகொள்ள வேண்டும் என்றார் ராஜாஜி. அவருடைய வாதம் என்னை வியப்படுத்தவில்லை. நான் அவருடைய கருத்தின் மீது சினம் கொண்டேன். அப்போது பலர் அவர் தேச நலனைக் காட்டிக் கொடுத்துத் துரோகம் இழைக்கிறார் என்றே கூறி வந்தனர். ஆனால் பிற்காலத்து நிகழ்ச்சிகள் அவர் கருத்து எவ்வளவு சரி என்பதை நிரூபித்து விட்டன.

1952ல் அவர் சென்னையின் முதல் மந்திரி பதவியை ஏற்றதற்காகத் தேசம் அவருக்கு ஆழ்ந்த நன்றிக் கடன் பட்டுள்ளது. கவர்னர் - ஜெனரலாயிருந்தவர் முதன் மந்திரியாவதா என்ற குறுகிய மனப்பான்மையை விட்டு, இதே காரணத்துக்காகச் சிலருடைய கேலிக்கும் ஆளாகி, அவர் சென்னையில் கம்யூனிஸப் பிசாசை அடக்குவதற்காகப் பதவி ஏற்றார். அச்சமயத்தில் எனக்கு அவர் எழுதிய கடிதமொன்றில் 'துஷ்டக் கிரகங்கள் என்னை மீண்டும் அரசியலுக்குள் தள்ளிவிட்டன' என்று எழுதினார். ஆனால் இந்த துஷ்டக் கிரகங்கள் சென்னைக்கு — ஏன், நாடு முழுவதற்குமே — அதிருஷ்டக் கிரகங்களாக இருந்துவிட்டன!

எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பே அணு ஆயுதச் சோதனையை எதிர்த்து, வல்லரசுகள் உடன்பாடு காண வேண்டும் என்று வற்புறுத்தியவர் ராஜாஜி. சமீபத்திலேயே இதன் அவசியம் உணரப்பட்டு உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

ராஜாஜியுடன் முன்ஷி



இதே போல் பல சந்தர்ப்பங்களில் ராஜாஜியின் தீர்க்கதரிசனமும், செயலும் உலகுக்குப் பின்னால்தான் புரிந்திருக்கின்றன.

அரசியல் போராட்டங்களிலேயே ராஜாஜி நீண்ட காலமாக முன்னணி வகித்து வருகிறார் என்பதால் அவரது இணையற்ற சகல கலா வல்லபத்தை மறந்து விட முடியாது.

அவர் ஓர் அரிய எழுத்தாளர். அவரது எழுத்து நடையில் தன்னடக்கமும், தூய்மையும், அழகும் மிளிர்கின்றன. பைபிளை நினைவுறுத்தும் நடை அவருடையது. தொட்டதிலெல்லாம் இலக்கிய பாவனையைக் காட்டுகிறார் ராஜாஜி. நுண்ணிய பாகுபாடுகளைக் கண்டு, அந்த நுண்மைக்கு ஏற்பத் தக்க இடத்தில் தக்க சொல்லை உபயோகிக்கும் ஆற்றல் பெற்றவர் அவர். அவரது சிறு கதைகள் தனித் தன்மை பொருந்தியவை. அவரது ஆங்கில மகாபாரதமும், ராமாயணமும் புராதன இலக்கியத்தின் நூல்களை பொருந்தியவை.

அவரது ஈடுபாடுகள் எப்படி நாலு திசைகளில் செல்கின்றன என்று பலர் அறிந்திருக்க மாட்டார்கள். பல வருஷங்களுக்கு முன்னால் அவர் திருச்செங்கோட்டில் தேனீக்களின் வாழ் முறை பற்றி விவரித்துப் பேசக் கேட்டிருக்கிறேன் நான். அரசியல் போராட்டங்களுக்கு இடையில் அவர் ஷேக்ஸ்பியரையும் டிக்கென்ஸையும் ஊன்றிப் படிப்பதைக் கண்டிருக்கிறேன். அரசியல், பொருளாதாரம் இவை குறித்த நல்ல புத்தகம் எதுவும் அவரைக் கவருகிறது. ஸர் ஸி. வி. ராமனின் விஞ்ஞானக் கண்டு பிடிப்பைப் பற்றி அவரால் தெளிவாக எழுத முடிகிறது. பி. ஸி. ஜி.யை எதிர்த்துப் போரிடமுடிகிறது. பொழுது இருந்தால் உங்களோடு வாயுப் பிடிப்புப் பற்றி ஒரு வைத்தியர் போலவே விவாதிக்க அவர் தயார். சிலநாள் அவகாசத்தில் இவராலே இந்தியப் பண்பாடு குறித்து அரிய பிரசங்கம் செய்துவிட முடியும்; அல்லது உபநிஷதங்கள், கீதை இவற்றின் சாரத்தை அற்புதமாகச் சுருக்கித் தர முடியும்.

அற்ப விஷயங்களும் ராஜாஜியின் பார்வையிலிருந்து தப்புவதில்லை. ராஜாஜி பைசா விஷயங்களையும் மறப்பதில்லை. பல ஆண்டுகளுக்கு முன்னால் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்துக்காகச் சென்ற ராஜாஜியும் நானும் ஜபல்பூர் ரயில் நிலையத்தில் ஒன்றாக இறங்கினோம். அது கடும் குளிர் கால இரவு வேளை. எங்களை ரயில் நிலைய வாசலில் நிறுத்தி வைத்து விட்டு அவர் நிலையத்தின் தபால் சாவடிக்குச் சென்றார் — ஏதோ தந்தி கொடுப்பதற்காக. நிமிஷங்கள் ஓடின. ராஜாஜி திரும்பக் காணோம். கடைசியில் நானே அவரைத் தேடிக் கொண்டு புறப்பட்டேன். தபால்சாவடியில் நான் கண்டதை என்ன என்பேன்? நாங்கள் எல்லாம் குளிரில் வெட வெடத்துக் கொண்டிருக்கும் போது அவர் குளிரைச் சிறிதும் பொருட்படுத்தாமல் உள்ளேயிருந்த அதிகாரியிடம் தந்திக் கட்டணம் எப்படி வசூலிக்க வேண்டும் என்பதைத் தந்தி இலாகா விதிகளிலிருந்தே மேற்கோள் காட்டி நிதானமாக விளக்கிக் கொண்டிருந்தார்! அந்த அதிகாரியின் கணக்குத் தப்பு என்பதையும் நிரூபித்தார்!

கடந்த ஆறு ஆண்டுகளாக ராஜாஜி சர்க்கார் சர்வாதிபத்தியத்தை எதிர்த்து அறப்போர் நடத்தி வருகிறார். இதை அவர் ஏகாங்கியாகச் செய்கிறார் என்றே சொல்லி விடலாம். வாரா வாரம் அவர் சர்க்காரின் அபாயகரமான போக்கை உடைத்துக் கூறி **ஸ்வராஜ்யா**வில் தீட்சண்யமான தர்க்கவாதம் புரிந்து எழுதுவது எதிர் வாதங்களை அடிமட்டமாக்கி வருகின்றன. இந்தியச் சிந்தனையாளர் மட்டுமின்றி, உலக நாடுகளின் சில அரசாங்கங்களும் அவரது கருத்துக்களை மதித்துக் கேட்டுப் பாராட்டுகின்றன.

தேசத்துக்காகத் தமது வாழ்க்கையைப் பூரணமாகத் தியாகம்செய்தவர் ராஜாஜி. அவரது தியாகத்தை நினைக்கும் போது ஒரு முறை அவர் 'தாம்' என்ற உணர்வை அறவே அழித்துக் கொண்ட ஒரு நிகழ்ச்சி ஞாபகத்தில் வருகிறது. பல வருஷங்களுக்கு முன் நான் அவருடன் திருச்செங்கோட்டில் இருந்த போது இது நடந்தது. காந்திஜி தமக்கே உரிய முறையில் அவருக்கு ஒரு கடிதம் எழுதி யிருந்தார். அந்த நாளில் தேசபக்தருக்கு இந்த நாடு அளிக்கக் கூடிய சிறந்த கௌரவம் காங்கிரஸ் அக்கிராசனர் பதவியைத் தருவதுதான். ராஜாஜி அதுவரை காங்கிரஸ் அக்கிராசனராகவில்லை. அந்த ஆண்டு அவர்தான் தேர்வு பெற்றிருக்க வேண்டும். ஆனால் சில புறக்காரணங்களுக்காக, வேறொரு கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர் அக்கிராசனரானால் சில சிக்கல்கள் தீரும் என எதிர்பார்க்கப்பட்டது.



அரை குறையாகப் படித்த படிப்பு மக்களை ஏமாற்றும். மேல்நாட்டில் பௌதிக ஆராய்ச்சியில் உச்ச ஸ்தானம் பெற்றவர்களும் தெய்வத்தை நாடியே அடக்கத்துடனும் மிக்க பக்தியுடனும் நடந்துகொள்கிறார்கள். நாம் காணும் எந்தப் பொருளிலும் அளவுக்கடங்காத சக்தி மறைந்து கிடக்கிறது. அதுவே தேவி, பராசக்தி, பகவதி, ஈசுவரி என்று நம் முன்னோரும் பாரதியும், காந்தியும் வணங்கியது. எந்த உருவமும் தேவியினுடைய கோயிலாகும்.

இவ்விஷயத்தில் முடிவெடுக்கும் பொறுப்பை ராஜாஜிக்கே விட்டு விடுவதாகக் காந்திஜி தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அந்த மூன்றும் மனிதர் அக்கிராசனராகலாம் என ராஜாஜி கருதினால் தமது கடிதத்தை அவருக்கு அனுப்பி வைக்குமாறு காந்திஜி குறிப்பிட்டிருந்தார். ராஜாஜி கடிதத்தைப் படித்ததும் சிறிதும் சிந்தனைக் குழப்பமில்லாமல் உடனேயே அதை அந்த மூன்றும் மனிதருக்கு அனுப்பி வைத்து விட்டார்!

இன்று நாட்டை ஆளும் கட்சி ஊழல் மலிந்ததாயும், திறமை அற்றதாயும், சலுகை ஆட்சி நடத்துவதாயும் ராஜாஜி கருதுகிறார். அது நல்ல அரசியல் மரபுகளையும், நிர்வாக மரபுகளையும் தகர்த்து விட்டு மக்களின் வாழ்க்கையில் ஓயாமல் தலையிடுவதாயும், நாடு எவ்வளவோ அரும்பாடு பட்டு ஈட்டிய ஜனநாயக சுதந்திரத்துக்குக் குழி பறிப்பதாயும் கருதுகிறார்.

'சோஷலிஸ பாணி', 'தேச சுபிட்சம்' என்கிற பெயர்களில் நாட்டுக்கு ஏகாதிபத்தியத் தளைகளை இடுவதாகவும் இதற்கு இடமளித்து விட்டால் சுதந்திர ஜனநாயகத்தைப் பிற்பாடு மீட்கவே முடியாது என்றும் அவர் கருதுகிறார். வலு வாய்ந்த எதிர்க் கட்சி உருவானால்தான் ஜனநாயகம் காப்பாற்றப்படும் என்று அவர் கருதுகிறார்.

இந்தக் கருத்துக்களில் அவருக்குள்ள திட உணர்வு காரணமாகத்தான் கடந்த நான்காண்டுகளாக அவர் போரிட்டு வருகிறார்.

தனி மனிதரை வழிபடுவது தவறு என்று ராஜாஜி போராடுகிறார். ஓரளவுக்கு இதை உணர்ந்திருப்பது போலவே சமீபத்தில் காங்கிரஸில் சில திட்டங்கள் நிறைவேறியுள்ளன.

காங்கிரஸ் சர்க்காருடைய போக்கினால் ஏற்பட்டுள்ள லஞ்ச ஊழலை எதிர்த்து ராஜாஜி கண்டனக் குரல் எழுப்பியிருக்கிறார். காங்கிரஸ் கட்சியானது தனது தலைவர்கள் பலர் நேர்மை தவறி விட்டார்கள் என்பதைக் காலங் கடந்தேனும் ஓரளவுக்கு ஒப்புக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

காங்கிரஸ் மந்திரிகள் தேர்தல் நிதி சேர்க்கும் முறையை அவர் வன்மையாக ஆட்சேபிக்கிறார். அவரது ஆட்சேபணையிலுள்ள உண்மையைக் காங்கிரஸ் தலைவர்கள் சிலர் இப்போது உணர்ந்திருப்பதாகக் காண்கிறது.

கம்யூனிஸ்டு சார்பான அந்நியக் கொள்கையை ராஜாஜி எதிர்த்தார். சீன ஆக்கிரமிப்பின் பிறகு அவரது மதிப்பீடு எவ்வளவு சரியானது என்பதைக் காண்கிறோம்.

காங்கிரஸ் என்ற ஸ்தாபனம் இப்போது தனது ஆட்சியையே ஸ்திரப்படுத்திக் கொள்வதில்தான் முக்கியமாக முனைந்திருக்கிறது என்று ராஜாஜி குற்றம் சாட்டினார். இப்போது பல ராஜ்யங்களில் காணப்படும் கட்சிச் சண்டைகள் அவரது குற்றச் சாட்டுக்குச் சான்று பகருகின்றன.

நிலச் சீர்திருத்தம் என்ற பேரில் இந்தியாவின் கிராமங்களைக் காங்கிரஸார், அதிகார வர்க்கத்தினர் ஆகியோரின் தயவில் விட்டு வைப்பதையே இப்போது ராஜாஜி மிகவும் தீவிரமாக எதிர்க்கிறார். இன்று ஆளும் கட்சி தனது பெரும்பான்மை பலத்தினால் அரை வேக்காட்டுக் கொள்கைகளை நிராதரவான விவசாயிகளின் மீது திணித்தாலும், மற்ற விஷயங்களில் போலவே இவ்விஷயத்திலும் எதிர்காலம் ராஜாஜியின் கூற்றை ஏற்கும்.

சத்தியம் என்பது எப்போதும் ஆக்கிரங்களை விடப் பெரியது. என்றாலும், ஆல்பர்ட் ஷ்வைட்ஸர் கூறியது போல், 'எந்தச் சத்தியத்தையும் முதலில் கூறும்போது அது கேலிக்கு இலக்காவதே அதன் தலைவிதியா யிருக்கிறது.''

சத்தியத்தை எடுத்துச் சொல்லும் ராஜாஜி இன்று இந்திய மக்களின் ஜனநாயக உணர்வுக்கே உருவகமாக விளங்குகிறார்.



மனிதன் உள்ளத்தில் ஓர் ஆசை உண்டாகிறது. அதைத் தீர்த்துக் கொண்டால் பிறகு சுகமாக இருக்கலாம் என்று எண்ணுகிறான். அதற்காகப் படாத பாடு படுகிறான். ஆனால் ஆசைப் படிகளுக்கோ முடிவே யில்லை; முடிவில்லை என்று அறிந்து கொள்வதற்கும் அது இடம் தராது. சுற்றும் சக்கர வட்டமான ஒரு ஏணியின் மேல் ஏறப் பார்க்கிறோம். ஏற ஏறச் சக்கரம் கீழே போகிறது. ஒரு படி ஏறியதும் ஏறிய படி கீழே போய் விடும். புதுப்படி வந்து நிற்கும். படிகளுக்கு முடிவேயில்லை. சிரமத்துக்கும் முடிவே யில்லை. சாகும் வரை ஏறுவதே வேலை. ஒன்றை அடைந்தால் பிறகு சும்மா இருக்கலாம் என்று தோன்றும். ஆனால் அவ்வாறு தீர்த்துக் கொள்ள முடியாது. புது ஆசை உண்டாகும். இதுவே ஆசையின் கதை.

★

கோபம் கூடாது. அது முகத்தின் அழகைக் கெடுத்து விடுகிறது. சாந்தமே முகத்துக்கு அழகு தருகிறது. ஆகவே கோபத்துக்கு இடம் அளிக்காதீர்கள். இப்படி நீங்கள் நடந்தால் கட்டாயம் அழகாக, பிரகாசமாக இருப்பதுடன் வெற்றியும் காண்பீர்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

நானிலத்தின் எல்லாக் கண்டங்களிலும் நன்கறிந்த, நம்பிக்கைக்குப் பாத்திரமான 'ஸான்போரைஸ்ட்' ட்ரேட் மார்க்கு இந்தியப் பருத்திகளின் ஏற்றுமதியை ஓஹோ என உயர்த்த வல்லது

49 நாடுகளிலே 400க்கு மேற்பட்ட நெசவுக் கம்பெனிகள் 'ஸான்போரைஸ்ட்' முத்திரையிட்ட துணிகளை உற்பத்தி செய்ய லைசென்சு பெற்றுள்ளன. பாரெங்கும் பரிச்சயமாகியுள்ள இச் சின்னத்தின் மீது பற்றுதல் பூண்டுள்ள மக்கள் பல இலட்சம். அவர்களுக்கும் சரி, நெசவுத் தொழிலுக்கும் சரி, 'ஸான்போரைஸ்ட்' என்றால் துணி சுருங்குவதைத் தடுக்கும், நம்பிக்கைக் குரிய, ஒரு சீரான தரக் கட்டுப்பாடு என்றே பொருள்படும். இந்த ட்ரேட் மார்க்கின் உரிமையாளர்களான க்ளுவெட், பீபாடி & கோ. இன்கா., அவர்களின் தொழில் நுணுக்கப் பிரதிநிதிகளால் மேற்கூறிய தர விதிப்பு எங்கும்




போல் இக் நாட்டிலும் நிறைவேற்றப் படுகின்றது. 'ஸான்போரைஸ்ட்' முத்திரையிட்ட பருத்தித் துணிகள் பண்பிலே சர்வதேசத் தர மேன்மைக்கு ஈடு நிற்கின்றன—அணியப் பொருத்தமாக நிலைபெறும். ஏனெனில் சுருங்காதவை. இந்த ட்ரேட்மார்க்கின் உதவியால் இந்தியப் பருத்தித் துணிகளின் ஏற்றுமதி தலைதூக்கித் தழைத்தோங்க முடியும். ஏற்றுமதிக் கென 73.12 கோடி மீட்டர் துணிகளை உற்பத்தி செய்வதெனக் கொண்ட மூன்றும் திட்டத்தின் இலக்கை இத் தொழில் எட்டிப் பிடித்து, என், எல்லை மீறவும் செய்து, அதன் மூலம் பெறுவதற்குரிய பிற நாட்டுச் செலாவணியைத் தேடித் தரவும் உதவும்.


'ஸான்போரைஸ்ட்' என்ற ரிஜிஸ்தர் செய்யப்பட்ட டிரேட் மார்க்கின் சொந்தக்காரர்களான க்ளுவட் பீபாடி அண்டு கோ. இன்கார்பொரேட்டட் (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏ. வில் இணைக்கப்பெற்றது) அவர்களால் இந்த விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் கம்பெனியின், 'சுருங்காது' என்பதற்கான கடும் நிபந்தனைகளுக்குட்பட்டுத் தயாரிக்கப்படும் துணிகளில் மட்டுமே 'ஸான்போரைஸ்ட்' டிரேட் மார்க் உபயோகிக்க அனுமதிக்கப்படுகிறது.

தகவலுக்கு அணுகவும்: 'ஸான்போரைஸ்ட்' ஸர்விஸ், 95, மேரின் ட்ரைவ், பம்பாய்-2.











உலகைச் சோகத்தில் ஆழ்த்தி, அமரராகி விட்ட ஜனாதிபதி கென்னடி, தாம் பதவி வகித்த சொற்ப காலத்தில் உலகப் பெரும் தலைவர்களுடன் கலந்து பேசிய காட்சிகளை நினைவு கூரும்போது உலக சமாதானத்துக்காக எவ்வளவு தூரம் அயராது பாடுபட்டிருக்கிறார் என்பது தெரிகிறது.


1 இரு ஜனாதிபதிகள்
2 கென்னடி குடும்பம்
3 மாஜி அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவரும் கென்னடியும்
4 பிரதமர் நேருவுடன்
5 ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மகிழ்ச்சியை அட்லாய் ஸ்டீவன்ஸனுடனும் லிண்டன் ஜான்ஸனுடனும் பகிர்ந்து கொள்கிறார்
6 ராஜீயக் காரியதரிசி டீன் ரஸ்க், பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் மாக்மில்லன் இன்றைய பிரதமர் ஹோம் ஆகியவர்களுடன்
7 ஐ. நா. பொதுக் காரியதரிசியாக இருந்த ஹாமர்ஷீல்டுடன்







அன்னை இல்லம்



ஒரு கணவன் மனைவியைப் பிரிந்தான்; ஒரு மனைவி கணவனையும், மகனையும் பிரிந்தாள்; ஒரு மகன் தந்தையையும், தமையனையும் பிரிந்தான்; இன்னொரு மகன் தாயைப் பிரிந்தான். இவர்கள் எல்லாரும் ஒரே குடும்பமாக இருக்க வேண்டியவர்கள். ஒருவருக்கொருவர் யாரென்று தெரியாமலே இந்த உலகிலே அவர்கள் பழகுகின்றனர். கடைசியில் எல்லாரும் ஒன்று சேருகின்றனர். இது தான் திரைக் கதைச் சுருக்கம்.

இதற்கிடையில், கள்ளக் கடத்தல், அதன் காரணமாகக் கொலை, விசாரணை, தண்டனை எல்லாம் வருகின்றன. கடைசியில் உண்மைக் குற்றவாளி அகப்பட்டுக் கொள்கிறான். இடையில் காதலும் வருகிறது. (கதை புரியவில்லையா? விட்டுத் தள்ளுங்கள்! நல்ல நடிப்பு இருக்கிறது. அதைப் புரிந்து கொண்டால் போதும்.)

ஏற்கனவே சிவாஜி கணேசன் நடித்த ''குங்குமம்'' ''அன்னை இல்ல''த்தில் கலந்திருக்கிறது. அதில் நடித்த எம். வி. ராஜம்மா, எஸ். வி. ரங்காராவ் இருவரும் இந்தப் படத்திலும் பிரிந்து விட்ட கணவன்—மனைவியாக வருகின்றனர். கதையைத்தான் மாற்றவில்லையென்றால், பாத்திரங்களையாவது மாற்றக் கூடாதா?

''அன்னை இல்ல''த்தில் நடிப்புக்கு முதலிடம் சிவாஜி கணேசனுக்குத்தான் தரவேண்டும். தகப்பனார் ஒரு கள்ளக் கடத்தல் பேர்வழி என்பது தெரிய வந்ததும் குமுறுவது, அவர் மீது கொலைக் குற்றம் சுமத்தப்பட்ட போது துடித்தது, தன்னைப் பெற்ற தாய் இன்னாரென்று தெரிந்து கொண்ட போது கண்ணீரில் கரைந்தது ஆகிய கட்டங்களில் எல்லாம் சிவாஜி நடிகர் திலகமாகவே விளங்குகிறார். ஆனால் ஆரம்பக் காட்சிகளில் தேவிகாவுக்குக் காரோட்டி மாதிரி வந்து காதலித்துக் கும்மாளி போடுவது பாராட்டக் கூடியதாக இல்லை. முன்பின் அறிமுகமில்லாத ஒரு பருவ மங்கையின் கையைப் பிடித்திழுத்து விளையாடுவது என்ன மரபோ!


தேவிகா பகட்டுப் பெண்ணாக வந்து காதல் காட்சிகளில் சிவாஜியுடன் இழைந்து நடித்துக் குழைந்து பேசுகிறார். தன் காதலன் துயரத்தில் விம்மும் போது அவரும் விம்முகிறார். ஆனால் ''நடையா, இது நடையா!'' என்ற பாட்டுக்கு ஏற்பத் தேவிகா அசைந்து அசைந்து நடை பயிலுவது நன்றாக இல்லை. பாட்டுக்கு 'அழகு காட்டுவது போல்' இருக்கிறது. பெண்களின் இடை அழகில்தானே நடையழகு இருக்கிறது? அது இல்லாத போது......!

எஸ்.வி. ரங்காராவின் யுகம் இது: சமீபத்தில் அவர் நடித்த படங்களிலெல்லாம் வெற்றி அவருக்குத்தான். தன் குற்றங்களை உணர்ந்து மகனிடம் மன்னிப்புக் கோரும் சந்தர்ப்பத்திலும், சிறைச் சாலையில் மகனையும் மனைவியையும் சந்திக்கும் போதும், கூட்டாளி ரத்தினத்திடம் தன்னை விட்டுவிடும்படி கோரும் போதும் அவரைப் போலவே அவர் நடிப்பும் உயர்ந்து விடுகிறது. எம். வி. ராஜம்மா திரைப் படங்களில் அம்மாவாக வந்து துன்பப்பட்டுப் பழகியவர்! இதிலும் அவர் நடிப்பு வழக்கம்போல் இருக்கிறது.

நாகேஷின் தமாஷ்கள் கதையின் சோக கட்டங்களுக்கு ஆறுதல் அளித்துச் சிரிக்க வைக்கின்றன. சண்முகமாக வரும் முத்துராமன் நன்றாகவே நடித்திருக்கிறார். 'சிவப்பு விளக்குத் தெரியுதம்ம' என்றா பாட்டு பரவாயில்லை.

கள்ளக் கடத்தலைத் தொழிலாகச் செய்யும் நம்பியார், அவர் கையாள் ஓ. ஏ. கே. தேவர் இருவரும் திரைக் கதையின் திருப்பத்துக்கு உறுதுணையாயிருக்கின்றனர். ரங்காராவ் மீது கொலைக் குற்றம் சுமத்தப்படும் காட்சி நன்றாய்ப் படமாக்கப்பட்டிருக்கிறது.

''அன்னை இல்ல''த்தில் வேறு என்ன இல்லையென்றாலும் உருகி மகிழ நல்ல நடிப்பு இருக்கிறது. அது போதும்.



கொள்ளைக் கூட்டத்தைப் பிடிக்கச் சென்ற போலீஸ் அதிகாரி வேணுவின் உள்ளத்தை ரங்கதுரையின் முறைப்பெண் பொன்னி கொள்ளை கொள்ளுகிறாள். வேணுவைத் தீர்த்துக் கட்ட முயன்ற கொள்ளைக் கூட்டத்தினர் தவறுதலாக அவனது நண்பன் ரகுவைக் கொலை செய்து விடுகின்றனர். ரகுவின் தங்கை மாலாவை அவள் காதலன் விசுவத்துக்கு மணம் முடிக்கப் போன வேணுவுக்கு ஒரு சோதனை ஏற்படுகிறது. விசுவத்தின் பைத்தியக்காரத் தங்கை சாந்தியை மணந்து கொள்ளும் நிர்ப்பந்த நிலைமை ஏற்படுகிறது. கடைசியில் சாந்தி ரங்கதுரையின் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாக, பொன்னியும் வேணுவும் ஒன்று சேருகின்றனர்.

கொள்ளைக் கூட்டம், போலீஸ் அதிகாரி என்றதுமே ரஸிகர்களுக்கு எம். ஜி. ராமச்சந்திரன் நினைவு வராமல் இருக்காது. அதோடு சண்டை சச்சரவுகளின் நினைவும் வரும். பேதைப் பெண் பொன்னியைக் காதலித்தபோது இருந்த களி துலங்கும் முகத்துக்கும், நண்பனின் தங்கையை வாழ வைப்பதற்காகச் சாந்தியை மணந்து சஞ்சலப்பட்ட போது இருந்த சோகம் கவிந்த முகத்துக்கும் எத்தனை வித்தியாசம்! வேணு சாந்தியை முதன் முதலில் சந்தித்தபோது நடந்த நிகழ்ச்சிகள் உள்ளத்தை உருக்குகின்றன. அப்பொழுது எம். ஜி. ஆர். சோகத்தில் விம்முவது உருக்கமாயிருக்கிறது. வேணு கொள்ளைக்காரன் விசுவத்துடன் கைகலக்க நேர்ந்த போதும், கடைசியில் நடந்த துப்பாக்கிச் சண்டையின் போதும் எம். ஜி. ஆர். வீரத்தோடு வாகவத்தையும் காட்டி யிருக்கிறார். அவருடைய நடிப்பு ''பரிசு''க்கு உகந்ததாயிருக்கிறது!

சாவித்திரியின் நடிப்பு இந்தப் படத்தில் அதியற்புதமாக அமைந்திருக்கிறது. வேணுவைச் சந்தித்து உலகம் அறியாப் பேதைப் பெண்ணாக நடித்து எல்லோருடைய உள்ளங்களிலும் இடம் பிடித்துக் கொண்டு விட்டார். வேணுவுக்கு மணம் முடிந்து விட்டதை யறிந்து மனம் குமுறியழுதது மனக் கண் முன்னே நிற்கிறது.

சாந்தியாக வரும் ராகினி சிறிது நேரமே வந்தாலும் மிக நன்றாக நடித்திருக்கிறார். எந்தப் படத்திலும் ராகினி ஏற்கும் பாகம் பயன் இல்லாமற் போய்விடுவது வழக்கம். ஆனால் இந்தப் படத்தில் அந்தப் பாத்திரத்தை அலட்சியப் படுத்துவதற்கில்லை. சித்தப் பிரமையில் சிறப்பாக நடித்த ராகினி பிற்பகுதியில் உருக்கமாகவும் நடித்தது பாராட்டுக்குரியது.

நம்பியாரின் மாறு வேஷமும், அதற்கேற்ற நடிப்பும் கச்சிதமா யிருக்கின்றன. சண்டைக் காட்சிகளில் ஜமாய்த்து விட்டார்.

சர்க்கஸ் பைத்தியமாக வரும் நாகேஷின் சிரிப்பு வெடிகள் ''பரிசு''க்கு விசேஷக் களை யூட்டுகின்றன. தகப்பனாரிடம் அவர் பேசும் போது செய்யும் தமாஷ்களை இப்பொழுது நினைத்தாலும் சிரிப்பு வருகிறது.

ரகுவின் தங்கை மாலாவின் பாகத்தை ராஜசுலோசனா ஏற்றிருக்கிறார். பாராட்டிக் கூறும்படியாயில்லை அவர் நடிப்பு.

''என்னை என்னை இனிக்குது'' என்ற பாட்டு நன்றாயிருக்கிறது.

ஒலிப்பதிவு மிக நன்றாய்க் கவனிக்கப்பட்டிருக்கிறது.

மூலக் கதை தாதா மீராசியினுடையது. ஆனால் புதுமையோ, புரட்சியோ எதுவும் இல்லை. ஏற்கனவே பல படங்களில் கையாளப்பட்ட காட்சிகள் தான் சிறிது மாறுதல் செய்யப்பட்டிருக்கின்றன.


கௌரி பிக்சர்ஸ் தயாரிப்பான ''பரிசு'' பார்த்து மகிழக்கூடிய தீபாவளிப் பரிசுதான்.



அத்தியாயம் இருபத்திரண்டு

பெண்மையின் முழக்கம்

உமா கால் கட்டுடன் டாக்டர் ஜகந்நாதனின் நர்ஸிங் ஹோமில் படுத்திருக்கிறாள் என்பதைப் பிச்சுமணியின் மூலம் அறிந்ததும் வஸந்தி பதறியடித்துக் கொண்டு ''அக்கா! அக்கா!'' என்று கூவியபடி ஓடி வந்தாள். உமாவின் தகப்பனாரும், சித்தியும் கூட



அரு. ராமநாதன்

வந்து பெரிதாகத் துக்கம் கொண்டாடினார்கள்.

''ஒன்றுமில்லை அப்பா! என் காலில் ஒரு சிறு முறிவுதான்! இரண்டொரு வாரங்களில் நான் முன் போலவே தாராளமாக எழுந்து நடமாடலாமென டாக்டர் சொல்கிறார்!'' என்றாள் உமா அமைதியாக.

''அக்கா! அந்த டாக்டர் சொன்னபடி உன் கால் சரியாகவில்லையென்றால் அவருக்கு நான் வெடி வைத்துவிடுவேன்!'' என்று வீர முழக்கமிட்ட வசந்தி ''அவர் கெட்டிக்காரர்தானே?'' என்று கேட்டாள்.

''ஆமாம்! டாக்டர் ஜகந்நாதன் மேல் நாடுகளில் கூடப் பல பட்டங்கள் பெற்றிருக்கிறார்!'' என்றாள் உமா.

''ஓ! நாவல்கள் எழுதுகிற அந்த டாக்டர் ஜகந்நாதனா?'' என்று பரபரப்புடன் ''புரட்சிகரமான புத்தகங்களெல்லாம் எழுதியிருக்கிறார் அக்கா! அவரை நான் பார்க்க வேண்டும்!'' என்று வெகு ஆவலோடு சொன்னாள். அடுத்த கணம் சடாரென ஒரு நினைவு வந்தவளாக அவள் வெகு ரோஷத்தோடு, ''ஆனால் அக்கா! பெண்களை அவர் எவ்வளவு இழிவாக எழுதியிருக்கிறார், தெரியுமா? பெண்களெல்லாம் ஆண்களுக்குக் கைப்பொம்மைகள் அல்லது கால் தடைகள் அல்லது கடைச் சரக்குகளின் விளம்பரப் பலகைகள் என்று அவர் கேலி செய்திருக்கிறார். அவரைச் சும்மா விடக் கூடாது, அக்கா! நான் அவரைப் பார்த்துச் சரியானபடி 'டோஸ்' கொடுக்கிறேன். ஆனால் முதலில் உன் கால் குணமாகட்டும். அப்புறம் பாரேன்!'' என்று கறுவினாள்.

அவளுடைய தகப்பனார் சிவஷண்முகம் திடுக்கிட்டவராய், ''வசந்தி! உன் வாலுத்தனத்தை அந்த டாக்டரிடமும் காட்ட ஆரம்பிச்சுடாதே! 'சுட்டிப் பெண்' என்று அவர் சர்டிபிகேட் ஒன்றும் கொடுத்துவிட மாட்டார். எங்கே வந்தாலும் 'ரௌடி' போல் யாரையாவது வம்புக்கு இழுப்பதும், கலாட்டா பண்ணுவதுமே உன் தொழிலாகப் போய்விட்டது!'' என்று கடிந்து கொண்டார்.

அவருடைய இளைய சம்சாரம் ராஜம்மாவும் தன் பெண்ணைக் கட்டுப்படுத்த முயலும் விதமாக, ''வசந்தி! உனக்குப் பிடிக்காவிட்டால் அவர் புத்தகங்களையே படிக்காமல் இரேன்!'' என்றாள்.

''அது எப்படி அம்மா, பெண்களாகிய நாம் சும்மாயிருப்பது?'' என்று

தன் தாயாரை மீறி நின்ற வசந்தி, ''அக்கா! நீயே சொல்லக்கா!'' என்று அவளைத் தன் கட்சிக்கு இழுக்க முயன்றாள்.

''வசந்தி!.... டாக்டர் ஜகந்நாதன் மிகவும் கெட்டிக்காரர்! ஆனால் அவர் என்ன எழுதுகிறார், என்ன பேசுகிறார் என்பதை நாம் புரிந்து கொள்வது கடினம்!'' என்றாள் உமா.

''ஓ! அவர் ஒரு புரியாத புதிரா? அது எப்படி அக்கா? பெண்கள்தான் புரியாத புதிர்கள் என்பார்கள். ஓர் ஆண் எப்படியக்கா புரியாத புதிராக இருக்க முடியும்?''

''வசந்தி! உன் அதிகப்பிரசங்கித் தனத்தை நிறுத்து! உடனே வாயை மூடுகிறாயா, இல்லையா?'' என்று சிவஷண்முகம் பொறுமை மீறியவராய் அதட்டினார்.

உடனே வசந்தி தன் வாயைத் தன்னிரு கைகளாலும் பொத்தித் தன் தகப்பனாரை மிரள மிரளப் பார்த்துச்



சிறு குழந்தை போல் ஒரு பாவனை செய்துவிட்டுத் தன் தாயாரையும் கடைக் கண்ணால் தமாஷாகப் பார்த்தாள்.

எல்லோருக்கும் சிரிப்பு வந்துவிட்டது.

"இந்த மாதிரிப் பெண்ணை வைத்துக் கொண்டு என்ன செய்வதென்றே புரியவில்லை!" என்று சிவஷண்முகம் அரைச் சிரிப்போடும் அரை ஆத்திரத்தோடும் நொந்து கொண்டார்.

"அவள் குழந்தைதானே அப்பா?" என்றாள் உமா தன் தங்கை மீதுள்ள அளவு கடந்த வாஞ்சையில்.

"குழந்தையா? எமன்! எமன்!" என்று குமுறிய சிவஷண்முகம் தன் சம்சாரத்தை ஓரக் கண்ணால் மெல்லப் பார்த்து, "எல்லாம் அவள் அம்மா கொடுக்கிற செல்லம்! அப்புறம் எப்படி அடங்குவாள்?" என்று முணுமுணுத்தார்.



முன்னெல்லாம் சிறியதாக எதையுமே செய்ததில்லை. அஜந்தா, புத்தகயா, மைசூர் குகைக் கோயில்களைப் பாருங்கள். முன்னெல்லாம் மனம் விரிவாக இருந்தது. அவகாசமும் வேலை செய்யச் சக்தியும் இருந்தன. இப்பொழுது நாம் ரொம்பச் சுறுசுறுப்பாயிருக்கிறோம்; ஆனால் செய்வதென்னமோ ஒன்றுமில்லை. செய்ய முயல்கிறோம்; அவ்வளவுதான். ஆனால் சாதனை சிறியதாயிருக்கிறது.

"நல்லவேளை, 'தாயைப் போல் பிள்ளை நூலைப் போல் சேலை' என்று ஒரு பொன்மொழியையும் சொல்லாமல் இருந்தீர்களே, அதுவரையிலும் எனக்குப் புண்ணியம்தான்!" என்று ராஜம்மா வெகு ரசனையோடு சிரித்தாள். தன் 'அடங்காமை'யில்தான் தன் கணவருக்கு அலாதியான சுவாரஸ்யம் என்பது அந்த அம்மாளுக்கு நன்றாகத் தெரியும்!

சிறிது நேரம் கழித்து உமாவிடம் விடை பெற்றுக் கொண்டு அவளுடைய தகப்பனாரும், சித்தியும் நர்ஸிங் ஹோமிலிருந்து கிளம்பினார்கள். வசந்தியோ, "நான் டாக்டரைப் பார்த்து விட்டுத்தான் வருவேன்! அக்காவுக்கு அவர் செய்த டிரீட்மெண்டைப் பற்றி விசாரிக்க வேண்டும். என்னிடந்தான் அவர் உண்மையைச் சொல்லுவார்!" என்று கூறித் தன் பெற்றோரை அனுப்பிவிட்டு, உமாவிடம் "அக்கா! இப்போது டாக்டர் எங்கே இருப்பார்?" என்று கேட்டாள்.

"அவர் வெளியே போயிருக்கிறார்!"

"ஏன் அவர் எழுதிய நாவல்களை எந்தப் புத்தகக் கம்பெனிக்காரன் தலைமீதாவது கட்டுவதற்கா? அவருடைய நாவலை வாங்கி முதல் பதிப்புப் போடுகிறவன் ஊர், உலகத்தாரின் கண்டனங்களுக்குப் பயந்து மறு பதிப்புப் போடத் துணிய மாட்டானுமே?"

"வசந்தி! அவரிடம் நீ அதிகமாகப் பேச்சு வைத்துக் கொள்ளாதே! பேச்சில் அவர் யாரையும் சாப்பிட்டு விடுவார்!"

"ஏனக்கா, அவருக்காக நீ பரிந்து கொண்டு வருகிறாயே! என்ன விஷயம்?"

"ஒன்றுமில்லை...."

"அக்கா! அவர் 'அவுட்பேஷண்ட்' யாரையாவது 'அவுட்' ஆக்கப் போயிருப்பாரா?"

"அவர் பிச்சுமணியின் தாத்தாவைப் பார்க்கப் போயிருக்கிறார்."

"அந்தத் தாத்தாவுக்கு என்ன? பீரங்கிக் குண்டு மாதிரி இருப்பாரே! எந்த வியாதியும் அவரை நெருங்கப் பயப்படுமே! அவரிடம் டாக்டருக்கு என்ன வேலை?" என்று கேட்டாள் வசந்தி.


"இருவரும் நண்பர்களாம்!"

"ஓ! அப்படியா? எனக்குப் புரிந்து விட்டது, பிச்சுமணியின் தாத்தா பெண்களையே வெறுப்பவர்! இந்த டாக்டர் எழுத்தாளரோ பெண்களையே பரிகசிப்பவர்! இருவருடைய இயல்புகளும் ஒரே பாதையில் செல்கிறபடியால் ஒற்றுமைக்குக் கேட்பானேன். பிச்சுமணியின் தாத்தாவைப் பார்க்க இந்த டாக்டர் அடிக்கடி செல்கிறாரோ! இருவரும் பேச உட்கார்ந்து விட்டால் சாமானியத்தில் எழுந்திருக்க மாட்டார்கள்!" என்று சிரித்த வசந்தி, "சரியக்கா! காலேஜ் விட்டதும் நேரே இங்கு வருகிறேன். டாக்டர் வந்தால் அவருடைய புத்தக ரசிகை ஒருத்தி வரப் போவதாகக் கொஞ்சம் எச்சரித்து வை!" என்று சொல்லிவிட்டு, "சீரியோ! குட்பை!" என்று கூவிய வண்ணம் குடுகுடுவென்று வெளியே துள்ளி ஓடினாள்.

உமா ஒரு பெருமூச்சு விட்டாள். அந்தப் பெருமூச்சுக்கு அடியில் ஏதோ ஒன்று உறவாடியது!


சந்தேகமென்ன?
பின்னியின்
தூய பட்டு (ஜார்ஜெட்)
புடவைதான்!
பரவசமூட்டும் பல வண்ணங்களிலும், கண்கவரும் டிசைன்களிலும், ஜார்ஜெட், ஷிப்பான், மற்றும் மென்பட்டு ரகங்களில் கிடைக்கிறது.


–take
a
chair!



அத்தியாயம் இருபத்து மூன்று

ஆண்மையின் அடக்கம்

கல்லூரி விட்டதும் வசந்தி தன் சைக்கிள் வாகனத்தில் ஜம்மென்று ஏறி உட்கார்ந்து புயல் வேகத்தில் அதை ஓட்டிச் சென்று, கடைத் தெருவிலுள்ள ஒரு பழக் கடையை அடைந்தாள். அக் கடை வாசலில் தன் சைக்கிளை நிறுத்திவிட்டு அவள் ஒரு பிளாஸ்டிக் கூடையுடன் கடைக்குள் விர்ரெனப் புகுந்தாள்.

கடைக்காரனை அவள் அதட்டி மிரட்டி நல்ல பழங்களாகப் பொறுக்கித் தரும்படி சொல்லி அரை டஜன் ஆரஞ்சுப் பழங்களும், இரண்டு ஆப்பிள்களும் வாங்கித் தன் பிளாஸ்டிக் கூடையில் நிரப்பிக் கொண்டு குதித்தோடி வந்து பக்கத்திலுள்ள ஒரு சிறு பூக்கடையில் நல்ல குண்டுமல்லிகை ஐந்து முழம் வாங்கிக் கொண்டிருந்தாள்.

அதே சமயம் டாக்டர் ஜகந்நாதன் சாலை ஓரத்தில் காரை நிறுத்திவிட்டு, அதே பூக்கடையில் பூ வாங்குவதற்காக வந்து, வசந்தியின் அருகில் அவள் மீது ஒட்டாத குறையாய் மிகவும் நெருங்கி நின்றார். வசந்தியின் கழுத்துப் பின்புறத்து அழகை மறைத்துக் கொண்டிருக்கும் குதிரை வால் கொண்டை காற்றிலே சற்றுப் பறந்து அவர் கழுத்துடன் உறவாடியது.

வசந்தி கேசத்தில் பூசியிருந்த வாசனைத் தைலத்தின் மணமோ அவரை எங்கோ தூக்கிக் கொண்டு போய் விடும் போலிருந்தது.

வசந்தி தன் புறங்கை அவர் மீது படுவது கூடத் தெரியாதபடி பூ வாங்கும் சுவாரஸ்யத்தில் மூழ்கியிருந்தாள்.


ஜகந்நாதனின் உதடுகளில் ஒரு புன்சிரிப்பு விளையாடியது!

அவர் பூக்காரனை நோக்கி, "இந்தாப்பா! இந்தக் குழந்தைக்குக் கொடுத்த மாதிரியே எனக்கும் ஐந்து முழம் மல்லிகைப்பூ வேணும்!" என்றார்.

வசந்தி துணுக்குற்றாள். தன்னைக் குழந்தை என்று கூப்பிடும் கிழவன் யாரென்று கோபமாக வெடுக்கென்று தன் தலையை மட்டும் திருப்பித் தன் பின்னால் பார்த்தாள். அவளுடைய பகைமையான முகம் ஜகந்நாதனின் விசாலமான மார்பில் பட்டுப் படர்ந்து விடும் போலிருந்தது.

வசந்தி சட்டென்று பின்வாங்கித் தன் முகத்தை நன்றாகத் தூக்கி ஏறிட்டுப் பார்த்தாள்.

மகத்தான சந்திப்பு



அணு ஆயுதச் சோதனைகள் மூலம் சென்றபதினைந்தாண்டுகளாகஅமெரிக்காவும், ருஷ்யாவும் வாயு மண்டலத்தை விஷமயமாக்கி வந்தன. இதனை எதிர்த்துப் பாரத நாட்டிலிருந்து ஒரு பெரும் இயக்கமே நடத்திய ராஜாஜி சென்ற ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி கென்னடியைச் சந்தித்துப் பேசினார். கென்னடி அடுத்த நிகழ்ச்சிகளை ரத்து செய்து விட்டு ராஜாஜியின் உரைகளைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார். பொதுமக்கள் கருத்து, கட்சி மனப்பான்மை முதலியவற்றுக்கும் மேலாக மனச்சாட்சியை மதித்து நடந்த அரசியல்வாதிகளைப் போற்றித் 'தீர தரிசனம்' (Profiles in Courage) என்ற நூலை எழுதியவர் கென்னடி. இந்த இலட்சியங்களையே தம் வாழ்க்கையிலும் கடைப்பிடித்த அந்தத் தீரர் அதேபோன்ற குண நலனைப் பெற்றிருந்த ராஜாஜியிடம் ஈர்க்கப்பட்டதில் அதிசயம் இல்லையல்லவா? 'ராஜாஜியின் சந்திப்பு என்னைப் பண்படுத்திய மகத்தான சக்திகளில் ஒன்று' என்று கென்னடி கூறினாராம். இன்று கென்னடிமீது பாய்ந்த குண்டைச் சமாதான தேவதையின்மீதே பாய்ந்த குண்டாகக் கருதும் ராஜாஜி 'பனிப்போர் என்ற வேதாளத்தின் கொம்புகளைப் பிடித்து நிறுத்திய இத் தீரனின் இடத்தை யார் பெற முடியும்?'' என்று துக்கிக்கிறார்.

உங்கள் மகனை சுய முயற்சியால் வாழப் பழக்குங்கள்


எதிர்கால வாழ்க்கையைத் தன்னம்பிக்கையுடன் ஏற்பதற்கு ஏற்ற வகையில் உங்கள் மகனைப் பழக்கவேண்டியது உங்களுடைய சிறப்புரிமை மட்டுமல்ல முக்கிய கடமையும் ஆகும். நீங்கள் செய்ய வேண்டிய மிக முக்கியமான பணி அவனுக்குப் பணம் சேமிக்கும் பழக்கத்தை கற்பிப்பதுதான். இந்தப் பழக்கம் ஆயுள் முழுவதும் நீடிப்பது மட்டுமல்லாமல் அவனுக்கு வாழ்க்கையில் முன்னேற பெரிதும் உதவி புரியும்.

இளமையிலேயே சேமிக்கும் பழக்கத்தை பயில்விப்பது தான் சரியான முறை...அப்பொழுது தான் நீங்கள் பக்கபலமாக இருந்து அவனுக்கு உதவி புரிய முடியும். பதினன்கும் அதற்கு மேலும் வயதான சிறுவர்களுக்கென்றே, பிரத்தியேகமாக பாங்க் ஆஃப் பரோடாவில் மைனர்களுக்கான 3% வட்டியுள்ள ஒரு ஸேவிங்ஸ் அக்கௌண்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக சிறுவர்களுக்கு பணம் சேமிக்கும் நற்பழக்கம் ஏற்படும். பாங்க் ஆஃப் பரோடாவில் உங்கள் குழந்தையை ஒரு மைனர்களுக்கான ஸேவிங்ஸ் அக்கௌண்டைத் தொடங்கச் செய்யுங்கள். அவனுக்குத் தனி பாஸ் புத்தகம் கிடைக்கும்: அது மட்டுமல்ல, 'அந்த அக்கௌண்டை அவனே நிர்வகிக்கலாம்!

'உங்கள் சேவை எங்கள் கடமை' என்ற எங்கள் இலவச புத்தகத்தில் எல்லா விவரங்களும் உள்ளன. இதைப் பெற இன்றே கேட்டு எழுதுங்கள்.

**தி
பாங்க் ஆஃப்
பரோடா
லிமிடெட்**

(ஸ்தாபிதம்: 1908;
தலைமைக்
காரியாலயம்:
பரோடா



JWT-BB-1100

அவள் பின்னால் நின்ற ஜகந்நாதன் தொண்டு கிழவனல்ல; சிறு குறும்பனும் அல்ல! முப்பது வயதுக்குள் உள்ள ஒரு நாகரிகமான மனிதர் தான். அவருடைய உதடுகளில் புன்முறுவல் மின்னுவது போலவே அவருடைய கருத்தடர்ந்த விழிகளிலும் அறிவின் அலாதியான ஒரு தேஜஸ் மின்னி விளையாடியது.

வசந்தி சட்டென்று தன் முகத்தைத் தாழ்த்திக் கொண்டாள்.

''இந்தா, குழந்தே! நீ வாங்கினது மாதிரியே எனக்கும் நல்ல பூவாக ஐந்து முழம் அளந்து வாங்கிக் கொடு! ஏனென்றால், இந்தப் பூ வியாபாரமே எனக்குப்புதுசு!'' என்றார் ஜகந்நாதன்.

''நான் ஒன்றும் குழந்தையில்லே! உங்கள் சின்னப் பாப்பா இல்லே!'' என்று வசந்தி சீறினாள்.

''சரி, பாட்டியம்மா!''



மனிதனுடைய மனம் ஒரு விசித்திரம். அது வளர்வதும் மாறுவதும் ஆண்டவனின் விளையாட்டு. அடுப்புக்கரியும் பள பளவென்று மின்னும் வைரக் கல்லும் ஒரே பொருள் என்று பண்டிதர்கள் சொல்லுகிறார்கள். அதன் அணு அமைப்பு கொஞ்சம் மாறிவிட்டால் வேறு பொருளாகி விடுகிறது. பொருளே மாறும் போது ஒரு மனிதனுடைய குணங்கள் மாறுவதில் என்ன வியப்பு?

''நான்சென்ஸ்! ஸ்டுபிட்!'' என்று முனகிய வசந்தி, ''நான் ஒன்றும் உங்கள் பாட்டியம்மாவோ, பேத்தியம்மாவோ இல்லே!'' என்று சீறி நின்றாள்.

''பின்னே உன்னை எப்படித்தான் கூப்பிடுவது?''

''நீங்கள் எதுக்காக என்னைக் கூப்பிடணும்?''

''கொஞ்சம் பூ வாங்கத்தான்!''

''நீங்கள் எவளுக்காகப் பூ வாங்குகிறீர்களோ, அவளே வந்து அளந்து வாங்கட்டும்!''

''அவள் இங்கே வரமாட்டாள்!''

''அப்போ, அந்த ராணியம்மாளுக்கெல்லாம் நான் சர்வீஸ் (சேவை) செய்ய முடியாது!''

அதன் பின் பூக்காரனே நல்ல பூவாக ஐந்து முழம் அளந்து கட்டிப் பொட்டலத்தை ஜகந்நாதன் பைக்குள் திணித்துவிட்டு அதற்குரிய காசை வாங்கிக் கொண்டான்.

வசந்தி விர்ரென்று தன் சைக்கிளை நோக்கித் துள்ளிச் சென்று அதைக் கிளப்ப முயன்றாள்.

அப்போது சோதனை போல் வானத்தில் திடீரென்று இடியும் மின்னலும் பறித்தன. சைக்கிளில் ஏறி அவள் போய்ச் சேருவதற்குள் பெருமழை பிய்த்துக் கொண்டு வரும் போல் இருந்தது. அவளுடைய புத்தம் புதிய ஆடைகள் — கண்ணாடித்தாள் போன்ற மெல்லிய ஆடைகள் நனைந்தால் நன்றாக இருக்காது! அதிலும் அவள் போகும் இடத்தை உத்தேசித்து அன்று அவள் விசேஷமாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள். அத்தனை அலங்காரமும் அலங்கோலமாகி விடக்கூடாது! முகத்தில் அழகழகாய்ப் பூசியிருக்கும் பவுடரும் காதோரம் வரை கண்களுக்குக் கவர்ச்சிகரமாகத் தீட்டியிருக்கும் மையும் மழையில் கரைந்து விடக் கூடாது!

முன்பொரு சமயம் வழியில் மழை பிடித்துக் கொண்டபோது அவளுக்காகப் பக்கத்து வீட்டுச் சங்கர் குடை கொடுத்து ஆதரித்து, அவளுடைய சைக்கிளையும் தள்ளிக் கொண்டு வீடு வரை துணை வந்து படாத பாடுபட்டான். இப்போது அந்தச் சங்கரைப் போன்ற குடை மகாராஜனோ அல்லது அசட்டுப் பிச்சுமணியின் காரோ அல்லது வேறு ஒரு மடையனின் காரோ தன் கண்களில் தட்டுப்பட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்? சைக்கிளைப் பழக் கடைக்குள்ளேயே பூட்டி வைத்து விட்டுக் காரில் ஏறிப் போய் விடலாம் என்று வசந்தி ஆவலோடு சுற்று முற்றும் பார்த்தாள்.

அவள் கண்ணெதிரிலேயே பளிச்சென்று ரதம் போல் ஒரு பெரிய புது மாடல் கார் தயாராக நின்றுகொண்டிருந்தது! ஆனால் அதை ஓட்டக் கூடிய மடையன் யாரும் அதில் உட்கார்ந்திருக்கவில்லே!

வசந்தி என்ன செய்வதென்று தெரியாமல் ஆகாயத்தையே அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

அப்போது டாக்டர் ஜகந்நாதன் தன் உதடுகளில் அழகான புன்முறுவலுடன் வந்து, வசந்தியின் அருகில் நின்று கூர்மையான விழிகளால் அவளையே குறுகுறுவெனப் பார்த்தார்.

வசந்தியின் அழகே ஒரு தனி ரகம்! கொழு கொழுவென்று புத்திளம் பசுமையுடன் குலுங்கிச் சிரிக்கும் பூ



புதிய ஜேய்

அங்கயற்கண்ணி

கொடி உடல். அன்ன நடை. சின்ன இடை. மதிவதனம். அழகு விழியுடைய அங்கயற் கண்ணி ... தவிர மல்லிகையின் நறுமணம் கமழும் அழகிய...

இவள்
ஜேய் மங்கை...

புதிய ஜேய் — பூவின் மென்மையும், புது மலர்ச்சியும் மல்லிகையின் நறுமணமும் அளிக்கிறது.

- புதிய மிதமிஞ்சிய மல்லிகை மணம்!
- புதிய இளஞ் சிவப்பு நிறம்!
- புதிய பளபளக்கும் 'ராப்பர்'

—உங்கள் மேனி எழிலை மேன்மையுறச் செய்யும் சோப் இது.



அழகு சாதன சோப்
டாடா தயாரிப்பு

மொட்டுப் போல் விளங்கினாள் வசந்தி. புது ரோஜாவின் நிறம். அதில் மினு மினுவென்று இளமையின் பொலிவு! அவளுடைய கரு விழிகளில் குழந்தைத்தனம். அதே சமயம் உலகத்தை நன்குணர்ந்த அனுபவ ஸ்திரீயின் குறும்புத்தனமும் ஒருங்கே மின்னும். அதுவே அவளுக்கு ஒரு தனி வசிகரம்!

டாக்டர் ஜகந்நாதனுக்கு இதுவரை அறியாத ஒரு சுவாரசியம் வசந்தியிடம் பிறந்தது. அறிவு முதிர்ச்சியுற்றவர்களுக்கோ, வயதானவர்களுக்கோ குழந்தையிடம் ஒரு சுவாரசியம் பிறக்கிறதே, அதே மாதிரித்தான்!

வசந்திக்கோ எந்த விநாடியில் மழை பிடிக்குமோ என்ற கவலை!



நம்முடைய வாலிபச் சித்திரக் கலைஞர்கள் இதைக் கவனிக்க வேண்டும்: மனித ஜாதியை எழுதும்போது உடலமைப்பில் கருத்துச் செலுத்திச் சித்திரம் தோன்றவேண்டும். தெய்வங்களைச் சித்திரத்தில் காட்டும் போது குணங்கள் முகத்தில் தோன்ற வேண்டும்.

''அப்படித்தான் நடக்குமென்று நான் நினைக்கிறேன்'' என்றார் டாக்டர் ஜகந்நாதன் சிரித்துக்கொண்டே.

''என்ன நடக்குமென்று நினைக்கிறீர்கள்?'' எனறு வசந்தி திடுக்கிட்டு வியப்புடன் கேட்டாள்.

''மழை வரும் என்று!''

''ஓ!....''

''மழை வந்துவிட்டால் என்ன செய்வது என்றுதானே கவலைப்படுகிறாய்?''

'ஆமாம்' என்பது போல் தலையை அசைத்த வசந்தி எங்கோ பார்த்தபடி மௌனம் சாதித்தாள்.

''அதோ பிரமாதமான ஒரு கார் நிற்கிறது பார்! அதன் சொந்தக்கார மடையன் வந்தால் அவனையே கொஞ்ச தூரம் உனக்கு டிரைவராக்கிக்கொள்ளலாம் என்று யோசிக்கிறாய், இல்லையா?''

''ஆமாம்!'' என்றாள் வசந்தி, அலட்சியமாக.

''நான்தான் அந்த மடையன்!'' என்று அதே மாதிரி வெகு அலட்சியமாகச் சொன்ன ஜகந்நாதன், ஒரு குறும்புச் சிரிப்புடன் வசந்தியை உற்று நோக்கினார்.

வசந்திக்குத் தூக்கி வாரிப் போட்டது. திருதிருவென விழித்தாள்.

''பரவாயில்லை, வா! நீ 'ப்ளீஸ்'-போடாமலே என் காரில் உனக்கு 'லிப்டு' கொடுக்கிறேன். உன் சைக்கிளையும் தூக்கி என் காருக்குள் போட்டுக் கொள்ளலாம்!''

''முடியாது! நான் அந்தக் காரில் வரமாட்டேன். என்னைக் கூப்பிட வேண்டாம்! என்னோடு நீங்கள் பேசவும் வேண்டாம்!'' என்றாள் வசந்தி முரட்டுத்தனமாக. ஆனால் அவள் குரல் என்னவோ கரகரத்தது.

''ஏன் பயப்படுகிறாயா?''

''எனக்கென்ன பயம்?''

''பின்னே என்ன? தெருவிலே சுற்றுகிற சில்லறைக் குறும்பன் என்றோ, ரௌடி என்றோ என்னை நினைத்தாயா? உன்னைவிட நான் அதிகம் படித்தவன்; அதிகம் பொறுப்புள்ளவன்; என்னைப் பார்...!''

வசந்தி அவரை உற்றுப் பார்த்தாள். அவருடைய விழிகளில் மட்டுமல்ல, அவருடைய புன்முறுவலை கூட அறிவின் ஒளி வீசியது. மிகவும் நாகரிகமாகவும் சுத்தமாகவும் உடுப்பணிந்திருந்த அவர் சிறந்த படிப்பாளியாகவும், உயர்ந்த பண்புள்ளவராகவும் தோன்றினார்.

''தயங்காமல் வா, என் காரில் ஏறிக்கொள்! உன்னைப் பத்திரமாகக் கொண்டு போய்ச் சேர்க்கிறேன்! உனக்கு வழித்துணையாகவும் எனக்குப் பேச்சுத் துணையாகவும் இருக்கும்! ஏனென்றால் நீ போக வேண்டிய இடத்துக்குத்தான் நானும் இப்போது போகப் போகிறேன்!'' என்றார் ஜகந்நாதன்.

''அடேடே! நான் போக வேண்டிய இடம் எது என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? நீங்கள் என்ன ஜோஸ்யரா?'' என்று கேட்டாள் வசந்தி கிண்டலாக.

''நீ சாந்தோமுக்குத்தானே போகிறாய்?''


''ஆமாம்! அந்தப் பஸ் ஸ்டாப்புக்குப் போகும் திசையையே நான் வெறித்துப் பார்ப்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள்!''

''அங்கே டாக்டர் ஜகந்நாதனின் நர்ஸிங் ஹோமுக்குத்தானே போகிறாய்?'' என்று கேட்டார்.


அதைக் கேட்ட வசந்தியின் கருவண்டு விழிகள் விரிந்தன. (தொடரும்)

நினைவு அலைகள்


ராஜாஜி அவர்கள் தமது வாழ்நாளில் எத்தனையோ நிகழ்ச்சிகளில் ஈடுபட்டிருக்கிறார். எத்தனையோ பேர்களைச் சந்தித்திருக்கிறார். எத்தனையோ மகத்தான சாதனைகளைப் புரிந்திருக்கிறார். அவற்றையெல்லாம் விளக்க வேண்டிய அவசியமில்லை. இத்தொகுப்பில் காணும் படங்கள் நேயர்களுக்குப் பல நினைவு அலைகளை எழுப்பக்கூடும்.


























CHICAGO
RADIO

கடவுளின் கையில் ஒரு கருவி


ஆர். ஆர். திவாகர்

பொது வாழ்வில் ஈடுபட்ட பெரியாரொருவர் எண்பத்தியாறாவது பிறந்த தினத்தைக் கொண்டாடக் காணக் கிடைப்பது இந்தியாவில் மிகவும் அரிய சம்பவமாகும். முதிர்ந்த பருவத்தை அடைவதில் மட்டும் விசேஷம் எதுவும் கிடையாது. ஆனால் இந்த வயதிலும் ஒருவர் பூரண சக்தியோடு உழைத்து ஆக்கப் பணி புரிவாரேயாகில் அவரை வாழ்த்தத்தான் வேண்டும். அவரை மட்டுமல்ல. அவர் யாரிடையே பிறக்கிறாரோ, அவரது தனிப்பட்ட சேவையினால் யார் பயன் பெறுகிறார்களோ அந்த மக்களையுமே வாழ்த்தத்தான் வேண்டும்.

சமீபத்தில் இப்படி நீண்ட நாள் வாழ்ந்த பெரியோர் சிலருண்டு—ஸர் எம். விசுவேசுவரய்யா, கார்வே, பகவான்தாஸ் போல. எண்பத்தைந்து ஆண்டுக்குப் பின்னரும் அவர்கள் சக்தியுடனும், சுறுசுறுப்புடனும் விளங்கினர். எனினும் இவர்களில் ராஜாஜியோ தனித்தன்மை பொருந்தியவராக விளங்குகிறார்.

அவர் பெற்றுள்ள முக்கியத்துவம் ஈடு இணையற்றது. தேச சுதந்திரத்துக்காக அவர் வாழ்ந்த தியாக வாழ்வும், சுதந்திரத்துக்குப் பின் பற்பல ஹோதாக்களில் அவர் ஆற்றிய பொதுப் பணியும் தனியொரு ஸ்தானத்தில் வைத்து மதிக்கப்பட வேண்டியவை. மிக எளிமையான அடிப்படை மீது பிரத்தியேக வாழ்வை அமைத்துக் கொண்ட அவர் பொதுப் பணியிலும், பொது நடவடிக்கையிலும் அதி உன்னதமான கொள்கைகளைக் கடைப்பிடித்தார். அப்பழுக்கற்ற நிர்வாகக் கலையில் அவர் புகுத்தியுள்ள புது அம்சங்கள் உலகறிந்தவை. தமது திட நம்பிக்கைகளைப் பின்பற்றுவதில் அவருக்குள்ள துணிவு காரணமாகத்தான் அன்று அவர் காந்தி மகாத்மாவுடன் மாறுபடக் கூடத் தயாராக இருந்தார். அந்தத் துணிவுக்கு ஈடாக எதையேனும் சொல்வதென்றால், எண்பத்திரண்டாவது பிராயத்தில் அவர் தனியொருமனிதராக ஆளும் கட்சியை எதிர்த்துப் புதுக் கட்சியொன்றை ஸ்தாபித்ததைத்தான் குறிப்பிட வேண்டும். ராஜாஜி ஏன் சுதந்திரக் கட்சியை ஸ்தாபித்தார்; தி. மு. க. போன்ற கட்சிகளுக்கு ஏன் அவர் ஆதரவு தருகிறார் என்று சிலர் கேட்கக் கூடும். இதற்கு ஒரே விடை அவர் தமது கோணம் முற்றிலும் சரியானது என்று நம்புவதுதான். நாம் செய்வது சரி என்று அவர் உறுதி பெற்றுவிட்டாரெனில், அதன்பின் அவர் அந்தப் பாதையிலேயே முன்னேறுவார். எத்தனை ஆபத்துக்கள் ஏற்படுமாயினும், நண்பர்களும் சகாக்களும் எவ்வளவு எதிர்த்தாலும் பொருட்படுத்த மாட்டார். உண்மையைச் சொன்னால், அவருக்குத் தமது சிந்தனைகளையும், உறுதியான நம்பிக்கைகளையும் தவிர வேறு நண்பரோ, சகாவோ கிடையாது. அறிவு வாதம் என்பதே அவரது வழிகாட்டியும் குருவும். விட்டுக் கொடுக்காத தமது கூரிய அறிவு வாதத்தால் அவர் பிறரது வாதங்களை மட்டும் வெட்டுவதில்லை. தம்மையுமே அறிவு வாதம் என்ற கத்தி முனைக்கு உட்படுத்திக் கொள்கிறார். மிக மிக மென்மையும், பேரன்பும் கொண்ட இதயம் படைத்தவர் ராஜாஜி. என்றாலும் அறிவு வழியே வாதம் புரியும் போது இந்த மென்மையும், அன்பும் மறைந்து நிற்கின்றன.

தமது உறுதியான கருத்துக்களைத் தீரத்துடன் பின்பற்றி அவர் வகுத்த கொள்கைகள் பல. சென்னை முதல் மந்திரியாக இருந்த போது அவர் அமலாக்கிய மதுவிலக்கு, உணவுக் கட்டுப்பாட்டு ரத்து இவை இந்தத் தீரத்துக்குச் சான்றாகும். அவரது கொள்கைகளை ஏற்க முடியாதவர்கள் இருக்கலாம்; இருக்கிறார்கள். எனினும், இவர்களும் அவர் எப்படித் தமது கருத்துக்களைச் சத்தியமான சித்தத்துடன் தளராமல் பின்பற்றுகிறார் என்பதை உணர்ந்தே ஆக வேண்டும்.



திரு ஆர். ஆர். திவாகர்

ராஜாஜியின் வாழ்வில் இரு மகத்தான விஷயங்களை மதிக்க வேண்டும். முதலாவது, அவர் ஆங்கிலம் தமிழ் இரண்டு இலக்கியங்களுக்கும் ஆக்கரீதியில் ஆற்றியுள்ள பணி. அவரது எழுத்து பொதுஜன ரஞ்சகமாக இருக்கும் போதே பொருளாழம் பெற்று விளங்குகிறது.

வழக்கிலுள்ள மொழி, எளிய விளக்கங்கள், எண்ணத் தெளிவு, தமது பொருளுக்கு அவர் சிக்கலின்றி எழுத்துருவம் தரும் பாங்கு, இவையே அவரது நூல்களைப் பண்டிதர் பாமரர் இருசாராரும் விரும்புவதற்கு முக்கியமான சாதனங்கள் எனலாம்.

ராஜாஜியின் மறுக்க முடியாத இரண்டாவது பெருமை அவர் அணு ஆயுத சோதனை பற்றியும், அணு ஆயுதப் போர் குறித்தும் தொடக்கக் காலத்திலிருந்தே எதிர்ப்பு முன்னணியை எடுத்துக் கொண்டு அதனை விடாமல் தொடர்ந்து வருவதாகும். இந்தியா அணு சக்தியை நாச வேலைக்குப் பயன்படுத்தாது என்ற சர்க்கார் கொள்கையைப் பிரதமர் 1954லேயே வெளியிட்டிருக்கிறார்; 1958-ல் அணு சோதனைத் தடையில் வல்லரசுகளின் உடன்பாடு ஏற்பட வேண்டும் என்றும் கூறினார். சர்க்காரின் கொள்கை ஒருபுறமிருக்க, இந்தியப் பிரஜைகளில் ஒருவர் என்ற முறையில் — மற்ற இந்திய மக்களின் சார்பில் — ராஜாஜி அணுப் போருக்கு எதிர்க் குரல் எழுப்பி, அணு வல்லரசுத் தலைவர்களுக்கெல்லாம் சோதனைகளை நிறுத்தும்படியும், அணு ஆயுத ஆபத்தைத் தவிர்க்கும்படியும் இடையறாமல் எழுதி வந்தார். ராஜாஜி தமது உள்ளார்ந்த ஆர்வத்தையும், பிறரைப் புது வழிக்குத் தூண்டுகிற ஆற்றலையும் பயன்படுத்தி, அணு சோதனைகளை நிறுத்துமாறு வல்லரசுகளை மனித குலத்தின் பெயரில் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று காந்தி சமாதானக் கழகம் கருதியது மிகவும் பொருத்தமேயாகும்.

''அணு ஆயுத சோதனையால் மற்ற நாடுகளின் சூழலை மாசுபடுத்த உங்களுக்கு ஏது உரிமை?'' என்று ராஜாஜி அணு வல்லரசுகளைத் தயங்காமல் கேட்டார். இந்தக் கேள்வியைத் தொடர்ந்து, ''இது எந்த நாட்டின் சட்டத்துக்கும், சர்வதேசச் சட்டத்துக்கும் விரோதமாகும். இது மனிதப் பண்புக்கே விரோதமாகும்'' என்றார்.

கடைசியில், அணு ஆயுத சோதனைத் தடையும் ஏற்பட்டு விட்டது. அது பூரணமாக ஏற்படவில்லை என்பது உண்மைதான். எனினும், உலகச் சூழலை விஷமாக்கி, இன்றைய மக்களையும், எதிர்கால மக்களையும் ஆபத்துக்குள்ளாக்கிய படுபாதகத்தை எதிர்த்துத் தங்கள் குரலை எழுப்ப இந்திய மக்கள் தவறவில்லை என்ற பெருமையை ராஜாஜி தேடித் தந்திருக்கிறார்.

சென்ற ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ராஜாஜி எங்களில் ஒருவராக இந்தத் தூதுப் பணியில் சென்றார். உலக சமாதானத்தை விரும்பி அவர் ஆற்றிய பணிகளுக்கு இது மகுடமாக அமைந்தது எனலாம். தூதுப் பணி நடைபெற்ற அந்தப் பரபரப்பு மிகுந்த நான்கு வாரங்களில் அவர் செயல் புரியும் பாங்கைக் கண்ட போது எங்களுக்கு அவர் வயோதிகர் என்றோ, அவரது சக்திகள் குன்றி விட்டதாகவோ, தமது காரியத்தில் அவர் அவநம்பிக்கை கொண்டிருப்பதாகவோ தோன்றவேயில்லை. தாம் கடவுளின் கையில் உள்ள ஒரு கருவி என்பதை அவர் உணர்ந்திருப்பதாகவே தோன்றியது. தம்மால் நிறைவுபெற வேண்டிய ஒரு திருப்பணி மிருக்கிறது என்று அவர் அறிந்திருந்ததாகத் தெரிந்தது. அந்தப் பணிக்கே தம்மை அளித்துக் கொண்டு, அந்தப் பணியில் தீவிரமான பக்தியுடன் அவர் தவை என்ற தத்துவத்தைத் தொடர்ந்து ஓதினார். அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் அவர் புரிந்த தொண்டு வாடிகனில் அவர் போப் ஆண்டவரைக் கண்டு அவரது அநுதாபத்தையும், ஆதரவையும் பெற்றதோடு பூர்த்தியாயிற்று.

சமீபத்தில் அணுசோதனை ஒப்பந்தம் கையெழுத்தான போது ராஜாஜியைப் பார்க்கிலும் மகிழ்ந்தவர் இருக்க முடியாது. தமது கடமையைப் பலன் பெறும் வகையில் ஆற்றியது குறித்து மகிழ்ச்சியும், திருப்தியும் கொண்டிருப்பதாக எனக்கு அவர் எழுதினார்.

ராஜாஜி இன்று நம்மிடையே சஞ்சரிக்கிறார்; என்றும் போல் அயராமல் உழைக்கிறார். இப்படியே அவர் நீண்ட காலம் வாழ்வாராக! வாழ்ந்து இன்று ஏற்பட்டுள்ள சோதனைத் தடை ஒப்பந்தம் பூரண சோதனை நிறுத்தமாக மலருவதைக் காண்பாராக!



உலக வாழ்க்கையில் பிரயோஜனம் இன்னது என்று நமக்குந் தெரியாமல் பெரும் பயன் தரும் பொருள்கள் பலவுண்டு. அவை தான் மிக முக்கியமான பொருள்கள். பயனை அறிந்து இதை அடைய வேண்டும் என்று நாம் விரும்பி வேட்டையாடி அடையும் பொருள்களைவிட நாமும் அறியாமல் பயன் தரும் பொருள்களே சிறந்தவை. கடவுளை அடைவதும், அதனால் அடையும் ஆனந்தமும், சாந்தியும் இந்தச் சிறந்த பொருள்களில் மிக மிகச் சிறந்தது.

○

சில குடியானவர்கள் மாட்டுக்கு வைக்கோலுக்காகவே நெல்லைப் பயிர் செய்யலாம். ஆனால்நெல்லின்சிறந்த பயன் மக்களுக்குவேண்டிய அரிசி. அதைப் போலவே நல்வழிக்காகத் தெய்வ பக்தியைப் பயிர் செய்யலாம். ஆனால் பக்தியின் முக்கிய பயன் ஆண்டவனைக் காண்பதும், கண்டு ஆனந்தமடைவதும். வைக்கோலுக்கென்று பயிர் செய்தாலும் அரிசி உண்டாகுமல்லவா? கடவுளைக் காண்பது அறிவு, ஆனந்தம். அதற்கு, அதுவே பயன்.

அரியாசனத்தில் ஜனகமகாராஜர்

கல்கி

[தலைவர் ராஜாஜி கவர்னர் - ஜெனரல் பதவி ஏற்றபோது எழுதப்பட்ட கட்டுரை]

புண்ணிய பாரத பூமியில் இன்றைய தினம் நம்மிடையே ஒரு ஜனக மகாராஜர் இருக்கிறார். பாரத நாட்டின் தென் பகுதியில் தெய்வத் தமிழகத்தில் பிறந்த புண்ணியர் அவர். அரண்மனை வாழ்வையும் ஆசிரமக் குடிசையையும் ஒன்றாகக் கருதுகிறவர். சுகத்தையும் துக்கத்தையும் சமமாக எண்ணுகிறவர். போற்றுதலினால் பூரிப்பதில்லை; வசை மொழிகளினால் ஆயாசமடைவதும் இல்லை. பதவியையும் அதிகாரத்தையும் அவர் தேடிச் செல்வதில்லை; அவை தேடி வரும்போது பயந்து ஒதுங்குவதுமில்லை. தாமரை இலை மீதுள்ள பனித் துளியைப் போல் எந்த விதப் பதவியையும் வகிக்கக் கூடியவர். வகித்து நடத்திய பதவி தம்மை விட்டுப் போனால் சிறிதும் சஞ்சலம் அடையாதவர்.

நண்பருக்கு நண்பர் அவர்; எதிரிகளுக்கும் அவர் நண்பர்! நம் காலத்தின் 'அஜாத சத்ரு' என்று சொல்லக் கூடிய சாத்விக புருஷர். அவரைச் சிலர் தங்களுக்கு எதிரி யென்றும், விரோதி என்றும் எண்ணுதல் கூடும். ஆனால் அவர் இந்தப் பூவுலகில் பிறந்த யாரையும் தன் எதிரியாகவோ விரோதியாகவோ எண்ணுவது கிடையாது.

**'' நிலையிற் றிரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது ''**

என்று தமிழ் மறை தந்த பொய்யாமொழிப் புலவர் வாக்கை இன்று நம் கண் எதிரே மெய்யாக்கி வருகிறவர். அவர் யார் என்று சொல்லவும் வேண்டுமா? நம் அருமைத் தலைவர் ராஜாஜி அவர்கள்தான்.


இந்தியா தேசமே பார்த்து வியக்கும் வண்ணம் ராஜாஜி சென்னை மாகாணத்தின் பிரதம மந்திரியாக இரண்டு வருஷம் பதவி வகித்தார். பதவியைத் துறக்க வேண்டிய காலம் வந்தது. ''பதவியைத்தான் விடப் போகிறோமே? எது எப்படிப் போனால் என்ன?'' என்று கைக்கு வந்திருந்த ஆபீஸ் 'பைல்'களை யெல்லாம் அப்படியே கட்டோடு திருப்பி அனுப்பி விட்டாரா? கிடையாது. இரவும் பகலும் தினம் இருபது மணி நேரம் வீதம் நாலு நாள் இடைவிடாது வேலை செய்தார்; கையில் இருந்த 'பைல்'களை யெல்லாம் பைசல் செய்தார். பைசல் செய்த பைல்களைச் சர்க்கார் வாங்கிக் கொடுத்திருந்த காரில் ஏற்றி வில்லைச் சேவகனையும் ராஜிநாமாவையும் கூட அனுப்பினார்.

அனுப்பிய அடுத்த நிமிஷம் என்ன செய்தார் என்று நினைக்கிறீர்கள்?

தமிழ் அகராதியை எடுத்து வைத்துக் கொண்டு, ஆங்கிலத்திலுள்ள விஞ்ஞானச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொல் கண்டுபிடிக்கும் வேலையில் ஈடுபட்டார்!

பதவியை ராஜிநாமா செய்ததற்கும் சிறை புகுந்ததற்கும் இடையில் மூன்று தினங்கள் இருந்தன. இந்த மூன்று தினங்களிலும் எத்தனை எத்தனையோ பேர்கள் அவரைப் பார்க்க வந்தார்கள். என்னென்னவோ சொன்னார்கள். சிலர் உபசார மொழி புகன்றார்கள்; சிலர் ஆறுதல் கூறினார்கள்; சிலர் துக்கம் விசாரித்தார்கள்; சிலர் அவரைப் போற்றிப் பாராட்டினார்கள்.

'கல்கி' அவர்களுடனும், ஸ்ரீ சதாசிவம் அவர்களுடனும் அருமைத் தலைவர்.



அதை யெல்லாம். ராஜாஜி ஒரு காதால் வாங்கி இன்னொரு காதால் விட்டுக் கொண் டிருந்தார். வந்தவர்கள் போனவுடனே மறு படியும் தமிழ் அகராதியைப் புரட்டத் தொடங்கினர்! அவருடைய உள்ளம் நிம்மதி யும் சாந்தமும் பெற்றுச் சம நிலையில் நின்றது.

ராஜாஜி பிரதம மந்திரி பதவி வகித்த தால் பிரதம மந்திரி பதவி உயர்வு பெற்றது. அம்மாதிரியே அவர் கவர்னர் உத்தியோகம் பார்த்த காரணத்தினல் கவர்னர் பதவியும் உயர்வு அடைந்தது!

சென்ற 1947ம் வருஷம் ஆகஸ்டு 15-ம் தேதி இந்தியா பூரண சுதந்திர ஆட்சி அடைந்த போது, ராஜாஜி மேற்கு வங்காளத் தின் கவர்னர் பதவியை ஏற்கும்படி நேர்ந்தது.

அதற்கு ஒரு வருஷத்துக்கு முன்னல் 1946ம் ஆண்டு ஆகஸ்டில் கல்கத்தா நகரிலே தான் சமூகத் துவேஷப் படுகொலைப் பேய் தன்னுடைய கோர பயங்கர தாண்டவத்தை முதன் முதலாக ஆரம்பித்தது.

எனவே 1947ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15ந் தேதி கல்கத்தாவில் என்ன நேரிடுமோ என்று அனைவரும் கலக்கமுற்றனர்கள்.

''ஐயையோ! கல்கத்தாவுக்கா போகி றீர்கள்? ரொம்பத் தொல்லையாயிற்றே?'' என்றனர்கள்.

''தொல்லை யென்றல் யாராவது ஒருவர் அதைத் தாங்கித்தானே ஆகவேண்டும்? என் முதுகிலேயே சுமந்து பார்க்கிறேன்!'' என்றார் ராஜாஜி.

ஸ்ரீ சரத் போஸின் கோஷ்டியார் சிலர் ''ராஜாஜி வேண்டாம்; திரும்பிச் செல்க!'' என்றனர்கள். ''ஆகட்டும், ஆகட்டும்! வந்த வேலை முடிந்ததும் திரும்பிச் செல்லத்தான் போகிறேன்!'' என்றார் ராஜாஜி.

ராஜாஜி கல்கத்தாவுக்குச் சென்ற வேளை நல்ல வேளை; பலர் எதிர்பார்த்தபடி அங்கு சமூக பயங்கரக் கலகங்கள் நடைபெறவில்லை. யாரும் எதிர்பாராத முறையில் ஹிந்து—முஸ் லிம் சகோதர பாவம் தோன்றி வளர்ந்தது.

ராஜாஜி கல்கத்தாவுக்கு வந்த மறு தினமே ''ராஜாஜி வேண்டாம்!'' என்ற கோஷத் துக்குப் பதில், ''ராஜாஜிக்கு ஜே!'' என்ற கோஷம் கிளம்பிற்று. அந்தக் கோஷம் நாளுக்குநாள் வளர்ந்து வலுப்பெற்று வந்தது.

ராஜாஜி மேற்கு வங்காள கவர்னராக இருந்த பத்து மாத காலத்தில் வங்க மக்க ளிடையே தேசபந்து தாஸையும் நேதாஜி போஸையும் போன்ற அன்பும் போற்றுதலும் பெற்றார். அரசியல் உலகத்தில் இத்தகைய ஓர் அற்புதம் நடந்ததை நம் கண் முன்னல் கண்டு மகிழ்ந்தோம்.

இந்த 1948 ஜூன் மாதம் 21ந் தேதி யன்று ராஜாஜியினல் இந்தியாவின் கவர்னர் ஜெனரல் பதவி உயர்வு பெறப் போகிறது! இதற்கு மேல் உயர்வதற்கு இல்லை யென்று ராஜாஜியின் பதவிக் காலத்தோடு அது முடிந்து விடவும் போகிறது!

பதவி கர்வம், அதிகார ஆசை என்னும் இரண்டும் இராவண கும்பகர்ணர்களாக உரு வெடுப்பதுண்டு. சுகபோக மோகம் என்னும் மோகினியாகவும் அது உருவெடுத்து விடும். இதை முன்னிட்டுத்தான் நம் அரும்பெரும் வடநாட்டுத் தலைவர்கள் நீர்க்காலோசனை செய்து, அரியாசனத்தில் ஜனக மகாராஜர் வீற்றிருந்ததுபோல் கவர்னர் ஜெனரல் பத வியை வகிக்கக் கூடிய வைராக்கிய சீலரை அப் பதவிக்குத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

ஆதிகாலத்திலிருந்து இந்திய சாம்ராஜ் யங்கள் பல அஸ்தினபுரத்தைத் தலைநகராகக் கொண்டு செழித்தோங்கி யிருக்கின்றன. இந் திய நாட்டுக்குத் தன் பெயரை அளித்த வீராதி வீரன் பரத சக்கரவர்த்தி அஸ்தின புரத்தில் ஆட்சி புரிந்தான். பரதனுடைய வம்சத்தில் வந்த கடைசி சக்கரவர்த்தியான தர்மபுத்திரர் அஸ்தினபுரத்துச் சிம்மாசனத் திலேதான் அரசு வீற்றிருந்தார்.

பிற்பாடு, சரித்திர பூர்வமான காலத்தில் அஸ்தினபுரம் இருந்த இடத்தில் டில்லிமாநகர் எழுந்தது. மொகலாய சக்கரவர்த்திகளில் தர்மநெறி நின்று ஆட்சி புரிந்தவரான அக்பர் சக்கரவர்த்தி டில்லிமாநகரின் சிம்மாசனத் திலேதான் வீற்றிருந்தார்.

பரத மகாராஜாவுக்கும் தர்மபுத்திர மகா ராஜாவுக்கும் அக்பர் சக்கரவர்த்திக்கும் அடுத்தபடியாக அதே வரிசையில் சேர்க்கக் கூடியவரான ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபா லாச்சாரியார் இப்போது டில்லி அரியாசனத் தில் ஏறி வீற்றிருக்கப் போகிறார்.

ராஜாஜி கவர்னர் ஜெனரல் பதவிக்கு வந்ததும் நாட்டில் பஞ்சம் தீரும் என்றும், வறுமை ஒழியும் என்றும், வளம் செழிக்கும் என்றும், மாதம் மும்மாரி பெய்யுமென்றும், நாட்டில் பாலும் தேனும் கலந்து ஆருக ஓடு மென்றும் நாம் சொல்ல முடியாது.

பசுவும் புலியும் ஒரு துறையில் தண்ணீர் குடிக்கும் என்றும், சமூகத் துவேஷம் அந்த க்ஷணமே ஒழிந்து நாட்டில் சகோதர பாவம் நிலவும் என்றும் நாம் சொல்வதற்கில்லை.

இம்மாதிரி சொல்லப்படும் ஜோசியங்களை யெல்லாம் நாம் நம்பவும் தயாராயில்லை.

ராஜாஜி கவர்னர் ஜெனரலாக வந்த பிறகும் இயற்கையின் கோபத்தினல் தேசத் துக்கு விளையக் கூடிய கேடுகளும் மனிதர் களின் மடமையினல் நாட்டுக்கு விளையக் கூடிய தீமைகளும் நேர்ந்து கொண்டுதான் இருக்கும்.

கடவுளின் நியதி என்பதாக ஒன்று இருக் கிறதல்லவா? அதன்படி உலகத்தில் எது எது எப்படி நடக்க வேண்டுமோ, அப்படி நடந்து கொண்டுதானிருக்கும். இயற்கையின் விபரீத கோபங்களுக்கும் தெய்வத்தின் அறிய முடி யாத சித்தத்துக்கும் முன்னல் யார்தான் என்ன செய்ய முடியும்?

ஆனல் ஒன்று நிச்சயமாய்ச் சொல்லத் தயாராயிருக்கிறோம்.

புது டில்லியின் அரியாசனத்தில் ராஜாஜி வீற்றிருக்கும்போது இந்தியா தேசத்தை அன்பும் அறிவும் ஆட்சி புரியும்; கருணையும் தயையும் பொறுமையும் நிடசித்தமும் அதி காரம் செலுத்தும்; அணுவளவும் நெறி தவறாத நடுக் கண்ட நியாயம் சகலருக்கும் கிடைக்கும்.

அசாதாரணமான அதிருஷ்டம்

காஸா சுப்பராவ்

ராஜாஜி இந்நாட்டில் தனிப்பட்டதொரு ஸ்தானத்தை வகிக்கிறார். முன்பு மகாத்மாவுடன் சேர்ந்திருந்தவர்களில் இன்று அதிகார பதவியில் அமர்ந்து அதிலேயே கவனம் முழுவதையும் செலுத்தாமலிருக்கும் ஒரே தலைவர் அவர்தான். மற்றவர்கள் பதவி வகிப்பதாலும், அதிலேயே ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்ற சபலத்தாலும் தங்களின் நன்னடத்தை நீர்த்துப் போய், பழைய தோலின் கீழ் புதிய மனிதர்களாக வாழ்கிறார்கள். இப்படிப் பழைய தலைவர்கள் யாவரும் உருமாறியிருக்கும்போது இந்த மாறுதலுக்கு ஆளாகாத காந்திய மரபின் தனிப் பெரும் தலைவராக இருக்கிறார் ராஜாஜி. காந்திஜி உயிர் வாழ்ந்தபோது ராஜாஜி அவரை நாட்டின் மாபெரும் தலைவராகவும் குருவாகவும் முழு மனத்துடன் ஏற்றார் எனினும் அவருக்கு அடிமையாக இருக்கவில்லை. தம் மனச்சாட்சிக்கு ஒப்பியே காந்திஜிக்கு உட்படிந்து நடந்தவர் ராஜாஜி. காந்திஜியிடமிருந்து தாம் பிணங்குவதும் இந்த விசுவாசத்தின் ஓர் அங்கமே எனக் கருதி அவ்வாறே அவரிடமிருந்து மாறுபடும் உரிமையையும் பல சமயங்களில் செயல்படுத்தியிருக்கிறார் ராஜாஜி. ராஜாஜியின் இணங்காமை வெறும் எதிர்மறைச் செயலில்லை. அதுவும் ஆக்க சக்தி பெற்றிருந்தது. மகத்தான சந்தர்ப்பங்களில் இந்தச் சக்தியானது காங்கிரஸ் கொள்கையில் ஊறியதனால் முந்தைய தவறான முடிவுகளை மடிய வைத்திருக்கிறது.

அறிவுத் தெளிவை மறைத்து மேக மூட்டம் போடுவது சுயநலம்தான். ராஜாஜியின் பொது வாழ்வில் இவ்வாறு சுயநலம் என்பது ஒரு போதும் குறுக்கிட்டதில்லை. அவரது வாழ்க்கையைத் தேர்ந்த அறிவும், தெள்ளிய சிந்தனையும் பிரகாசப்படுத்துவதற்குக் காரணம் அவர் சுயநலனைத் தேச நலனுக்காகப் பரிபூரணமாகத் தியாகம் செய்துள்ளது தான். இதுவே அவரது அடிப்படைத் தத்துவம். இது ஏதோ வறண்ட தத்துவம் அல்ல. இந்தத் தத்துவத்தைக் கடைப் பிடிக்கும் அவரது அரசியல் வாழ்க்கையில் நாம் காண்பது போன்ற செழிப்புள்ள அநுபவங்களை, நானாவிதமான அநுபவங்களை வேறெவர் வாழ்விலும் காணமுடியாது. அநுபவத்திலும், அறிவிலும், ஆற்றலிலும், மனோபலத்திலும், நன்னடத்தையிலும், தன்னலமில்லாப் பொதுப் பணி உணர்விலும் சூரியனாக விளங்கும் அவருக்கு முன்னால் மற்றவர் யாரும் மெழுகுவர்த்திக்குக்கூடச் சமானமில்லை என்று கூறுவது அதிசயோக்தி அல்ல; கலப்பற்ற உண்மையே.

நிலைமைகளைக் காணக் காண ராஜாஜியின் தீர்க்கதரிசனம் மேன் மேலும் விருத்தியாகிறது. ஏனெனில், குறுகிய நோக்குமுள்ள மந்திரிகளும், அரசாங்கங்களும் வகுக்கும் அவலத் திட்டங்கள் நொறுங்குவதைக் காணக் காண அவருக்கு ஈசுவரனின் தெய்விகத் திட்டத்தில் நம்பிக்கை மேலும் ஓங்குகிறது. அந்த நம்பிக்கையிலேயே அவர் நிலை நிற்கிறார். நிகழ்ச்சிகளையும், கொள்கைகளையும் குறித்த அவரது விமரிசனங்களை ஞான முத்துக்கள் எனலாம். அந்த முத்துக்களின் அழகைத் தற்போது யாவரும் காணா விட்டாலும், அவற்றின் அழியாத ஒளியை எதிர்காலம் மெருகிட்டுக் காட்டும். இந்த ஒளி காந்தும் ஞான முத்துக்களின் களஞ்சியமாயிருக்கும் பாக்கியம் நமது 'ஸ்வராஜ்யா'வுக்குக் கிட்டியிருக்கிறது.

'ஸ்வராஜ்யா'வை ராஜாஜியின் பத்திரிகை, அவரது குரல், அவரது ஒலிபெருக்கி, அவருடைய ஆயுதம் என்றெல்லாம் சொல்கிறார்கள். சிலர் இதன் ஆசிரியராகிய நான் என் சுதந்திரத்தைக் காத்துக் கொள்ளாததாக இடித்துக் காட்டி, இழித்துப் பேசுவதாக நினைத்தும் இப்படிச் சொல்கிறார்கள். அவர்கள் இழிவாகச் சொன்னாலும் நான் இவை என்னைக் கௌரவிக்கும் சொற்கள் என்றே நினைக்கிறேன். சித்திரம் ஒன்று இருக்கிறது. அதன் சொந்தக்காரர் யார்? அதைத் தீட்டும் சைத்திரிகரா? அதைக் காணும் பார்வையாளரா? அல்லது அதை வாங்கிச் சுவரில் தொங்க விட்டிருக்கிறாரே, அவரா? சித்திரம் போலவேதான் பத்திரிகையும். அதன் உரிமையாளர் யார் என்பதற்கு இலக்கணம் சொல்ல முடியாது. பத்திரிகை வாழ்வதற்குச் சிறப்பான முறையில் உதவி புரியும் எல்லோருக்கும் அது உடைமைப் பொருளாகும். (ஆசிரியரின்) சுதந்திரம் என்பது சீரிய சிந்தனையுடன் இணங்க மறுப்பதில் இல்லை. நான் அடிமை இல்லை என்பதற்காக யாருடனும் இணங்காமலிருந்து அந்த இணங்காமையைக் கோஷிப்பது சுதந்திரமாகி விடாது. இன்று தேசத்தின் விலை மதிப்பிட முடியாத செல்வமாகவும், இனி வரப் போகிறவர்களின் நம்பிக்கைக்கு ஓர் உருவமாகவும் உள்ள ஒரு பேரறிவாளரை எந்தப் பிரதிபயனும் எதிர்பாராமல் அண்டி வாழ்வது மனச்சாட்சி படைத்த எந்தப் பத்திரிகையாளனுக்கும் தெம்பூட்டி மகிழ்விக்கும் ஓர் அசாதாரணமான நல்லதிருஷ்டம் என்பதே என் கருத்து.

(ராஜாஜியுடைய எழுபத்தியொன்பதாவது ஜயந்தியின்போது எழுதியது)



பொன் விலங்கு

மணிவண்ணன்




நாற்பத்தெட்டாவது அத்தியாயம்

பூபதி உயிரோடிருந்தவரையில் தன்மேல் வெறும் பொறாமையோடிருந்தவர்கள் எல்லாரும் இப்போது அதை ஓர் எதிர்ப்பாக வெளிப்படையாக மாற்றிக்கொண்டு செயல்படுவது சத்தியமூர்த்திக்குப் புரிந்தது. முதல்வர், துணை முதல்வர், ஹெட் கிளார்க் எல்லாரும் ஒவ்வொரு வகையில் ஒவ்வொரு காரணத்தால் அவனுக்குக் கெடுதல் செய்யக் காத்திருப்பவர்கள்தான். புதிய நிர்வாகியாகிய மஞ்சள் பட்டியாரோ அவனை அறவே வெறுத்து மனம் கொதித்துக் கொண்டிருப்பவர். கெடுதல் செய்வதையே பொழுதுபோக்காகக் கொண்டிருப்பவர்களுக்குப் பயந்தும், நயந்தும் அமைவதனால் சமூகத்துக்குப் பொதுவான நன்மை எதுவும் கிடையாது. சில மாடுகளின் இரத்தத்தை உறிஞ்சுவதற்காக 'உண்ணி' என்ற பூச்சிகள் அந்த மாடுகளின் உடலிலேயே அட்டை போல் ஒட்டிக் கொண்டிருக்கும். அதைப்போல் சமூகத்தில் உள்ள நல்லவர்களின் பொதுவான நலத்தை உறிஞ்சிக் கொழுப்பதற்குச் சுயநல உண்ணிகளாகிய சில கெட்டவர்களும் மிக அருகில் இருப்பார்கள். அப்படிக் கெட்டவர்கள் மல்லிகைப்பந்தலிலும் இருப்பதைக் கண்டு சத்தியமூர்த்தி வியப்படைந்துவிடவில்லை. அவன் கல்லூரி முதல்வரை அவருடைய அறையில் போய்ச் சந்தித்து விட்டு வந்த அரை மணி நேரத்துக்கெல்லாம் மறுபடி ஊழியன் தேடி வந்து அவனிடம் கொடுத்துவிட்டுப் போன உறையில் இரண்டு பெரிய கடிதங்கள் இருந்தன. ஒரு கடிதத்தில் கல்லூரி நிர்வாகக் குழுவும் அதன் தலைவரும் முதல்வரும் சத்தியமூர்த்தி 'உதவி வார்டனாக' இருந்து இதுவரை தன் கடமைகளைச் சரிவரப் புரியவில்லை என்று கருதுவதால் அவனை அந்தப் பதவியிலிருந்து உடனே நீக்குவதாகவும் அவனிடம் உள்ள விடுதி சம்பந்தமான காரியங்களை வார்டனிடம் 'சார்ஜ்' ஒப்படைத்துவிட்டு விலகிவிட வேண்டும் என்பதாகவும் கண்டிருந்தது. இன்னொரு கடிதத்தில் ஏற்கெனவே முதல்வர் அவனிடம் கேட்டிருந்த 'எக்ஸ்பிளநேஷனுக்கு'ச் சரியான மறுமொழி கொடுக்கப்படவில்லை என்றும் அடுத்த நாள் காலைக்குள் இன்ன இன்ன குற்றச்சாட்டுக்களுக்குப் பொருந்திய மறுமொழி கொடுத்தாக வேண்டுமென்றும்

கண்டிருந்தது. சூழ்நிலை மிகவும் மனம் வெறுக்கத் தருந்த முறையில் உருவாகி விட்டதைப் பார்த்து அவன் கவலைப்படவில்லை. மறு நாள் அவன் கல்லூரி முதல்வருக்கு எழுதிய மறுமொழிக் கடிதம் இப்படி ஆரம்பமாகி யிருந்தது:

''என்னுடைய நினைவு, சொல், செயல் ஆகியவற்றின் நன்மை தீமைகளை உற்று ஆராய்ந்து கடுமையாகத் தாக்குவதற்கும், பாராட்டுவதற்கும் சுத்திக் காட்டுவதற்கும், எனக்குள்ளேயே பாரபட்சமற்ற விமரிசகன் ஒருவன் இருக்கிறான். அந்த விமரிசகனுக்குத்தான் மனச்சாட்சி என்று பெயர். மற்றவர்களுடைய பொறுமையும் காழ்ப்பும் நிறைந்த விமரிசனத்தை விட என்னுள்ளேயே இருக்கும் இந்த உண்மையான விமரிசகனுடைய கருத்துக்குத்தான் நான் அதிகமான மதிப்பளிக்க முடியும். அப்படி மனச்சாட்சிக்கு மதிப்பளிக்காமல் எந்தக் காரியத்தையும் நான் செய்ததில்லை; செய்ய நினைத்ததுமில்லை. விரிவுரையாளனாகவும், விடுதி உதவி வார்டனாகவும் இருந்து, நான் இந்தக் கல்லூரியில் ஒவ்வொரு விநாடியும் என்னுடைய காரியங்களை மனச் சாட்சிக்குத் துரோகம் செய்யாமல் நன்றாகத்தான் ஆற்றியிருக்கிறேன். என்னை உதவி வார்டன் பதவியிலிருந்து விலக்கியிருப்பதாக நிர்வாகக் குழுவின் சார்பில் எழுதி யிருக்கிறீர்கள். விலக்கவும், நீக்கவும், உங்களுக்குத் தாராளமாக அதிகாரம் உண்டு. எல்லாவற்றையும் செய்து முடிக்கும் அதிகாரமுள்ளவர்கள் எதை வேண்டுமானாலும் செய்யலாம். நீங்களும் அப்படி நினைத்துக்கொண்டுதான் இதைச் செய்திருக்கிறீர்கள்..........'' என்று தொடங்கி அவன் எழுதியிருந்த பன்னிரண்டு பக்கக் கடிதம் மறு நாள் காலையில் முதல்வருடைய மேஜைக்குப் போய்ச் சேர்ந்தது. தற்செயலாக அன்று காலை



அவன் கல்லூரிக்குள் நுழைந்த போது — காலையில் சர்க்கரை போடாத கசப்புக் காப்பியை விடுதியில் வழங்கியதாகவும் — சர்க்கரையைக் குறைத்துச் செலவழிக்க வேண்டுமென்று வார்டன் கூறியிருப்பதால் விடுதியின் ஊழியர்களை வற்புறுத்தி வினவியபோதும்

அவர்கள் சர்க்கரை தர மறுத்ததாகவும் சில மாணவர்கள் வந்து குறை தெரிவித்தார்கள். மாணவர்கள் கல்லூரி உணவு விடுதி சம்பந்தமான எந்தக் குறையை வந்து தெரிவித்தாலும் அதைச் சத்தியமூர்த்தி பொறுப்பாக உடனே நிவர்த்தி செய்து மாணவர்களின் மனக்கசப்பைப் போக்கி விடுவான். அதனால் மாணவர்கள் சத்தியமூர்த்தியைத் தேடிக் கொண்டு வந்து எதை வேண்டிக் கொண்டாலும் அது நிறைவேறி விடும் என்கிற முழு நம்பிக்கையோடு வேண்டிக் கொள்வது வழக்கமாகியிருந்தது. ஆனால் இன்றோ தேடி வந்திருந்த மாணவர்களே கேட்டுத் திகைக்கும்படியான ஓர் உண்மையை அவர்களிடம் தெரிவித்தான் சத்தியமூர்த்தி.



பத்திரிகைகளில் யார் படம் வெளியாகிறதோ அவர் தலைவர் என்று அர்த்தமல்ல. ஒவ்வொரு கிராமத்துக்கும், ஜில்லாவுக்கும், நகரத்துக்கும் வயல் வெளியிலும், தொழிற்சாலையிலும், வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலுமே தலைவர்கள் தேவை. நல்ல தலைமை இல்லா விட்டால், நாகரிகம் ஏது?


"இளம் நண்பர்களே! கல்லூரி விடுதியில் வழங்கும் காப்பி சம்பந்தமாக உங்களுக்கு ஏற்பட்டிருக்கிற கசப்பை நான் இன்று மாற்ற முடியாமல் இருப்பதற்காகத் தயவு செய்து நீங்கள் **என்னை** மன்னிக்கவேண்டும். ஏனென்றால் நேற்றுப் பிற்பகலிலிருந்து நான் இந்தக் கல்லூரியில் வெறும் தமிழ் விரிவுரையாளராகத்தான் இருக்கிறேன். விடுதி உதவி வார்டனாக இல்லை..."

இதைக் கேட்டு மாணவர்களுக்குப் பெரிதும் அதிர்ச்சியாக இருந்தது.


"ஏன் சார்? நீங்களே வேண்டாமென்று விட்டு விட்டீர்களா?"

"இல்லை! அவர்களே வேண்டாமென்று விட்டு விட்டார்கள். என்னைக் காட்டிலும் சுறுசுறுப்பாகவும் நன்றாகவும் உங்களுக்கு உதவி செய்ய முடிந்த யாராவது ஒருவரை அந்தப் பதவிக்கு நியமிக்கப் போவதாகக் கல்லூரி முதல்வர் கூறியிருக்கிறார். அதனால் நீங்கள் கவலைப்படாமல் இருக்கலாம்."

"அப்படிச் சொல்லாதீர்கள் சார்! இந்தச் செய்தியைக் கேட்டு எங்களுக்கு இரத்தம் கொதிக்கிறது" என்று ஆத்திரப்பட்டுக் கூறினான் ஒரு மாணவன். சத்தியமூர்த்தி ஒரு புன்முறுவலோடு அந்த மாணவர்களுக்கு விடை கொடுத்தனுப்பி விட்டு மேலே நடந்தான். மாணவர்களின் நடுவே சத்தியமூர்த்திக்கு எவ்வளவு செல்வாக்கும், புகழும் உண்டு என்பது கல்லூரி முதல்வருக்குத் தெரியும். அதனால்தான் அவனை உதவி வார்டன் பதவியிலிருந்து நீக்கிய செய்தி எந்த விதமான பரபரப்புணர்ச்சியுடனும் மாணவர்களிடையே பரவி விடாமல் அவர் கவனமாயிருந்தார். ஆனால் செய்தி எப்படியோ பரவி விட்டது. லேடி-டைப்பிஸ்ட்-'சத்தியமூர்த்திக்காக என்ன கடிதம் டைப் செய்யப்பட்டது' என்ற இரகசியத்தைக் கல்லூரி லைப்ரேரியன் ஜார்ஜிடம் சொல்லி, ஜார்ஜ், அதை இன்னும் யாரிடமோ சொல்லி எப்படியோ மாணவர்களிடையே முதல்வரும், நிர்வாகிகளும் சத்தியமூர்த்திக்கு அநீதி இழைத்திருக்கிறார்கள் என்ற உண்மை பரவி விட்டது. அதன் விளைவு இருந்தாற்போலிருந்து பெரிதாக விசுவரூபம் எடுத்தது. விடுதி மாணவர்கள் ஸ்டிரைக் செய்தார்கள். திடீரென்று கல்லூரி முதல்வரே எதிர்பாராதபடி நண்பகல் உணவின்போது ஹாஸ்டல் உணவு விடுதிக்குள் ஒரு மாணவனும் நுழையவில்லை. உணவு மேஜைகளில் விரித்த இலைகளும் தண்ணீர் நிரம்பிய டம்ளர்களும் அப்படி அப்படியே கிடந்தன. பரிமாறுகிறவர்களும், சமையற்காரர்களும் சாயங்காலம் வரை காத்திருந்து பார்த்தார்கள். 'மெஸ்'ஸிற்குள் ஒரு மாணவன் கூட எட்டிப் பார்க்கவில்லை. சத்தியமூர்த்தியே மறுபடியும் உதவி வார்டனாக வேண்டுமென்பது விடுதி மாணவர்களின் கோரிக்கையாக இருந்தது. நாளுக்கு நாள் இதே ஸ்டிரைக் இன்னும் தீவிரமாகியது. முதல் நாள் உணவு விடுதிச் சாப்பாட்டை மட்டும் பகிஷ்காரம் செய்த மாணவர்கள் மறுநாள் சத்தியமூர்த்தியின் வகுப்பு ஒன்றைத்தவிர மற்ற எல்லா ஆசிரியர்களின் வகுப்புக்களையும்கூடப் பகிஷ்காரம் செய்தார்கள். 'முதல்வரின் அநீதி ஒழிக' 'முதல்வர் சத்தியமூர்த்தி அவர்களிடம்,



பிரபல தொழில் பிரமுகர், திரு என். மஹாலிங்கம் M. L. A. அவர்களின் மைத்துனரும், பொள்ளாச்சி ஆனமலைஸ் இஞ்ஜினீரிங் பார்ட்னருமான செல்வன் அ. அழகப்பனுக்கும் சமத்தூர் ஜமீன்தார் திரு பி. கே. வானவராயர் அவர்கள் குமாரத்தி செல்வி ஜயகுமாரிக்கும் 4-11-63 அன்று சமத்தூரில் விமரிசையாக நடந்த திருமணத்துக்குத் தமிழ்நாடு அமைச்சர்களும் பல முக்கியஸ்தர்களும் வந்து கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



கோவை சதர்ன் டெக்ஸ்டைல்ஸ் மானேஜர், செல்வன் D. ஜெயபால் அவர்களுக்கும், கோவை ஸ்ரீ லக்ஷ்மி பவுண்டரி, மேனேஜிங் பார்ட்னர் ஸ்ரீ B. நாராயணசாமி நாயுடு அவர்கள் குமாரத்தி செல்வி N. சாந்தாவுக்கும் சமீபத்தில் கோவையில் நடந்த திருமணத்துக்கு, நண்பர்களும் முக்கியஸ்தர்களும், தொழில் பிரமுகர்களும் வந்திருந்து சிறப்பித்தார்கள்.

நியாயமாக நடக்க வேண்டும்' 'உதவி வார்டனை மாற்றாதே' என்றெல்லாம் அங்கங்கே தட்டிகளிலும், சாலைகளில் சுண்ணாம்பினாலும் கொட்டை கொட்டையாக எழுதி யிருந்தார்கள் மாணவர்கள். நான்கு நாட்கள் இதே நிலைமை நீடித்தது. கல்லூரி விடுதியில் சிற்றுண்டியும், பகல், இரவு உணவுகளும் நாடுவாரின்றி, வீணாகிச் சீரழிந்தன.

''ஸ்டிரைக்கில் சேர்ந்திருக்கிற முதலாண்டு மாணவர்களை எல்லாம், 'செலக்ஷனில்' தொலைத்துவிடுவேன், தொலைத்து! மரியாதையாக விடுதிக்குச் சாப்பிடச் செல்லுங்கள். ஒழுங்காக வகுப்புக்களுக்கு வந்து சேருங்கள்'' என்று பிரின்ஸிபால் மிரட்டியது பயன் படவில்லை. சத்தியமூர்த்தி மாணவர்களின் இந்த விதமான குமுறலையும் கொதிப்பையும் தடுக்க நினைத்தாலும் முடியவில்லை.

'அவர்கள் நியாயத்துக்காகப் போராடுகிறார்கள். எனக்காக மட்டும் போராடவில்லை. அவர்களை நான் தடுத்தால் 'நானே கல்லூரி முதல்வர் செய்தது நியாயம்' என்று ஒப்புக் கொள்வது போலாகும்!' என்பதாக எண்ணி அவன் அமைதியாக இருந்தான். நான்காவது நாள் மாலை முதல்வரும், நிர்வாகியும் இரகசியமாகச் சந்தித்து 'ஸ்டிரைக்கை எப்படி ஒடுக்குவது' என்று பேசி ஆலோசனை செய்து சத்தியமூர்த்திக்கு இன்னொரு குற்றச் சாட்டுக் கடிதத்தைக் கொடுத்தனுப்பினார்கள். அதில் மாணவர்களை அவன் தான் 'ஸ்டிரைக்' செய்யத் தூண்டினான் என்றும் ஸ்டிரைக்கை வாபஸ் வாங்குவதற்கான முயற்சிகளில் அவன் ஈடுபடாவிட்டால் உடனே அவனை விரிவுரையாளர் பதவியிலிருந்தும் 'ஸஸ்பெண்ட்' செய்ய நேரும் என்றும் பயமுறுத்தி யிருந்தார்கள். 'நான் யாரையும் எதற்கும் தூண்டவில்லை. நீங்கள்தான் உங்கள் செய்கைகளின் மூலம் அருமையான மாணவர்களை இப்படியெல்லாம் ஆவேசம் கொள்ளும்படி தூண்டியிருக்கிறீர்கள். அவர்கள் கோருகிற நியாயத்தைத் தடுக்க எனக்கே உரிமை இல்லை. அவர்கள் உங்களிடம் நியாயம் கேட்கிறார்கள். நீங்கள் அதை அளிக்க முயற்சி செய்வதுதான் அவர்களை 'ஸ்டிரைக்'கிலிருந்து மீளச் செய்வதற்கு வழி' என்று கல்லூரி முதல்வருக்குச் சுருக்கமாகப் பதில் அனுப்பி விட்டான் அவன். **ஆசிரியர்கள் சத்தியமூர்த்தியை அணுகி நின்றாலே கேடு வருமோ என்று அஞ்சினார்கள்.** மிகச் சில நாட்களில் அங்கே அவன் தனியானான். அவன் வந்து போகிற வழியும் யாரும் துணையற்ற தனி வழியாகியது.

''இந்தப் பையனை வேலைக்காக 'இண்டர்வ்யூ' செய்யும் போதே பழைய நிர்வாகியிடம் நான் எவ்வளவோ வற்புறுத்திச் சொன்னேன். இவன் அரசியல் சம்பந்தம் உள்ளவனாக இருப்பானோ என்று சந்தேகமாக இருக்கிறது சார்! இந்த மாதிரி ஆட்களை உள்ளே விட்டு விட்டால் 'ஸ்டிரைக்' எல்லாம் வந்து காலேஜ் குட்டிச்சுவராகிவிடும். மாணவர்கள் பாழாகி விடுவார்கள்'—என்று முட்டிக் கொண்டேன். அவர் கேட்கவில்லை. இப்போது நான் கிடந்து அவஸ்தைப்பட வேண்டியிருக்கிறது'' என்று முதல்வர் வாய்க்கு வாய் பேசுகிறவர்களிடம் எல்லாம் சத்தியமூர்த்தியை அதிபயங்கரவாதியாக உருவாக்கிக் காட்ட முயன்று கொண்டிருந்தார். மற்ற மாணவர்கள் கல்லூரி வாயிலில் நின்று மறியல் செய்ததன் காரணமாகப் பெற்றோர்களுக்கும், முதல்வருக்கும், ஆசிரியர்களுக்கும் பயந்து வகுப்புகளுக்குப் போக நினைத்த சில மாணவர்கள்கூட வாயிற் பக்கத்திலேயே தடுக்கப்பட்டார்கள். மஞ்சள் பட்டியாரும், கல்லூரி முதல்வரும் நிலைமை மிகவும் கடுமையாவதை உணர்ந்து ஒரு நாள் மாலை ஆறு மணிக்கு மேல் கல்லூரி அலுவலக அறையில் நீண்ட நேரம் கலந்து பேசி ஆலோசனை செய்தார்கள். கடைசியில் ஏழு ஏழரை மணிக்கு அவர்கள் சத்தியமூர்த்தியின் அறைக்குச் சொல்லி அனுப்பி அவனை வரவழைத்தார்கள். சத்தியமூர்த்தியைப் பயமுறுத்திப் பார்த்தார் மஞ்சள்பட்டியார்! ஏதோ அடிமையாக வந்த வேலைக்காரர்களை மிரட்டுவதுபோல் அவனை மிரட்டினார்:

''எண்ணைக்கிருந்தாலும் உன்னை இந்தக் காலேஜிலிருந்து சீட்டுக் கிழித்

பொன் விலங்கு

சில மாடுகளின் இரத்தத்தை உறிஞ்சுவதற்காக உண்ணி என்ற பூச்சி அவற்றின் உடலிலேயே ஒட்டிக் கொண்டிருப்பதைப் போல் சமூகத்தில் நல்லவர்களின் பொது நலனை உறிஞ்சிக் கெடுக்கும் சில கெட்டவர்களும் மிக அருகிலேயே ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள்.



உள்ளத்தைக் கல்லாக்கிக் கொள்ளாதீர்கள். தருமமும் தயையுமே நிரந்தரச் செல்வம். கடவுளுடைய பாங்கியில் நல்ல வட்டியுடன் பெருகிப் பத்திரமாக இருக்கும்.

தால்தான் எங்களுக்கு நிம்மதி. நீ விவரந் தெரியாமே நெருப்போடு விளையாடிக்கிட்டிருக்கிறே. உன்னை உள்ளே தள்ளிக் கம்பி எண்ண வைச்சுப் பிடுவேன்...தெரியுமா?''

''முடிந்தால் செய்ய வேண்டியதுதானே? அதிகாரம் உங்களிடம் இருக்கிறது. 'பேய் அரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்' என்று பாரதியார் பாடியிருக்கிறார்.''

''இதெல்லாம் மேடையிலே பேசு. அப்ளாஸ் கொடுப்பாங்க. பட்டம் வாங்கிட்டாப்பிலே ஆச்சா? மரியாதை — மண்ணாங்கட்டி ஒரு யழவும் தெரியறதில்லே...''

''உங்களைப் போல யார் வேண்டுமானாலும் நிர்வாகியாக வந்துவிட முடியும்! ஆனால் என்னைப் போல் பதினைந்து ஆண்டுகள் படித்துப் பட்டம் பெற்றவன் தான் ஓர் ஆசிரியராக வரலாம். இந்தத் தேசத்தைப் பிடித்த துரதிர்ஷ்டம் புத்திசாலிகளான ஏழைகள் — முட்டாள்களாயிருக்கிற பசை உள்ளவர்களுக்குத் தலைவணங்க நேரிடுகிறது! நாங்கள் மிகவும் மலிவான விலைக்கு உங்களுக்குக் கிடைத்து விடுகிறோம். என்ன செய்யலாம்?''

''உனக்கு எத்தனை திமிர் இருந்தால் முதன் முதலா நான் நிர்வாகியா வந்த ஒரு வாரத்துக்குள்ளேயே பையன்களை நீ இப்படிக் கலகம் பண்ணத் தூண்டிவிட்டிருக்க முடியும்? இரு! இரு! முதலில் உன்னைத் தொலைச்சுப்பிட்டு மறு வேலை பார்க்கிறேன்...'' என்று கறுவினார் மஞ்சன்பட்டியார்.

சத்தியமூர்த்தி மரியாதை தெரியாத அந்த மனிதனிடம் அதற்கு மேலும் நின்று பேசிக் கொண்டிருக்க விரும்பாமல் அங்கிருந்து தானாகவே வெளியேறி விட்டான். அன்றிரவே ஹாஸ்டலின் ஒரு மூலையில் இருந்த 'பழைய கூரை ஷெட்' ஒன்றுக்குத் தீ வைக்கத் தாமே ஏற்பாடு செய்து அதை நன்றாக எரிய விட்டபின் — இரவு பதினொரு மணிக்கு மேல் மாணவர்களில் சிலரை உடன் அழைத்துக் கொண்டு சத்தியமூர்த்தியே அங்கு வந்து அந்தக் கூரை ஷெட்டுக்கு நெருப்பு வைக்கும்படி மாணவர்களைத் தூண்டியதாகவும் — அவர்கள் 'சத்தியமூர்த்திக்கு ஜே!' என்று கூவிக்கொண்டு நெருப்பு வைத்ததாகவும் — மல்லிகைப் பந்தல் — போலீசுக்குத் தந்திரமாக ரிப்போர்ட் செய்தார் மஞ்சன்பட்டியார். இரண்டு சமையற்காரர்களும், ஓர் இரவுக் காவற்காரனும் — 'சத்தியமூர்த்திக்கு ஜே!' என்று கூவியபடியே மாணவர்கள் இரவில் வந்து நெருப்பு வைத்ததைப் பார்த்ததாகவும் அப்போது சத்தியமூர்த்தியும் அவர்களோடு உடன் இருந்ததாகவும் சாட்சியங்கள் எழுதிக் கொடுத்திருந்தார்கள்.

தீ விபத்து என்ற வஞ்சக நாடகம் நடந்த தினத்தன்று — விபத்து முடிந்த இரவுக்குப் பின் மறு நாள் அதிகாலை ஐந்து ஐந்தரை மணிக்குப் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரும் இரண்டு கான்ஸ்டேபிளும் லேக் அவென்யூவில் சத்தியமூர்த்தியின் அறையைத் தேடிக்கொண்டு வந்தபோது குமரப்பன்தான் அவர்களை முதலில் பார்த்து வரவேற்க நேர்ந்தது. சத்தியமூர்த்தி அப்போது குளியலறைக்குள் பல் விளக்கிக் கொண்டிருந்தான். போலீஸ்காரர்களையும், இன்ஸ்பெக்டரையும் வரவேற்ற குமரப்பனிடம் அவர்கள் தாங்கள் அங்கே வந்திருக்கும் காரியத்தைச் சொன்ன போது, ''இது என்ன ஐயா அநியாயப் பழியாயிருக்கிறது? நேற்றிரவு ஒன்பது மணியிலிருந்து என் நண்பன் சத்தியத்தோடு நான் இதே அறையில்தான் விடிய விடிய இருந்திருக்கிறேன். அவன் எப்படி இங்கிருந்து ஹாஸ்டலுக்கு வந்து மாணவர்களைக் கூரை ஷெட்டிற்கு நெருப்பு வைக்கும்படி தூண்டியிருக்க முடியும்? அவன் தான் என்னோடு இங்கேயே இருந்தானே?'' என்று போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் குமரப்பன் வாதாடினான். இன்ஸ்பெக்டரோ சத்தியமூர்த்தி மாணவர்களைத் தூண்டி நெருப்பு வைக்கச் சொல்லியதற்குச் சாட்சிகள் இருப்பதாகக் கூறினார். குமரப்பனும், போலீஸ் இன்ஸ்பெக்டரும் இவ்வாறு வாதாடிக் கொண்டிருக்கும் போது சத்தியமூர்த்தியே பல் விளக்கி முகம் கழுவிக் கொண்டு குளியல் அறையிலிருந்து வெளியே வந்து விட்டான். (தொடரும்)




பஸ் அல்லது லாரி டயர் தேய்ந்துபோனால், அதனை மேலும் எவ்வளவு அதிக மைலுக்கு உபயோகிக்கலாம் என்பது, ரீடிரெடிங் செய்யும் முறையைப் பொறுத்தது. விஞ்ஞான முறையில் டிவிஎஸ் ரீடிரெட் செய்வதால், ஒரே டயரை மீண்டும் மீண்டும் ரீடிரெட் செய்ய முடியும். இதனால் 40,000 மைல் வரை அதிகமாக ஓட்டலாம்.

டிவிஎஸ் ரீடிரெடிங் அதிக மைல்கள் உழைப்பானேன்?



சிறு கண்ணாடித் துண்டுகளும், ஆணிகளும் ரீடிரெட் செய்வதற்காக வந்த டயர்களிலிருந்து டிவிஎஸ் அகற்றியவை. இவை தான் உண்மையான அபாயம். ஏனெனில் இவை கேஸிங்குடன் ஒன்றிவிடுகின்றன. மிக நுண்ணிய அன்னியப் பொருளையும் கண்டுபிடித்து அகற்றுவதில் டிவிஎஸ் முழு கவனம் செலுத்துகிறது.

கேஸிங்கை டிவிஎஸ் வலுப்படுத்துகிறது



பழுதுகள் சீர் செய்யப் பெறுகின்றன; கேஸிங் வலுப்பெறுகிறது. எனவே டயரை மீண்டும் மீண்டும் ரீடிரெட் செய்யலாம். ஒவ்வோர் ஆண்டிலும் டிவிஎஸ்ஸின் சதர்ன் ரோட்வேஸ் பஸ், லாரி ஓடும் மூன்று கோடியே இருபது லக்ஷம் மைல் தூரத்தில், ரீடிரெட் செய்த டயர்கள் மீண்டும் மீண்டும் உழைப்பிற்கு சோதிக்கப் பெறுகின்றன.

டிவிஎஸ் ரீடிரெடிங், ஒரு டயருக்கு அதிக மைல்களைக் கொடுக்கிறது. அதனால் ஒரு ரூபாய்க்கு அதிக டயர் மைல்களைக் கொடுத்து, செலவைக் குறைக்கும்.

இந்தியாவிலேயே ரீடிரெடிங் செய்வதில் **மிகப்** பெரிய ஸ்தாபனம் டி.வி.எஸ்.

TVS

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட் (டிவிஎஸ் ஸ்தாபனம்)
புதுக்கோட்டை — மதுரை — கோயமுத்தூர் — பெங்களூர் — திருநெல்வேலி





''மந்திரிகள் என்று இருக்கிறார்களே, இவர்கள் வீட்டுச் சின்னப் பெண்கள், பிள்ளைகள் எல்லோரும் எப்படி இருப்பார்கள், தெரியுமா?'' என்று கௌரி கேட்டாள்.

''அவர்களுக்கும் நம்மைப் போல் இரண்டு கைகளும், இரண்டு கால்களும்தான் இருக்கும். காரில் போகாத போது தரை மீது நடந்து செல்வார்கள். நீ இப்போது என்ன ஆராய்ச்சி செய்கிறாய்?'' என்று ஜானகி கிண்டலாக விசாரித்தாள்.

''ஆராய்ச்சி செய்து முடிவும் தெரிந்து கொண்டு விட்டேன். சில ராஜ்யங்களில் உள்ள கல்வி மந்திரிகளின் பெண்களும், பிள்ளைகளும் வடிகட்டின மக்குகளாயிருப்பார்கள். உடல் நோஞ்சலாகவும் இருப்பார்கள்'' என்று கௌரி விவரம் கூறினாள்.

''உஸ், இரைந்து பேசாதே. மந்திரிகள் காதில் விழுந்தால் அப்புறம் உன் பிள்ளை, பெண்ணுக்கெல்லாம் காலேஜில் இடம் கிடைக்காது'' என்று மல்லிகா வேடிக்கையாக எச்சரித்தாள்.

''என் பெண் இப்போதுதானே நர்ஸரி கிளாஸில் படிக்கிறாள். தவிர நான் சொல்வது வடக்கத்திய மந்திரிகள் இரண்டொருவரைப் பற்றி. இரண்டு வாரங்களுக்கு முன்னாலே டில்லியில் ஒரு கல்வி மகாநாடு நடந்தது. அதிலே ஒரு மந்திரி, 'காலேஜில் சேருகிற போது வயது பதினெட்டாக இருக்க வேண்டும்' என்று கூறினாராம்.''

''அட, ராமச்சந்திரா! அப்புறம் படித்து முடித்து வரன் பார்த்துக் கலியாணம் நடக்கிறதுக்குள் தலை மயிர் நரைக்க ஆரம்பித்து விடும்'' என்றாள் ஜானகி.

''அப்படியானால் எட்டு வயசுக்குத்தான் பள்ளிக்கூடத்தில் குழந்தைகளைப் படிக்க வைக்க வேண்டும் என்று சொல்லு'' என்றாள் மல்லிகா.

''அப்படியும் ஒருத்தர் யோசனை கூறினாராம்'' என்று கௌரி தெரிவித்தாள்.

''உன் முடிவு சரிதான் கௌரி. அவர் வீட்டுக் குழந்தைகள் மக்காகவோ, உடம்பு பலம் இல்லாதவர்களாகவோதான் இருக்க வேண்டும். இல்லா விட்டால் குழந்தைகளை எட்டு வயசுக்குப் பள்ளிக்கூடத்தில் சேர்க்க வேண்டுமென்பாரா?'' என்றாள் ஜானகி.

''படிப்பையும் வயதையும் இணைக்கக் கூடாது. சில பேர் சிறு வயதிலேயே கெட்டிக்காரர்களாக இருக்கலாம். அவர்கள் இத்தனை வயசான பிறகுதான் காலேஜ் கட்டடத்தில் அடி எடுத்து வைக்கலாம் என்று வயசை நிர்ணயிப்பது அநியாயம்.''

''அதே மாதிரி இத்தனை வயசுக்கு மேலே படிக்கக் கூடாது என்றும் ஏற்படுத்தினால் என்ன? ஏன் கௌரி? ஏழெட்டு வயசு ஆன பிறகே படிக்க வைக்கவேண்டும் என்கிறார்கள். முப்பது முப்பத்தைந்து வயதான ஸ்திரீயோ, ஆண் பிள்ளையோ முதல் வகுப்பில் சேர வருகிறார்கள் என்று வைத்துக் கொள். அவர்களைச் சேர்த்துக் கொள்ளமாட்டேன் என்று சொல்ல முடியுமா?'' — இது மல்லிகாவின் கேள்வி.

''நீ வக்கீல் பெண்ணல்லவா? உனக்கு இது மாதிரி யோசனை எல்லாம் தோன்றுகிறது. இப்படி நாம் மூன்று பேரும் ஏகோபித்துத் தீர்மானம் நிறைவேற்றியிருப்பதாக மந்திரிகளுக்குத் தெரிவித்து விடுவோமா?''

''ஏன், மல்லிகா! உன் பிள்ளைக்கு என்ன வயசாகிறது?'' என்று கௌரி விசாரித்தாள்.

''முப்பத்திரண்டு!'' என்று அவள் சிரித்துக் கொண்டே பதில் அளித்தாள்.

''என் பெண்ணுக்கு இந்த நவம்பரோடு முப்பத்தாறு முடிகிறது'' என்றாள் கௌரி.

அவர்கள் தங்கள் குழந்தைகளை ஒரு கான்வென்ட் பள்ளிக்கூடத்தில் நர்ஸரி வகுப்பில் சேர்த்திருந்தார்கள். அந்தக் குழந்தைகளின் வயதைப் பற்றி இப்படி மாதங்கள் கணக்கில் குறிப்பிட்டுப் பேசிக் கொள்வது வழக்கம்.

''முன்னெல்லாம் இந்த வயசிலே பல குழந்தைகள் தாய்ப்பால்கூட மறந்திருக்காது. ஏன், இப்பொழுது கூடத்தான் அது மாதிரி குழந்தைகள் இருக்கின்றன. நாம் என்னடாவென்றால் பள்ளிக்கூடத்திலேயே சேர்த்துவிட்டோம். எல்லாம் நம்முடைய சோம்பேறித்தனம்தான் காரணம்! இங்கே நாம் அரட்டை அடிக்க வசதியாகக் குழந்தைகளை நர்ஸரி ஸ்கூலில் தள்ளிவிடுகிறது!'' என்றாள் மல்லிகா.

''எனக்கு ஐந்து வயதான போது கொட்டு மேளம் கொட்டிப் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துக் கொண்டு போனார்கள்'' என்று ஜானகி சிறிது பெருமையுடன் கூறினாள்.

"அங்கே என்ன செய்தாய்?"

"காப்பரிசி நிறைய வேண்டுமென்று அழுத தாக ஞாபகம்!"

"நம்ப குழந்தைகள் முதல் நாள் கொஞ்சம் அழுதது. அப்புறம் நாம் போனதும் கடைக் கண்ணால் பார்த்து விட்டுப் பேசாமல் விளையாடிக் கொண்டிருக்கு. அப்பா, அம்மா என்று கூப்பிட்டுக் கொண்டு ஓடி வருவதில்லே" என்றாள் மல்லிகா.

கௌரி சொன்னாள்: "காலத்துக்கேற்றாற் போல் குழந்தைகளுக்குச் சிறு வயதிலேயே அறிவும் அதிகமாகி விட்டிருக்கிறது. இப்போது பிறக்கும் குழந்தைகளின் அப்பா அம்மா இரண்டு பேருமே நன்றாகப் படித்தவர்களாக இருக்கிறார்கள். அதனால் குழந்தைகளுக்கும் கெட்டிக்காரத்தனம் இயற்கையாக அமைந்து விடுகிறது.

குழந்தைகளைப் படித்த பெண் கூடிய வரை வியாதி, வெக்கை இல்லாமல் வளர்த்து வருகிறாள். வேளா வேளைக்கு உணவளிப்பது, அழுக்கில்லாமல் சுத்தமாக வைத்துக் கொள்வது இதிலெல்லாம் கவனம் செலுத்துகிறாள்.

மூன்று வயதுக்குள் குழந்தைக்கு எத்தனையோ விஷயங்களும், எத்தனையோ — வார்த்தைகளும் தெரிந்து விடுகின்றன.

இந்தக் காலக் குழந்தைகளுக்குப் பல விஷயங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவும், அதன் பயனைப் பல வார்த்தைகளைத் தெரிந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அதனால் அவை அவை பழைய கால ஏழெட்டு வயதுக் குழந்தையின் அறிவை மூன்று வயதிலேயே பெற்று விடுகின்றன....."

கௌரி தன்னுடைய கண்களை மூடியவண்ணம் சொல்லிக் கொண்டே போனதை மற்ற இருவரும் வாயைத் திறவாமல் கேட்டுக் கொண்டிருந்தனர்.

"நல்ல நர்ஸரிப் பள்ளிக் கூடங்களில் குழந்தைகளுக்கு விளையாட்டுச் சாமான்கள் நிறைய வைத்திருக்கிறார்கள். குதிரை, மோட்டார், சைக்கிள், ராட்டினம், பொம்மைகள், மரக்கட்டை, மணலில் விளையாடப் பக்கெட் — இது மாதிரி எத்தனையோ வைத்திருக்கிறார்கள். குழந்தைகள் போனதுமே உபாத்தியாயினிக்கு வணக்கம் தெரிவித்து விட்டு விளையாட ஆரம்பித்து விடுகின்றன. அப்புறம் வாத்தியத்துடன் பாட்டுக்கள். எல்லாம் மூன்று மணி நேரம்தான். முதலில் சில நாளைக்குச் சாப்பிடப்படுத்தும். இடுப்பில் எடுத்து வைத்துக் கொண்டு ஊட்டும்படியாயிருக்கும். சாப்பிட்ட பிறகு சற்று விளையாடுகின்றன. அப்புறம் இரண்டு மணி நேரம் தூங்க வைக்கிறார்கள்.

"குழந்தைகளுக்கு எழுத்து, வார்த்தை என்று ஒன்றும் சொல்லிக் கொடுப்பதில்லே. உபாத்தியாயினி குழந்தைகளோடு தமாஷாகப் பேசி விளையாடிக் கொண்டிருப்பாள். அவ்வளவுதான். இருந்தும் குழந்தைகளுக்கு, எத்தனையோ வார்த்தைகளை உபயோகிக்கத் தெரிந்து விடுகிறது. மணி அடித்ததும் அவை குடுகுடு வென்று ஓடுவதைப் பார்க்க வேண்டுமே. நாற்பது ஐம்பது குழந்தைகளோடு பழக நேரிடுவதால் அவற்றுக்குக் கூச்ச சுபாவம் போய் ஒரு சகஜத் தன்மை ஏற்படுகிறது.

"நான்கு வயதாகும்போது 'மிடில் நர்ஸரி' என்ற வகுப்பில் போடுகிறார்கள். ஐந்தாகும் போது 'ஸீனியர் நர்ஸரி' என்ற வகுப்பில். இந்த மூன்று வருஷ காலத்தில் அவை சிரமமின்றி எழுதிப் படிக்கத் தெரிந்து கொண்டு விடுகின்றன. அத்துடன் ஒரு ஒழுங்கு, கட்டுப்பாடு உணர்ச்சி தோன்றி வளர்ந்து விடுகிறது. இரண்டரை வயதிலேயே குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பும் இந்த நர்ஸரி முறை முதன் முதல் எப்படி ஏற்பட்டது என்றால்..."

ஜானகியும் மல்லிகாவும் கையைத் தட்டிக் கரகோஷம் செய்யவே கௌரி கண்களைத் திறந்து பார்த்தாள்.

'புரொபஸர் மகளே! பெரிய பிரசங்கம் செய்து விட்டாயே. நீ இன்னும் ஒரு மணி நேரத்துக்கு வாயை மூடமாட்டாய் போல் இருந்தது. அதனால்தான் கையைத் தட்டினோம்'' என்று மல்லிகா சொன்னாள்.

"பாக்கியையும் சொல்லி விடட்டும். ஏன் கௌரி, 'நர்ஸரி முறை எப்படி ஆரம்பித்தது?' என்று கொஞ்சமாகச் சொல்லு" என்று ஜானகி கேட்டாள்.

"ஜெர்மனியிலே ஒரு உபாத்தியாயர், குழந்தைகளுக்கு நேரடியாக எழுத்துப்பாடம் இதெல்லாம் சொல்லிக் கொடுப்பதற்குப் பதிலாக விளையாட்டுச் சாமான்கள், விளையாட்டு முதலியவற்றிலேயே சொல்லிக் கொடுக்க முடியும் என்று நினைத்தார். அதற்காக 'கிண்டர் கார்டன்' பள்ளிக் கூடங்கள் ஆரம்பித்தார். அப்புறம் மாண்டிஸோரி முறை ஏற்பட்டது. பிறகு நர்ஸரி வகுப்புகள் ஆரம்பித்தன. அமெரிக்காவில் இதில் எத்தனையோ தினுசுகள் இருக்கின்றன. பெரிய வியாபாரிகள், உத்தியோகஸ்தர்கள், செல்வந்தர்களின் குழந்தைகள் படிக்கும் நர்ஸரிப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. நடுத்தர வகுப்பினர் வீட்டுக் குழந்தைகள் படிக்கக் கூடிய பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அங்கே இன்னொரு விசேஷம். குழந்தைகளின் பெற்றோர்கள் சேர்ந்து கொண்டு 'கோ ஆபரேடிவ் சொஸைட்டி' மாதிரி நர்ஸரிப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி நடத்துகிறார்கள். அதில் குழந்தைகளின் தாயார்கள் சிலரே முறை போட்டுக் கொண்டு குழந்தைகளைக் கவனித்துக் கொள்கிறார்கள்."

கௌரி மேலே பேச முடியாமல் சற்று நிறுத்தினாள். "ஜானகி, ரொம்பத் தாகமாயிருக்கிறது. சூடாக ஒரு டம்ளர் காப்பி கொடு!" என்று கௌரி கேட்டாள்.

"பிரசங்கம் செய்யாமலேயே கேட்டு வாங்கிச் சாப்பிட்டிருக்கலாமே!" என்று மல்லிகா பரிகசித்தாள்.

சமையலறை உதவிப் பையன் மூன்று பேருக்கும் காப்பி தயாராய்க் கொண்டு வந்து நின்றிருந்தான்.



மனிதாபிமானம் மிக்க மதியூகி

ஜி. ராமச்சந்திரன்

ராஜாஜிக்கு எண்பத்தியாறு வயசு பிறக்கிறது என்று கேள்விப்பட்டவுடன் நம்மில் யாரும் ஆச்சரியப்படவில்லை. நம்முடைய மனத்தில், மாமலைகளுக்கு எவ்வளவு வயதோ அவ்வளவு வயதானவர் ராஜாஜி என்றே மதித்து வருகிறோம். பொதுவாழ்வு குறித்து நம்முடைய நினைவு எவ்வளவு பின்னால் செல்கிறதோ, அந்த உதயகாலத்திலிருந்தே ராஜாஜி நம்முடன் இருந்து வருகிறார். தென்னிந்தியாவில் உள்ள நம்மில் அநேகர் பொதுப் பணி என்பது பற்றி அவரிடமிருந்தே பாடம் தொடங்கியிருக்கிறோம்! இன்று அவரை இந்தியாவின் முதுபெரும் தலைவர் என்று அழைப்பது எவ்விதத்திலும் பொருந்தும். சுதந்திரப் போராட்டத்தில் காந்திஜியுடன் நின்றவர்களில் அவரே இன்று இருப்பவர்களில் மிகவும் வயது முதிர்ந்தவர் எனலாம். ஆனால் அவர் காந்தி சகாப்தத்துக்கு முன்பிருந்தே பொது வாழ்வில் ஈடுபட்டவர். காந்தி சகாப்தத்துக்கு முன்பிருந்தே நுட்பமும், சுறுசுறுப்பும், தெளிந்த மதியும், தீர உணர்வுமாகத் தேசப் பணி புரிந்தவர் ராஜாஜி. அப்போதே அவர் சட்டத்திலும், அரசியலிலும் பெயர் எடுத்திருந்தார். எனவே காந்தி சகாப்தம் உருவாக்கிய தலைவர்களில் ஒருவரல்ல அவர். அவரது பிரமிப்பூட்டும் மேதாவிலாஸம் மலர்ச்சி பெறுவதற்கான வாய்ப்பை காந்தி சகாப்தம் அளித்தது; அவ்வளவே! காந்திஜி அறைகூவல் விடுத்தவுடனேயே ராஜாஜியின் உள்ளுணர்ச்சியானது அற்புதமான முறையில் அதனை ஏற்றுக் கொண்டது. அதற்காகவே அவர் காத்துக் கொண்டிருந்தது போல் தோன்றியது.

காந்திஜியின் அந்தரங்கக் காரியதரிசியாக இருந்த மகாதேவ தேசாய்தான் ராஜாஜியிடம் முதலில் தமது இதயத்தையும் அறிவையும் பறிகொடுத்து அவரை காந்திஜியிடம் பிணைத்து வைத்தார். ராஜாஜியிடம் காந்திஜி இழுக்கப்படுவதற்குக் காரணம் ராஜாஜியின் சத்திய உணர்வும், அஞ்சா நெஞ்சும், தெளிந்த சிந்தனையுமே ஆகும். இன்றைய இந்திய அரசியலில் மிகவும் கூரிய அறிவு பெற்றவர் ராஜாஜியே என்பதில் ஐயமில்லை. இதனால் மக்கள் அவர் பிறரால் புரிந்து கொள்ள முடியாத நுண்மை வாய்ந்தவரென நினைக்கிறார்கள். இது தவறு. ராஜாஜி மிக மிக எளிமை வாய்ந்தவர். ஊசி முனையிலும், கத்தியின் விளிம்பிலும் உள்ள எளிமையே அவரது அறிவு வாதத்தில் உள்ளது. உண்மையை உடனேயே உள்ளபடி உணரும் தனி ஆற்றல் பெற்றவர் அவர். அவரை எந்த மாயமும் மயக்க முடியாது. அவரது தீர்க்க தரிசனத்துக்கு முன்னால் சூரியன் முன் பனி போல் மாயங்களெல்லாம் மறைகின்றன. ராஜாஜியை ஏமாற்றக் கூடிய ஒருவர் இனிமேல்தான் பிறக்க வேண்டும். யாரையும் நம்பும் தமது இயல்பு காரணமாக காந்திஜி சில சமயங்களில் வேண்டாத விளைவுகளைக் காண நேர்ந்தது. ராஜாஜியோ யாரையும் தவறாக நம்பியதில்லை. பூரணமாக ஆராய்ந்து பார்த்து ஒருவரின் தகுதி நிரூபணமானாலொழிய ராஜாஜி யாரையும் ஏற்பதில்லை. இரண்டு புள்ளிகளுக்கிடையேயுள்ள மிகக் குறைந்த தூரம் அவற்றை இணைக்கும் நேர் கோடுதான் என்பதை நாம் அறிவோம். இதே போல் ஒருவரை அறிந்து கொள்வது, அவரை நம்புவது என்ற இரண்டையும் ராஜாஜியின் மனம் ஒருநேர்கோட்டை வரைந்து இணைத்துவிடும் எனலாம். இந்த நேர் கோட்டு வழியை — நேர்மையான வழியை — எந்தச் சுய பாசங்களும், வெறுப்புக்களும் பாதிக்காது. இது காரணமாகத்தான் இன்று போலிகள், வேஷதாரிகள் ஆகியோரின் முகமூடிகளைப் பிய்த்தெறிவதில் ராஜாஜிக்குச் சமமாக இன்னொருவர் இல்லை. விஷயத்தை நோக்குவதில் ராஜாஜி சுய விருப்பு வெறுப்புக்களைப் பூரணமாக ஒதுக்கியவர். எனவே அவருடைய மதிப்பீடுகள் ஒருபோதும் தவறுவதில்லை. ஒரு பழைய வேடிக்கை எனக்கு நினைவு வருகிறது. காங்கிரஸ் முக்கியஸ்தர் ஒருவர் தென்னிந்தியாவில் பிரயாணம் செய்யும் போது ராஜாஜி உடன் சென்றார். தலைவர்களைக் காண ரயில் நிலையம்தோறும் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்தனர். வடநாட்டுத் தலைவர் முகஸ்துதிகளை மிகவும் ரசித்தார். ஆனாலும் நள்ளிரவில் மக்கள் இப்படிக் கூட்டமாக வந்து போற்றுதலைத் தெரிவித்து அவரது தூக்கத்தைக் கலைத்தது அவருக்கு எரிச்சலாயிருந்தது. அவரை வெட்கச் செய்யும் புன்னகையுடன் ராஜாஜி, "பகல் போதில் நாம் எதை ரசித்து மகிழ விரும்புகிறோமோ அதையே இரவில் வெறுத்து ஒதுக்கலாகாது" என்றார்.



திரு ஜி. ராமச்சந்திரன்

தக்க மனிதர்களைத் தேடிக் கொண்டிருந்த காந்திஜி ராஜாஜியைக் கண்டு பிடித்தார். விரைவிலேயே அவரை நேசிக்கவும் நம்பவும் தொடங்கினார். தம்முடன் ராஜாஜி இணங்காத போதும், தம்மிடமிருந்து அவர் விலகிச் சென்ற போதும்கூட காந்திஜி அவரிடம் நம்பிக்கை வைத்திருந்தார். இறுதி வரை நம்பினார். காந்திஜி கூறியதற்கெல்லாம் 'ஆமாம்' போட்டவரல்ல ராஜாஜி. முக்கியமான விஷயங்களில் ராஜாஜியைப்

போல் மகாத்மாவிடமிருந்து மாறுபடும் துணிவு வேறெந்த இந்தியத் தலைவருக்கும் இருந்ததில்லை. இந்த அம்சத்தில் நேருஜியும் ராஜாஜியும்தான் மிக அருகில் வருவார்கள். நேருஜியும் காந்திஜிக்கு – ஏன் யாருக்குமே – 'ஆமாம்' போட்டதில்லை. அவரும் சில சமயங்களில் காந்திஜியிடமிருந்து விலகியதுண்டு. ஆனால் காந்திஜியின் மகிமை காரணமாக நேருஜி ராஜாஜி இருவருமே மீண்டும் மீண்டும் அவரிடம் திரும்பினர். இன்று நேருஜி தமது புகழின் உச்சியில், செல்வாக்கின் உச்சியில் இருக்கிறார். காங்கிரஸ் வளருவதற்கு மகத்தான உதவி புரிந்த ராஜாஜியோ நேரு அவர்களின் ஆட்சியைத் தீவிரமாக எதிர்த்து வருகிறார்.

ராஜாஜி ஏன் காங்கிரஸிலிருந்து பிரிந்தார்? ஏன் அதை எதிர்க்கிறார்? இன்று காங்கிரஸ் கட்சியானது தந்திர ஜாலம் செய்து அதிகார பீடத்துக்கு ஆரோகணம் செய்துள்ள வேஷதாரிகளின் விளைநிலமாகி விட்டது என்று அவர் கருதுவதால் தான். காங்கிரஸில் திறமையும் நன்னடத்தையும் தள்ளுபடி ஆகிவிட்டன; தகிடுதத்தம் செய்யும் சாதுர்யசாலிகளே இன்று காங்கிரஸ் குதிரையில் சவாரி செய்கிறார்கள் என்று ராஜாஜி கருதுகிறார். காங்கிரஸ் கட்சியும் சர்க்காரும் செய்கிற பல காரியங்கள் கம்யூனிஸ்டுகளை இந்நாட்டு அதிகாரத்தைக் கைப்பற்ற அழைப்பு விடுவதாக அமைந்துள்ளன என்று ராஜாஜி சந்தேகிக்கிறார். மக்களின் வாழ்க்கையிலும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் மிகையாகத் தலையிடும் அரசாங்கத்தைச் சகித்துக் கொள்ள அவர் விரும்பவில்லை. யாரும் ராஜாஜியைப் புறக்கணித்துவிட முடியாது. யாரையோ தனிப்பட்ட முறையில் வஞ்சம் தீர்த்துக்கொள்ளவே அவர் பாடுபடுகிறார் என்று யாரும் மறைமுகமாகப் பிரசாரம் செய்துவிடவும் முடியாது. இதைப் பற்றிச் சந்தேகமே இல்லை.

ராஜாஜி ஒரு மகாபுருஷர். அவரது தகுதிகள் காரணமாக அவரது பேச்சை யாரும் கேட்டேயாக வேண்டும். அவர் விடுக்கும் வாதங்களுக்கு உகந்த பிரதிவாதம்தான் செய்ய வேண்டுமேயன்றிக் கோபத்தாலோ, அவமரியாதையாலோ, அவதூறாலோ அவருக்குப் பதில் சொல்லிவிட முடியாது. இன்று நமது பொது வாழ்வில் பிணியைத் தடுக்கும் பெரு மருந்தாக இருப்பவர் ராஜாஜி. அவரை ஆதரித்தாலும் சரி, எதிர்த்தாலும் சரி, அவரது சக்தியை மதித்தே ஆக வேண்டும்.

ராஜாஜி அறிவு மட்டும் நிரம்பியவர், இதயமில்லாதவர் என்று எண்ணும் சிலர் உண்டு. அவர்கள் அவரை எவ்வளவு குறைவாக அறிந்திருக்கிறார்கள்! அவரது மதிநுட்பத்தின் அடியில் மனிதாபிமானம் உள்ளது. எதையும் நுணுகிப் பரிசீலிக்கும் ஆற்றல், எதற்கும் விட்டுக் கொடுக்காத அறிவு வாதம், பகுத்துப் பகுத்துப் பார்க்கும் திறன் இவை அவரது முகமூடியே. இந்த முகமூடிக்குக் கீழே அற்புதமான சிநேக தர்மத்தையும், ஏழைகள் தாழ்த்தப்பட்டோர் ஆகியோரிடம் உண்மையான கருணையையும், ஆண் பெண் அடங்கலில் எங்கு நல்ல குணமிருப்பினும் அதை உடனே பாராட்டும் பாங்கையும் ஒளித்து வைத்திருக்கிறார் ராஜாஜி. அவரைப் புரட்சியாளர் என்று வருணிப்பதை அவர் விரும்ப மாட்டார். எனினும் அவர் வகித்தது போன்ற உன்னத பதவிகளில் இருந்த வேறு எவரும் அவரைப் போல் முன்னின்று புரட்சிகரமான திட்டங்களைத் தொடங்கி வைத்து நிறைவேற்றியதில்லை. மிகப் பெரும் இந்திய ஆலை ஒன்று கதவடைப்புச் செய்தது சட்ட விரோதமானது என்று முதன் முதலாகக் கூறி, அதற்கு நோட்டீஸ் விட்டவர் ராஜாஜியே. இந்நாட்டில் ஒரு மாகாணம் முழுவதிலும் மதுவிலக்கை அமுல் செய்ததில் ராஜாஜியே முதல்வர். மதுரை ஆலயத்துக்குள் ஹரிஜனங்களை அழைத்துச் சென்ற துணிவு படைத்த ஜாதி ஹிந்துக்களுக்குக் காப்பு அளித்து அதன் பின் ராஜ்யம் முழுவதிலும் ஆலயப் பிரவேசத்தை நடத்திக் காட்டிய முதன் மந்திரி ராஜாஜி. அவர் பழைமைவாதி என்று



மனத்தில் திருப்தி உண்டாவதற்கும், வாழ்க்கையின் நோக்கம் பூரணமாவதற்கும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே நம்முடைய பெரியோர்கள் வழிகளை உபதேசித்து வந்திருக்கிறார்கள். இதுவே நம்முடைய நாட்டில் ஆலமரம் போல் வளர்ந்து வேரூன்றி நிற்கும் தர்மம் அல்லது சமயம். இந்த ஆலமரத்தின் அடியிலேதான் வாழ்க்கைப் பிரயாணிகளாகிய நாம் தங்கி வருகிறோம். ''இந்தப் பெரிய ஆலமரத்தை நட்டது யார்?'' என்று கேட்கும் குழந்தைகளுக்கு ''அவர்கள்தான் ரிஷிகள்'' என்பதாகப் பதில்சொல்லவேண்டும்.

❋

கண்ணுக்குக் காணப்படவில்லை என்பது கடவுள் இல்லை என்பதற்கு ஒரு காரணமாகுமா? இரவில் நட்சத்திரங்கள் திரள் திரளாகக் காணப்படுகின்றன. பகலில் எல்லாம் மறைந்து போகின்றன. கண்களைக் கொண்டு காணாத பொருள்கள் இல்லவே இல்லை என்று சாதிக்க முடியுமா? நம்முடைய அறிவின வாழ்க்கையில் கடவுளைக் காணவில்லை என்கிற காரணத்தினால் கடவுளே இல்லை என்று சாதிக்க வேண்டாம்.

மதிப்பிடுபவர்களை அறிவற்றவர் என்றே சொல்லிவிடலாம். காந்திஜியைப் போலவே, அவரைப் பழைமைவாதி என்றும் சொல்ல முடியாது. நவீனக் கருத்துக்களால் அடித்துச் செல்லப்படுபவர் என்றும் சொல்ல முடியாது; எது நடைமுறைக்கு உகந்தது என்று அறிந்த யதார்த்தவாதி என்றே அவரைச் சொல்லலாம். அவரது யதார்த்தவாதமானது மிதவாதத்தை விடப் புரட்சி மனப்பான்மைக்கே நெருக்கமானது எனலாம்.

தமிழ் எழுத்தாளர், அறிஞர் என்ற முறையில் ராஜாஜியின் பெயர் நம் சரித்திரத்திலிருந்து என்றும் மறையாமல் விளங்கும். அவர் பேசுகிற தமிழுக்கும், எழுதுகிற தமிழுக்கும் ஈடு இணை கிடையாது. மிகவும் கடினமான கருத்துக்களை மிகவும் எளிய வார்த்தைகளால் விளக்கும் மேதை அவர். தலைசிறந்த ஒரு கலைஞர் அவர். உரையாடுவதிலும் அவருக்கு ஒப்பாக இன்னொருவர் கிடையாது. சிந்தனையாளர் என்ற முறையில் அவர் பிரச்னைகளின் இதயத்துக்குள் ஆழச் செல்பவர். அறநெறியில் அவருக்குள்ள துணிவான ஈடுபாட்டை யாரும் மிஞ்ச முடியாது. நம் நாட்டுப் பொதுமக்களை வேறெந்தத் தலைவரும் அறிந்ததை விடச் சிறப்பாக அறிந்தவர் ராஜாஜி எனலாம். அவர்களை அவர் எவ்வளவு தூரம் நம்பியிருக்கிறார் என்பதைப் பலமுறை வெளிக் காட்டியிருக்கிறார். மக்களிடம் அவருக்கிருந்த நம்பிக்கை காரணமாகத்தான் இரண்டாம் உலகப் போருக்குப் பின் உணவுக் கட்டுப்பாட்டை ரத்துச் செய்தார். திறம் வாய்ந்த வேறு பலர் குழம்பிக் கொண்டும் யோசித்துக் கொண்டும் இருந்த போது அவரே காரியத்தில் இறங்கினார். மக்களை நம்பிக் காரியம் புரிந்தார். அவருடைய நம்பிக்கை முற்றிலும் மெய்ப்பிக்கப்பட்டது.


தியாகராயநகரிலுள்ள அவரது சிறிய வீட்டின் அமைதியான எளிய மாடி அறையில் அவரைக் காண்பதும், அவரோடு ஒருசில விநாடிகள் சம்பாஷிப்பதும் யாராலும் மறக்க முடியாத ஓர் அநுபவமாகும்; அதுவே யாருக்கும் ஒரு போதனையாகவும் இருக்கும். ராஜாஜியின் ஹாஸ்யமும், சமத்காரப் பேச்சும் யாரையும் அதிசயிக்கச் செய்யும். மனிதப் பண்புகள் மிக்கவர் அவர்.



தேகப்பயிற்சி செய்தால் எப்படி உடல் உறுதி பெறுகிறதோ அதுபோல் தர்மம் செய்யப் பழகிக் கொண்டால் மனமும், ஆத்மாவும் விருத்தி யடையும். தர்மம் செய்யாமல் உயிர் வாழ்வோமானால் மனிதர்களாகிய நமக்கும் மிருகங்களுக்கும் என்ன தான் வித்தியாசம்?

ராஜாஜியும் நேருஜியும் பிரிந்து போனது வருந்தவேண்டிய விஷயம். ஆனால் இது தவிர்க்க முடியாதது போலும். துறைமுகத்தை விட்டு வெளிச் செல்ல இருக்கும் ஒரு கப்பலின் எஞ்சின் என்று நேருஜியைக் கூறினால், அந்தக் கப்பல் விரிந்த கடலில் சென்ற பின் சண்டமாருதம் வீசி மோதி அதைக் கவிழ்க்க முயலும் போது விபத்தைத் தடுக்க உதவும் திசை காட்டும் கருவியாகவும், நங்கூரமாகவும் ராஜாஜியைச் சொல்லலாம்.

முடிவாகச் சொல்கிறேன்: இன்று இந் நாட்டில் வாழ்பவர்களில் நல்லவராகவும், உண்மை உள்ளவராகவும் இருக்கும் ஒவ்வொருவரும் — பாரதத்தின் பூர்வ சரித்திரத்தை மறந்து போகுமளவுக்கு நினைவு செத்திராத ஒவ்வொருவரும் — இந்தியா தேசம் நன்மைகளைப் பெற வேண்டும் என்று அந்தரங்கசுத்தமாக விரும்பும் ஒவ்வொருவரும் ராஜாஜியின் எண்பத்தியாறுவது ஜன்ம தினத்தன்று இவர் இந்தியாவின் பழம்பெரும் தலைவர், இந்நாட்டின் மக்கள் செல்வத்தில் தலைசிறந்த செல்வம் என்று தயங்காமல் கூறுவார்களாக! நம் நாடு இவரைப் பெற்றதற்காகப் பெருமிதம் கொள்கிறது என்று கூறி அவரை வாழ்த்துவார்களாக! எண்பத்தாறுவது வயதிலும் இந்த வயோதிக வாலிபர் இந்நாடு முழுவதும் சஞ்சரித்து, வேறெந்த எதிர்க்கட்சித் தலைவரையும் விடத் தீர்க்கமாகத் தமது குரலை எழுப்பி அதனை மக்கள் கேட்குமாறு செய்கிறார். இது ஒரு மலைப்பூட்டும் காட்சி. இந்திய நாட்டின் நலனுக்காகவும், அதைவிட விரிவான மனித குலத்தின் நலனுக்காகவும் ராஜாஜி குன்றாத உடல் வலிவும், குறையாத மதி வன்மையுமாக இன்னும் பலப் பல ஆண்டுகள் வாழ அருள்புரிய வேண்டுமென ஆண்டவனை நாம் யாவரும் ஒரே குரலில் வேண்டிக் கொள்வோமாக!






ஆழ்ந்த சிந்தனையோ?
காபி குடியுங்கள்

இதோ காபி....காபி உங்களுக்கு உற்சாகம் கொடுக்கும். சூடான காபிக்கு வேறு ஈடு கிடையாது. மணமான காபி மனதிற்கு திருப்தியளிக்கும். எந்த மனநிலையிலும் காபியே குடியுங்கள்.

காபி எந்த மனநிலையிலும் திருப்தி அளிக்கிறது



நயமான காபி தயாரிப்பது மிக சுலபம். இதைப் பற்றிய எங்கள் இலவச புத்தகத்திற்கு எழுதுங்கள். எந்த பாஷையில் வேண்டுமென்பதையும் குறிப்பிடவும்.

காபி போர்டு
பெங்களூர்

கை நிறைய மல்லிகைப் பூப் பந்துடன் உள்ளே நுழைந்தேன். கண்ணாடி எதிரே மன்னி பத்மா தலை வாரிப் பொட்டிட்டுக் கொண்டிருந்த காட்சி நெஞ்சை உறுத்தியது. ''சே..... பேரன் பேத்தி எடுக்கலாயிற்று. என்ன சிங்காரம் வேண்டிக் கிடக்கிறது!'' என்று முணுமுணுப்பு அவள் காதில் விழுந்திருக்க வேண்டும். சட்டென்று என்னைத் திரும்பி நோக்கினாள் அவள். ஏதோ சொல்ல வந்த பதில் அவள் உதடுகளுக்குள் புதைந்தது; முறுவலை உதிர்த்தது.

'என்ன சாமர்த்தியம்!...'—அனுபவப்பட்ட நெஞ்சு சிணுங்கியது. அவள் என்ன சொல்ல நினைத்திருப்பாள் என்பதும் எனக்குத் தெரியும். 'மூத்தாள் குழந்தைகள் பாட்டி ஸ்தானம் தந்தாலும் நான் பாட்டியல்லவே!' என்பது தான் அவள் கூற வந்தது. ஏன் ஓரிரு முறை அந்த அர்த்தம் தொனிக்கும்படி பேசியிருக்கிறாளே! சிறு பெண்தான்! சிங்காரித்துக் குலுங்கட்டும்!

''பூ வாங்கினாயா, ராஜம்?''

''ஆமாம்.'' உதட்டைச் சுழித்து அலட்சியமாகப் பதிலளித்தபடி பூஜை மடத்தை அடைந்தேன். சிறு துணுக்குகளாகக் கிள்ளப்பட்ட பூக் கொத்து ஓரோரு ஸ்வாமி படத்தையும் அலங்கரித்தது. கையில் ஒரு முழம் பூவுடன் நான் எதிரே யிருந்த படத்தின் அருகே வந்தபோது, பத்மா என்னை வியப்புடன் நோக்குவதையும் கவனிக்கத் தவறவில்லை. ஸ்டூலை இழுத்துப் போட்டுக் கொண்டு மேலே பெரிதாக்கி மாட்டப்பட்டிருந்த ஜானகியின் புகைப்படத்துக்கு மாலையைச் சாத்தியபோது என்னையும் அறியாது கண்கள் கலங்கின.



''ஜானகி மன்னி... நீ தெய்வமாகி விட்டாய். கொடுத்து வைத்தவள். ஆனால் உன்னை யார் மறந்தாலும் என்னால் மறக்க முடியாது........'' இதயம் துயரத்தால் விம்மியது. அதே சமயம் வாசல் நடையில் செருப்பொலி கேட்டது. அதைத் தொடர்ந்து உள்ளே நுழைந்தான் அண்ணா வாசு.

''இதென்ன ராஜம், புதுமாதிரி பூஜை?'' குறும்புக்காகத்தான் அவன் கேட்டான். ஆனால் எனக்கோ...?

''புதிது என்ன? என் வீட்டில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் செய்யும் வழக்கம்தான் இது. போனவள் தெய்வத்துக்குச் சமானம். அவளை நீ மறந்து புதிய அத்தியாயத்தைப் புரட்டலாம். ஆனால் நான் ஜானகி எனக்குச் செய்த நன்றியை மறக்கவில்லை!....'' படபடவென்று பொரிந்தபடி கையில் மிகுதி இருந்த விரல் நீளப் புஷ்பத்தை ''எடுத்துக் கொள், பத்மா...'' என்று மேஜை மீது வீசிவிட்டு வாசல் புறம் நடக்கலானேன் நான்.

''ஹூம்..'' அண்ணா இரைந்தான்... ''பதினெட்டு வருஷங்கள் சம்சாரத்தில் குப்பை கொட்டியும் வாயாடித்தனம் இன்னும் அடங்கவில்லையே!.... யார்மீதுகோபம்!'' மன்னியைக் கூர்ந்து நோக்கினான் அவன்.

''ஒன்றும் இல்லை. நீங்கள் வேறு ஏதாவது புதிதாக ஆரம்பிக்காதீர்கள்.........டிபனுக்கு வாருங்கள்'' என்று சகஜமாக அழைத்தாள் பத்மா.

அடேயப்பா, எத்தனை குழைவு...மயக்கும் கனிவு? அந்தக் குரலுக்கு அண்ணாவும் அடிபணிகிறானே! அதுதான் அவன் குப்பை கொட்டிக் கற்ற கலையோ?

''ராஜம் டெல்லியிலிருந்து வருகிறான் என்றதுமே எனக்குக்


கவலேதான்! ஏதாவது ரகளே இல்லாமல் இராது என்று பயம்! அதிலும் பன்னிரண்டு வருஷங்களுக்குப் பின் பிறந்தகம் வருபவளாயிற்றே? என்ன நடந்தது....?'' அண்ணு விடவில்லே.

''ஒன்றுமில்லே என்கிறேனே... முதலில் டிபனே முடியுங்கள். பெரிய மன்னி நினேவு வந்துவிட்டது அவளுக்கு இங்கு வந்ததும்...பழைய முகத்துக்குப் பதில் புதியவளேக் கண்டால் எல்லோருக்கும் சங்கடம்தானே!...''

''என்ன... என்ன...? உன் மீது கோபமா? உன்னேப் பற்றி அவளுக்கு என்ன தெரியும்? ஒரு முழம் புஷ்பம் சாத்திவிட்டதால் பெரிய நன்றி உள்ளவளாமா? புது மனேவியை ஏற்ற நான் நன்றி கெட்டவன்....இதுதானே அவள் எண்ணம்...?'' பேசிக்கொண்டே அண்ணன் சமையலறைக்குள் சென்றதால் மேற்கொண்டு அவர்கள் பேச்சு என் செவிகளில் விழவில்லே. வாசல் திண்ணேயில் போய் அமர்ந்தேன். தம்பதிகள் ஒன்றுன பின் நான் சொல்லும் நியாயம் எடுபடுமா? ஆயினும் பத்மா மீது எனக்கு ஏனே ஒரு வெறுப்பு. ஜானகியின் இடத்தில் வைக்கத் தகுதியற்றவள் என்பதுபோல் ஓர் அபிப்பிராயம்.

ஜானகியின் பையன் ரங்கனும், பெண் விஜயாவும் டாக்டரின் உத்தரவுப்படி பத்மாவின் குழந்தைகள் இருவருடனும் உலாவச் சென்றிருந்தனர். பிரசவத்திற்கெனப் பிறந்தகம் வந்திருக்கும் விஜயாவுக்குப் போதிய தேகாப்பியாசம் வீட்டு வேலே மூலம் கிடைக்காது என்று ஏற்படுத்திய பழக்கம்.

குழந்தைகள் வெளியே சென்று விட்டனர். உள்ளே வாசுவும் பத்மாவுமிருந்தனர். நான்தான் தனித்து விடப்பட்ட அநாதைபோல் நின்றேன். திண்ணேயை ஒட்டிய உள்



அன்புக்குச் சாட்சி

ஸ்ரீப்ரியா

அறையில் அப்பா படுத்திருந்தார். ஆனுல் அவரைப் பொறுத்தவரை உடலில் உயிர் இருந்தாலும் உலக சிந்தனே–பந்தங்களேக் கடந்து விட்டவர் அவர். இன்று அல்ல; என்றுமே அவர் அப்படித்தான். அம்மாவே 'சன்யாசி' என்றுதான் அவரைச் சொல்லுவாள். அம்மா போய் ஜானகி குடும்பப் பொறுப்பை ஏற்றதும் இரண்டாமவரா அவரை இறக்கு வைத்துக் கலந்தாலோசித்துக் குடும்பம்

நடத்தினான்: ஞானகி மறைந்து விட்ட பிறகு அதுவும் போய்விட்டது. அப்படித்தான் நான் நினைத்தேன். ஆனால் அண்ணன்?... ஞானகியின் நினைவையே துடைத்து விட்டானா?

வாசுவினால் எப்படி அத்தனை சீக்கிரம் ஞானகியை மறக்க முடிந்தது? இதயத்துள் காதலித்து, இணைந்து, தம்பதியாகப் பத்து வருஷங்கள் வாழ்ந்தவளை ஒரு வருஷத்துக்குள் மறந்து எப்படி வேறு ஒருத்தியைத் தேடினான்? ஆண் மனத்தின் ஆத்திரமா அது?

ஞானகி! அவள் என்னைவிட நாலைந்து வயது மூத்தவளாக இருக்கலாம். என் தாய் உடல் நலமின்றி இருந்தபோது பக்கத்து வீட்டுப் பெண் என்று ஓரிரு முறை உதவிக்கு வந்தாள். எனக்கும் அப்படியே பாடங்களில் ஏதாவது சந்தேகம் தீர்ப்பாள். இரண்டுங் கெட்டான் வயதான எனக்கு அவள் அழகும் அறிவும் வியப்பளித்தபோது அண்ணனைப் பற்றிக் கேட்க வேண்டுமா? 'உன் தோழி வரவில்லையா?' என்று அவன் கேட்பதும், 'உன் அண்ணு வீட்டில் இல்லையா?' என்று அவள் விசாரிப்பதும், புரிந்தும், புரியாததுமான ஓர் அர்த்தத்தை என் மனத்தில் ஏற்படுத்தத்தான் செய்தன. ஒரு வருஷம் போராடிய அம்மா, ''இனி ஞானகி மாதிரி ஒரு மருமகள் வந்தால்தான் இந்த வீட்டில் விளக்கு பிரகாசமாக எரிய முடியும். ராஜும் ஒரு முசுடு. வாசு அறியாத குழந்தை... அவரோ சன்யாசி'' என்று கூறிக்கொண்டே தன் கடைசி நேரத்தைக் கழித்தாள். 'சன்யாசி' அப்பாவின் பொறுப்புணர்ச்சி அப்போதுதான் திடீரென்று விழிப்படைந்தது. 'ஞானகி மாதிரி என்ன? ஞானகியையே மருமகளாக்கி விடுகிறேன்' என்று அப்பா சொன்னதுமே 'வாசு... உனக்கு இதில்...' என்று ஆரம்பித்த அம்மா மேலே பேசவில்லை; முடியவில்லை. 'ஞானகி ராஜுத்தை...' என்று சொல்லும்போதே அவள் உயிர் பிரிந்தது. அவள் சொல்ல நினைத்ததை உணர்ந்தவள் போல் ஞானகி என்னை இழுத்து அணைத்துக் கொண்டு கண்ணீரைத் துடைத்தவள்தான். அதன் பின் ஒரு வருஷம் கழித்து என் மன்னியாக வந்து, என் பிடிவாதம், முன் கோபம், செல்லப் பெண் என்பதால் வந்த பொல்லாத்தனம் எல்லாவற்றுக்கும் ஈடு கொடுத்துத் தாயிழந்த சோகம் எனக்குத் தோன்றாமலே செய்தாள். அடேயப்பா...அப்போது நான் படுத்தியதும் கொஞ்சமா? டில்லியிலிருந்து நான் வந்து விட்டேனே என்று அண்ணாவின் பயத்துக்கும் கவலைக்கும் அர்த்தம் இல்லாமல் இல்லை. ஆனால் அதை இன்று பத்மாவிடம் அவன் கூறியதுதான் பிடிக்கவில்லை.

ஏன்.. ஒரு முழும் பூவினால் நன்றி செலுத்தினேன் என்கிறானே அண்ணு... இன்று... ஆனால் ஞானகியிடம் என் மதிப்பு அவனுக்கு எப்படிப் புரியும்? ஏன், ஞானகியின் மேல் என் மதிப்பை உயர்த்தியதே என் கல்யாணம்தானே... அதன் பின் நானும் அவள் அன்புக்கு அடிமையாகி அகங்காரத்தைக் கைவிட்டேன் என்றால் பொய்யல்ல. பெரிய இடம் என்று அப்பா அந்த வரனைக் கைவிட்ட சமயம் ஞானகிதான் வந்து கைகொடுத்தாள். ''ஒரே பெண்ணை அவளுக்கு இல்லாமல் யாருக்கு? அவள் வாழ்ந்தால்தான் நம் வீடு விளங்கும்'' என்று ஏதோ கூறி, அப்பாவைச் சரிக்கட்டித் தன் நகைகள், பாத்திரங்கள் சிலவற்றைக் கொடுத்துக் காரியத்தை ஒப்பேற்றினாள். அம்மா இருந்திருந்தால்கூட இது நடந்திராது தான். ஞானகி! எனக்கு வாழ்வளித்த தெய்வம் அவள்.

பிரசவத்துக்குத்தான் எனக்கு எப்படிச் செய்தாள் அவள்! அப்படிப்பட்டவளை ஒரு பிரசவம்தான் பழி வாங்கி விட்டது. பத்து வருஷ வாழ்வு! ரங்கனை அடுத்து இரண்டாம் வருஷம் ராஜி பிறந்து அதன் பின் ஆறு வருஷங்கள் கழித்துக் கருத்தரித்தவள் பிழைக்கவில்லை. அப்போது நான் புக்ககத்தில் இருந்தேன். பறந்தோடி வந்தேன், செய்தி கேட்டு. ஆனால் என் கண்ணீரைத் துடைத்த மன்னி போய் விட்டாள். ஆனால் குழந்தைகளின் கண்ணீரைத் துடைக்க முடியாதபடி நான் வேறு ஒரு வீட்டின் உரிமையாகி விட்டது எத்தனை பெரிய தண்டனை? வந்தது முதல் புறப்படும்வரை குழந்தைகளைக் கட்டிக் கொண்டு நானும் கண்ணீர் விட்டேன். அதன்பின் சம்சாரச் சுழலில் மாதங்கள் உருண்டன. அண்ணுவுக்கும் குழந்தைகளுக்கும் கடிதம் மூலம் ஆறுதல் கூறினேன். என்னையும் தேற்றிக் கொண்டேன்...ஆனால்...

ஜானகி போன பத்தாம் மாதம்.... அம்மா போன போதுகூட ஒரு வருஷம் காத்த அண்ணன் இப்போது அவசரப்பட்டான். ஆம்! அவனுடைய கல்யாணச் செய்தி பற்றி எழுதினார் அப்பா.

"நீங்கள் என்னைக் கல்யாணம் செய்து கொண்டது தான் ராஜத்துக்குப் பிடிக்கவில்லை. அவளுக்கு அதுதான் கோபம். அதற்கு நான்என்ன செய்ய முடியும்?" பத்மா தான் பேசியது. டிபன் சாப்பிட்ட அண்ணன் ஹாலுக்கு வந்திருக்க வேண்டும்.

"ஆமாம். அந்தக் கோபத்தில்தானே அவள் கல்யாணத்துக்கே வரவில்லை! ஏன் அதன் பின் பன்னிரண்டு வருஷங்களாக அண்ணனைக் கூட மறந்து விட்டாள். காலமான அண்ணியுடன் ...ம் அது அவள் சுபாவம். நீ என்று இல்லை. யாராயிருந்தாலும் அவள் அப்படித் தான் இருப்பாள். நீ இதற்கு வருத்தப் படாதே.....பத்மா....." வாசுவின் குரல் கனிவுடன் ஒலித்தது.

என்ன அண்ணாவா பேசுகிறான்? எது பிரமாதமாகப் போகிறானே? அப்படி நான் என்ன சொல்லி விட்டேன், அவனுடைய அன்பு மனைவியை? ஆட, நான் பொல்லாதவள் தான். ஆனால் கட்டியவன் மயக்கத்தில் இன்று, பத்து வருஷங்கள் கூடி வாழ்ந்தவளை மறந்துவிட்ட இவன் நல்லவனா?

பரபரவென்று திண்ணையிலிருந்து உள்ளே திரும்பினேன். நான் பொல்லாதவள்—பொல்லாதவளாகவே கெட்டு விடுகிறேன்.

"பத்மா...ஏதோ ஊர் தேடி வந்தோமே, அந்த ஒரு கிழப் பிராணன் வேறு இருக்கிறதே. பார்ப்போம் என்றுதான் நான் வந்தேன். அதற்குள் அண்ணனும் நியமாக அனுவசியமாக ஏன் வம்பு பேச வேண்டும்? நான் புறப்படத் தயார்தான். ஆனால் அண்ணா தான் குழந்தை பிரசவிக்கும் வரையில் இரு என்றான். அது தப்பு..."

"ராஜம்...! நான் அப்படி ஏதும் சொல்லவில்லையே நீ ஆத்திரப்படும்படி...?" பத்மாவின் குரல் கரகரத்தது. "இறந்து விட்டவளுக்குக் காட்டும் மதிப்பு, உயிரோடு வளைய வரும் ஆத்மாவுக்கு இல்லையே என்பதுதான் என் வேதனையெல்லாம். அதற்காக ஜானகி அக்கா பேரிலும் எனக்கு எந்த விதமான வருத்தமும் இல்லை. நான் என்ன அவளை வஞ்சித்து வந்தேனா? பிராப்தம்....ஏழைப் பெண்ணான எனக்கு மண வயது கடந்தும் கணவன் கிடைக்கவில்லை. உங்கள் குடும்பத்தில் ஒரு பெண் தேவையாக இருந்தது. என் விதி....என் விதி...என் தாயும் உன் தந்தையைச் சந்தித்தார்...."



ஏழைகளுக்கு உதவுவது நம்முடைய தேச ஆசாரத்தில் இன்றியமையாதது. எந்த நல்லகாரணத்தைக் கொண்டும் இதை விட்டு விட்டால், நம்முடைய பண்பாடு, மயில் தன் தோகையை இழந்த வாறாகும்.

"ஹூம்... ஒவ்வொருவர் மனத்தில் ஒரு ஏக்கம்!" அண்ணா வெறுப்புடன் ஈஸிச் சேரில் சாய்ந்தான். "இந்தத் திருமணத்தினால் யாருக்கும் கவலைதான்; குறைதான். இதை இந்த வீட்டிலேயே கூட நாம் மறைத்துக் கண்ணாமூச்சியாடுவது ராஜத்துக்குப் புலப்படவில்லை போலும்! பருகாமலே பாழாகும் இளமை ஆசைகளைப் பசி தீர்ந்து விட்ட என்னிடம் ஒப்படைத்து விட்ட பெண் மனத்துக்கு எத்தனை ஏமாற்றம் என்பது உனக்குத் தெரியாது, ராஜம்! அதே சமயம் ஒவ்வொரு செயலிலும் அன்று என்னை ஜானகி எப்படி வரவேற்றாள், இன்று பத்மா அதை முழு மனத்துடன் அதே அளவில் ரசிக்கிறாளா என்பதை என் மனம் ஒவ்வொரு கணமும் ஒப்பிடுவதும், இந்தப் பெண்ணுக்கு என் செயல்கள் ஏதும் ஏமாற்றமளிக்கக் கூடாதே என்று நான் கவலைப்படுவதும், எத்தனை! எத்தனை! அது மட்டுமா?....

"ராஜம்! எனக்கென ஒரு சிந்தனை, முடிவு இல்லாமலே என்னைப் பிணைத்திருக்கும் தளைகளைப் பார்! அதோ அறைக்குள் நடமாட முடியாமல் கடந்த கால நினைவுகளும்; கடவுளுமே துணையாகக் கிடக்கும் கிழவருக்கு என்னாலோ பத்மாவாலோ எந்தக் குறையும் தோன்றக் கூடாது. இதோ வளரும் என் கடந்தகாலக் காதல் கனிகள் — அவர்களுக்குத் தாயில்லாத ஏக்கமோ, சோர்வோ தோன்றக் கூடாது; அடுத்து இந்த வாழ்வில் உதித்த குழந்தைகள் இவற்றின் மனத்தில் பெரிய குழந்தைகளிடம் வித்தியாசம் எழக் கூடாது. எல்லாவற்றுக்கும் மேல் கடைசியாக இவள் — பத்மா — இவளுக்கும் இத்தனை பொறுப்புள்ள குடும்பம் ஒரு பாரமாகத் தோன்றக் கூடாது. இதையெல்லாம் சமயம் பார்த்துச் சரிக்கட்டிச் சமாளிக்க வேண்டிய எனக்கு என்று ஒரு மனம் — அது உயிருடன் இருக்க முடியுமா ராஜம்? நீ சொல். அல்ப ஆசைகளுக்காக நான் திருமணம் செய்து கொள்ளவில்லை. இந்தக் குடும்பத்துக்காகத்தான்..."

"அண்ணா..." என்னால் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை. "உன்னை நான் குறை சொன்னேனா?....என் குறை என்றுதான் வைத்துக் கொள்ளேன். ஜானகியின் இடத்தில் வேறு யாருக்கும் இடமில்லை என் மனத்தில்....அதுதான்..."

"நிறுத்து!" பத்மா திடீரென்று அறைவது போல் பேசினாள். "ஜானகி! ஜானகி! — அவளிடம் அத்தனை பாசம் இருந்திருந்தால்

நான் ஒருத்தி வரத் தேவையே யிராமல் செய்திருக்கலாமே நீ? அவளுக்கு நீ செய்தது என்ன? அந்தக் குழந்தைகளை அணைத்து வளர்த்தாயா, திரும்பிப் பார்த்தாயா? புக்ககத்தினர் மேல் பழியைப் போட்டு ஒதுங்கினாயே! இல்லை, வயதான தந்தை இருக்கிறாரே என்று அடிக்கடி வந்து கவனித் தாயா, நீ? உன்னை ஆளாக்க ஒரு மன்னி வந்தாள். ஆனால் ரங்கன், விஜிக்கு யார் துணை? பெண் துணையின்றிப் பெண் குழந் தையை வளர்க்க முடியுமா?''

''பத்மா! இதென்ன, போர் தொடங்கி விட்டாய்?'' என்று அண்ணா குறுக்கிட்டான்.

''விடுங்கள்...'' பத்மா நிறுத்தவில்லை. ''போகட்டும்... அந்தக் குழந்தையின் கல் யாணத்துக்காவது வந்தாயா? நீ...எனக்கு மணமான பின் நிஷ்டூரமாக ஓரிரு கடி தங்கள் எழுதினது தவிர நீ என்ன செய் தாய்? தனக்கு நகைகள் முதல் கொடுத்து உதவிய மன்னியாயிற்றே என்று விஜியின் கல்யாணத்துக்கு வந்தாயா? 'என் குடும்பத் தோடு வந்தால் ரயில் சார்ஜ் தருவாயா?' என்று அண்ணனைக் கேட்டாய். பணத்தை எண்ணிப் பாசத்தை மறப்பவன் என்று உன்னை அண்ணா ஏசவில்லை. இன்று நீ பூப் போட்டுக் கும்பிடலாம். ஜானகி திருப்தி அடைவாள் என்ற எண்ணம். ஆனால்... உள்ளூற மனத்தில் ஓரொரு காரியம் செய் யும்போதும் அது நல்லபடி முடிய நான் அவளை மனதாரப் பிரார்த்தித்துக் கொண் டிருப்பது யாருக்குத் தெரியும்?

''அவளை நான் வலம் வந்து வணங்கி வழி பட்டால் 'வேஷம்' என்று கூறும் உலகம். ஆனால் உங்கள் எல்லோரையும் விட என் நெஞ்சில் நிறைந்தவள் அவள். எனக்கு வழி காட்டுபவள் அவள். அவள் கைப் பொம் மையாக நான் குழந்தைகளை வளர்த்தேன்; கிழவரைப் பேணினேன். அவள் மீது அதீத அன்பு என்றும், 'துக்கம்' என்றும் கொண் டாடிய நீங்கள் ஒதுங்கி விட்டீர்கள். அவள் அன்பைப் பருகியவர்கள் நீங்கள். ஆனால்; நான் யாரோ? அவள் யாரோ? நான்தான் அவள் வீட்டுச் சென்ற கடமைகளைப் பூர்த்தி செய்தேன் என்பதை மனப்பூர்வமாக அவள் அறிவாள். அது போதும் எனக்கு. அவள் என்னையும் எங்கள் நலன்களையும் பார்த்துக் கொள்வாள்'' என்று ஆவேசமாகப் பேசிய வள் அப்படியே சாய்ந்து விட்டாள்.

''சித்தி.... சித்தி.....'' அப்போதுதான் உள்ளே நுழைந்த விஜி ஓடி வந்து பத்மாவைத் தாங்கிக் கொண்டாள்.

நான் மரமாக நின்றேன். ''என்னாயிற்று, அத்தை?'' — விஜியின் நேர்ப் பார்வை என்னைத் தாக்கியது. அவள் கை அணைப் பிலே பத்மா, சற்று அசைந்தாள்.

''நீ அப்படியே என் மடியில் சற்று நேரம் படுத்திரு சித்தி. வீணாக ஏதோ அலட்டிக் கொண்டு கணத்தில் எங்களைப் பய முறுத்தி விட்டாயே?'' என்றாள் விஜி.

பத்மாவினருகே வந்த அண்ணா மெல்ல விசிறினான். அந்த மூவரின் பிணைப்பிலே.... அன்புப் பரிமாறலிலே என் உடல் சிலிர்த்து விட்டது.

இந்தத் தூய பிணைப்புக்குச் சாட்சி....? அதோ படத்தில் தெய்வமாகி நின்று புன்னகை செய்யும் ஜானகி!

அப்படியானால் நான் யார்? யார்? பாச பந்தத்தைக் குறுகிய வட்டத்தில் அடைத்து, அதனுள்ளிருந்து சந்தேகத்துடனேயே பார்க் கும் ஒரு மூன்றாம் மனுஷி....வளரும் அன் புக்குத் தேவையற்ற, தடையான ஒரு வெறும் உறவு!


''சித்தி.... நீ ஏன் அநாவசியக் கதை களைக் கேட்டுக் கலங்கி 'ப்ளட் ப்ரஷரை' அதிகரித்துக் கொள்கிறாய். உன் மகள், உன் மகன் என்று நாங்கள் சொல்லும் போது பிறரது பேச்சு பற்றி உனக்கு என்ன கவலை? தாயையும் மக்களையும் எந்தச் சக்தியும் பிரிக்காது சித்தி.''

படத்திலிருந்த மல்லிகை அறை யெங்கும் மணம் வீசியது. இல்லை, ஜானகியின் ஆசியோ அது? என் தலை வணங்கியது..... ஜானகியை அல்ல, பத்மாவைத்தான்.


விக்ஸிலிருந்து இருமலை நிறுத்தும் புதிய கண்டுபிடிப்பு

அடமுள்ள இருமலை நிறுத்துகிறது

இருமல் கட்டுப்பாடு கேந்திரத்தில் இருமல் ஆரம்பமாகும் இடத்தில் செயல் புரிகிறது.



நமைச்சலுக்குள்ளான இருமல் கட்டுப்பாடு கேந்திரம் உங்களை இருமச் செய்கிறது. இருமச் செய்கிறது —தொடர்ந்து இருமச் செய்கிறது.



விக்ஸ் பார்முலா 44 உங்கள் இருமல் கட்டுப்பாடு கேந்திரத்தை அமைதிப்படுத்துகிறது. இருமல் நிற்கிறது. நீங்கள் சுகமாகத் தூங்குகிறீர்கள்.

இருமல் உங்கள் தொண்டையில் மட்டும் இருப்பதல்ல. டாக்டர்களுக்குத் தெரியும். உண்மையில் 'இருமல் கட்டுப்பாடு கேந்திரத்தில்தான்' இருமலானது ஆரம்பமாகிறதென்று. தொண்டை அழற்சி, மார்புக்குழாய் அடைப்பு ஆகியவைகள் இருமல் கட்டுப்பாடு கேந்திரத்தைத் தூண்ட நீங்கள் இருமுகிறீர்கள். இருமுகிறீர்கள் அப்படித் தொடர்ந்து இருமுகிறீர்கள்.

விக்ஸ் பார்முலா 44-ல் உள்ள புதிய பிரத்யேகமான "இருமல் சமனி" நமைச்சலுக்குள்ளான உங்கள் இருமல் கட்டுப்பாடு கேந்திரத்தை அமைதிப்படுத்த, இருமல் நிற்கிறது. அடமுள்ள, அழற்சி மிக்க இருமலிலிருந்து விடுதலை பெற்ற நீங்கள் அமைதியான இரவை ஆனந்தமாக அனுபவிக்கிறீர்கள்.

அதே நேரத்தில் விக்ஸ் பார்முலா 44-ல் உள்ள, அறிவியல் முறைப்படி சேர்க்கப்பட்ட சக்திவாய்ந்த மருந்து அடமுள்ள இருமலிலிருந்து, உங்களுக்கு பூரண விடுதலை அளிக்க, உடலின் மூன்று முக்கிய பாகங்களில் செயல் புரிகிறது.



• உங்கள் மார்பில் செயல் புரிகிறது



விக்ஸ் பார்முலா 44-ல் உள்ள விசேஷ கட்டுப் பொருள் சுவாசக் குழாய்களில் ஆழ்ந்து வேலை செய்து வளியேற்றும் நெஞ்சடைப்பை நீக்குகிறது.

• உங்கள் தொண்டையில் செயல் புரிகிறது



விக்ஸ் பார்முலா 44 இருமலினால் தொண்டையினுள் ஏற்படும் சிறு வெடிப்புகளை வேகமாகக் குணப்படுத்துகிறது. தொண்டை அழற்சியை உடனடியாக நிறுத்துகிறது.

• உங்கள் மூக்கில் செயல் புரிகிறது



விக்ஸ் பார்முலா 44 மூக்கடைப்பை குணப்படுத்துகிறது. உங்களை மறுபடியும் தாராளமாகச் சுவாசிக்கச் செய்கிறது. நீங்கள் இரவில் நன்றாகத் தூங்குவதற்கு வேண்டிய ஆசுவாசம் அடைகிறீர்கள்.

விக்ஸ் பார்முலா 44

காஃப் மிக்ஸர் இருமல் ஆரம்பமாகும் இடத்தில் வேலை செய்கிறது

அறிவுக் கனலே, அருட் புனலே!

ரா. கணபதி [44]

புனிதத்தின் புகலிடமான பரமஹம்ஸ தேவரின் செவிகளில் நரேந்திரர் நடத்தை தப்பிவிட்டார் என்ற செய்தி விழுந்தது. அவரது பக்தர்கள் சிலர் கல்கத்தாவுக்கே வந்து விட்டனர். கேள்விப்படும் விஷயங்களை ஒருவாறு நரேந்திரரிடம் கூறினர். அவற்றில் சிலவற்றையேனும் தாங்கள் நம்புவதாகவும் குறிப்புக் காட்டினர்.

அவர்கள் தம்மைப் பற்றி எவ்வளவு இழிவாக எண்ணுகிறார்கள் என்று தெரிந்தவுடன் தமது தூய்மை பற்றி நரேன் கொண்டிருந்த பெருமிதம் புண்ணுண்டது. அவருக்கு அளவில்லாததொரு சலிப்பு உண்டாயிற்று.

தவறாக நடந்தால் நரகத்துக்குச் செல்வோம் என்ற பயத்தின்மீது கடவுளை நம்புவது கோழைத்தனம் என்று அவர்களிடம் தெளிவாகக் கூறினார் நரேன். பல மேல்நாட்டுத் தத்துவ விசாரணைகளின் துணை கொண்டு கடவுள் உண்டா இல்லையா என்பது குறித்தும் அவர்களிடம் விவாதம் புரிந்தார். இதன் விளைவு, திருத்த முடியாதபடி அவர் கெட்டுப்போனார் என்றே அவர்கள் முடிவு கட்டி விடைபெற்றுக் கொண்டதுதான். இதிலும் நரேந்திரருக்கு மகிழ்ச்சியே. ஒருவேளை ஸ்ரீராமகிருஷ்ணரும்கூட இவர்களைப்போலவே எண்ணி விடுவாரோ என்று ஓர் எண்ணம் எழுந்தது. அந்த எண்ணம் மட்டும் ஏனோ அவர் உள்ளத்தை உறுத்தியது. 'அதனாலென்ன?' என்று தமக்குத் தாமே சொல்லிக்கொண்டார். 'இத்தகைய புல்லிய ஆதாரங்களின் மீது ஒருவரின் நல்ல அபிப்பிராயமோ கெட்ட அபிப்பிராயமோ எழுமானால் அவரைப் பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும்?'

பிறகுதான் குருநாதர் இந்தச் செய்தியை எவ்விதத்தில் ஏற்றுக் கொண்டார் என்பது நரேந்திரருக்குத் தெரிந்தது. அது அவரை அயர வைத்து விட்டது. முதலில் பரமஹம்ஸர் இப்படியோ, அப்படியோ எதுவுமே சொல்லாமல் உணர்ச்சியின்றித்தான் விஷயத்தைக் கேட்டுக் கொண்டாராம். பிறகு அவரது அபிமான சிஷ்யரான பவநாதர் கண்ணீர் மல்க, 'ஸ்வாமி, நரேந்திரன் இவ்வளவு தாழ்வாகச் சொல்லுவான் என்று நான் கனவுகூடக் கண்டதில்லை'' என்று கூறினாராம். உடனே குருதேவருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. ''மடையா, நிறுத்து! இது இவ்வாறு இருக்க முடியாது என்று அன்னை எனக்குச் சொல்லி விட்டாள். இது போல் நீ இன்னொரு முறை பேசினாயானால் நான் உன்னுடன் முகாலாபனம் பண்ண மாட்டேன்'' என்றாராம். இதையறிந்து நெஞ்சு நெகிழ்ந்து போனார் நரேந்திரர்.

நரேந்திரர் எந்த விதமான தீய செயல்களைச் செய்ததாக அபவாதம் மூண்டதோ அதே தீய செயல்களைப் புரியுமாறு நரேந்திரரை ஊக்கியவர்களும் உண்டு. நரேந்திரருடைய பழைய நாள் சகாக்கள் சிலர் இந்த வியாபாரத்தையே ஜீவனோபாயமாகக் கொண்டிருந்தார்கள். நன்றாகப் பணமும் பண்ணியிருந்தார்கள். அவர்



களுக்கு உண்மையாகவே நரேனிடம் அநுதாபம் உண்டாயிற்று. இந்த உலகத்தில் உள்ள எத்தனையோ விசித்திரங்களில் இதுவும் ஒன்று. ஆசார சீலர்களாகச் சிறிது கூட அப்பழுக்கற்ற தூய வாழ்வு வாழ்வோரில் சிலர் அன்பு என்றால் இன்னதென்றே தெரியாமல் வாழ்கிறார்கள். பாபக் குவியல்களைச் சேகரித்து வைத்துள்ளோரில் சிலரிடம் வேறெங்கும் காணமுடியாத இரக்கத்தையும் தயையையும் காண்கிறோம். நரேந்திரரின் இன்னலைத் தீர்க்க யாரும் முன் வராத போது, நடத்தை பிசகிய நண்பர்கள் இப்படித்தான் அவரிடம் அன்பு காட்டித் தம்முடன் சேர அழைத்தனர். நரேன் மறுத்து விட்டார். பணக்கார மாது ஒருத்தி அவருடைய வறுமையை எல்லாம் தீர்த்து வைப்பதாக வாக்களித்து, இங்கே எழுதுவதற்கே கூச வேண்டிய செயலுக்காக அழைப்பு விடுத்தாள். இன்னொரு ஸ்திரீயிடமிருந்தும் அழைப்பு வந்தது. அப்போது தம்மையும் அறியாமல் ஆஸ்திகத்தில் ஆழ வேரூன்றி நரேந்திரர் சொல்வார்: ''உடல் இன்பத்தை வேண்டி நீங்கள் உங்கள் வாழ்வையே வீணாக்கிக் கொண்டாயிற்று. மரணத்தின் இருண்ட நிழல் உங்கள் முன் விழுந்திருக்கிறது. அதனைத் தைரியமாக எதிர்ப்பட நீங்கள் ஏதேனும் செய்ததுண்டா? இந்த அழுக்கான ஆசைகளை விடுங்கள்; பரமனை மட்டுமே நினைவில் கொள்ளுங்கள்.''


கோடைக்காலம் முடிந்தது; மழை தொடங்கியது. நரேனின் வேலை வேட்டை முடியாமல் நடந்து வந்தது.

அன்று முழுவதும் அன்ன ஆகாரம் கிடையாது. நன்றாக மழையில் நனைந்து அலைந்தாயிற்று. அங்கங்களெல்லாம் களைத்து, உள்ளமும் தளர்ந்து போய் மாலையில் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார் நரேன். சோர்வு எல்லை மீறிப் போயிற்று. ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியவில்லை. அந்தத் தெருவிலிருந்த ஒரு வீட்டின் வாசல் தாழ்வாரத்தில் அப்படியே துவண்டார், நானாவிதமான சிந்தனைகள் மனதில் திரண்டன. அவற்றை விரட்டியடிக்கக்கூட இயலாத பலவீன ஸ்திதியில் இருந்தார். திடீரென ஓர் உணர்ச்சி. ஏதோ ஒரு தெய்விக சக்தி அவருடைய ஆத்மாவை மூடியிருந்த பல உறைகளை ஒன்றன் பின் ஒன்றாகக் கழற்றி எறிவது போலத் தோன்றியது. 'கடவுள் நீதிப்படி ஜீவர்களைத் தண்டிக்கிறார் என்றால் அவரைக் கருணை உள்ளவர் என்று சொல்வது எப்படி? கடவுளிடம் நீதி கருணை இரண்டும் எப்படி இணைந்து வாழ முடியும்? ஆனந்த மயமான கடவுள் எப்படித் துன்பங்களைப் படைத்திருப்பார்?' இப்படி அவரைக் குழப்பிய ஐயங்களெல்லாம் தம்மைத் தாமே தீர்த்துக் கொண்டன.

இந்த விந்தைபற்றி ஸ்வாமிஜி எழுதுவார்: ''எனக்குள்ளேயே ஆழ்ந்து நோக்கிக் கொண்டதால் இதற்கெல்லாம் எனக்குப் பொருள் புரிந்து விட்டது. மன நிறைவு பெற்றேன். வீட்டுக்கு மறுபடியும் புறப்பட்டுச் செல்லும் போது உடலில் சோர்வு என்பது லவலேசம்கூட இருக்க வில்லை. உள்ளம் ஓர் அற்புதமான பலமும் அமைதியும் கூடிப் புத்துணர்ச்சி பெற்றிருந்தது. அப்போது இரவும் முடியும் தறுவாய்.''

நம்மையெல்லாம் குழப்பும் கேள்விகள் நரேந்திரரையும் குழப்பியிருக்கின்றன.

'தர்மம் என்பது கடவுள் விதித்த நீதி. தர்மத்தை அநுசரிக்காதவர்களை ஆண்டவன் நீதிபதியாக இருந்து தண்டித்தே ஆக வேண்டும். இப்போது நாம் நல்லவராக வாழ்ந்தும் துன்பங்களுக்கு ஆளானால் அதற்குக் காரணம் சென்று போன பிறவியில் நாம் செய்த தீவினை தான்; அதே போல இன்று நாம் தர்ம வாழ்வு வாழாவிடினும் சுபசௌக்கியங்



களை அடைந்து வருகிறோம் என்றால் அதற்குக் காரணம் போன பிறவியில் நாம் செய்த நல்ல வினைதான். வினைக்கு உயிர் கிடையாது என்பதால் அதுவே தனது விளைவை நிர்ணயித்துக் கொள்ள முடியாது. ஆனபடியால் எல்லா வினைகளையும் கண்காணித்துக் கணக்கிட்டு அவற்றுக்கேற்பப் பலனளிக்கும் ஒரு சக்தி இருந்துதானாக வேண்டும். உலகைப் படைத்த கடவுளே அப்படி நீதி வழங்குகிறார்.'—இதுவே உலகிலுள்ள இன்ப துன்பங்களுக்கு ஹிந்து மதம் கூறும் விடை.

'அப்படியானால் நீதிப்படி தீர்ப்பு வழங்கும் ஆண்டவனைக் கருணைக் கடல் என்று சொல்வதேன்? 'என்னிடம் சரண் புகுந்ததால் நான் காப்பேன்' என்று பகவான் எப்படிக் கூறினான்? விதியின் எழுத்தைத் துடைப்பவன் அவன் என்றால் அது நீதி முறைக்கு விரோதமாகாதா?' — இப்படி ஒரு குறுக்குக் கேள்வி எழுகிறது.

நரேந்திரரும் இப்படி யோசித்திருக்கிறார். நம்மையெல்லாம் விடத் தீர்க்கமாக யோசித்திருக்கிறார். 'விடை கண்டேன்' என்றும் கூறுகிறார். ஆனால் அதனை அவர் நமக்குத் தெரிவிக்கவில்லை.

பகுத்தறிவு வாதியான நரேந்திரரைப் பரமஹம்ஸர் எப்படி இதய சக்தியால் வென்றார் என்பது எழுத்தில் வராத ஊமையின் மகா காவியமாக உள்ளது; அதே போல் கடவுளின் கருணை, நீதி இவை குறித்த முரணான எண்ணங்களைப் பற்றி நரேந்திரர் கண்ட தீர்வும், மோன கவிதையாகவே நிற்கிறது.

இருந்தாலும், ஆண்டவனின் அன்புக்கும், நீதிக்கும் தோன்றும் முரண்பாட்டினை நரேந்திரர் எப்படித் தீர்த்துக் கொண்டார் என்பதையும் நாம் ஒருவாறு அனுமானிக்கலாம்.

நீதிபதியாக இருந்து, அவரவர் கர்ம பயனையே அநுபவிக்கும்படிதான் ஆண்டவன் செய்கிறான். அதுவே கருணை காரணமாகத்தான் என்று சொல்லி விடலாம். ஜீவர்கள் கடவுளுடன் ஒன்றுபட வேண்டும் என்பதற்கு வழி வகுப்பதைவிடப் பெரிய கருணை ஏதேனும் உண்டா? அப்படி ஜீவர்கள் உய்வதற்காகத்தான் கர்ம நியதியை ஆண்டவன் உண்டாக்கியிருக்கிறார். 'அதர்மம் செய்தால் தண்டிக்கப் படுவோம்' என்ற அச்சத்தைவிட மக்களை நல்வழியில் செலுத்த வேறு என்ன உபாயம் உண்டு? தர்ம வாழ்வின் மூலம் தான் கர்மத்தைக் கடக்க முடியும். எனவே ஆண்டவனின் நீதியே—கருமப் பலனே—அவனுடைய கருணையில் பிறந்ததுதான் என்று சொல்லி விடலாம்.

இரண்டாவதாக,

உலகத்துச் சக்திகளுக்கு உட்பட்டு நடக்கும் வரையில் தான் கர்மமும் கர்ம பலனும். கடவுளின் சக்திக்கு 'உட்படும்போது இவை கிடையா. கடவுளின் சக்திக்கு உட்படுவதில் எத்தனையோ வகையுண்டு. உலகத்துச் சக்திகளையும் உண்மையில் இயக்கி வைப்பவன் ஆண்டவன்தான் என்று கண்டு வாழ்பவர்கள் முமுக்ஷுக்கள். அவர்கள் காற்றுப் போக்கில் செல்லும் பாய்மரம் போலத் தங்களைப் பரிபூரணமாகப் பரமனிடம் சமர்ப்பித்துக் கொண்டவர்கள். நம்மால் அது எண்ணிப் பார்க்கவும் முடியாத நிலையாகும். என்றாலும் உலகத்துச் சக்திகளுக்கு மேம்பட்ட கடவுளின் சக்தியை நம்பி, 'ஆண்டவனே காப்பாற்று' என்று அந்தரங்க சுத்தமாக வேண்டிக் கொண்டால், அவ்வாறு வேண்டிக் கொள்ளும் சிறிது பொழுதுக்கு உலக சக்திகளுக்கு உட்படாமல் நேராக ஆண்டவனின் சக்திக்கே உட்பட்டு விடுகிறோம். அப்போது, நீதிபதியாக இருக்கும் ஆண்டவனும் கருணாமயனாகிறான். இன்னலைத் தீர்க்கிறான்.

இவ்வாறு இன்னலை நீக்குவதற்கு அவன் வினையின் விளைவை மாற்ற வேண்



இறைவனுக்கும் அவனின்று பிரிந்து உண்டான பொருள்களுக்கும் ஒரு தொடர்பு இருந்தே வருகிறது. அதுவே இறைபற்று; தெய்வ பக்தி. அந்த இயற்கை வேகத்தைப் புறக்கணித்தோமானால் மனோவியாதிகள் வந்து சேரும். ஆண்டவன் அவசியமில்லை என்று சொல்லி நன்றாகவே இருப்பவர்கள் உண்டு — சிலர் விவாகமில்லாமல் தனிக்கட்டையாக இருப்பது போல். பழைய சொத்து இருக்கும்வரையில் சம்பாதிக்காமல் இருக்கலாம். தானாகவே யோகக்ஷேமம் நடைபெறும். கொஞ்ச காலத்துக்குப் பிறகு அனர்த்தம்தான்!

டும் என்பது கூட அவசியமில்லை. விளைவு அப்படியே இருக்கலாம். ஆனால், அதனால் ஏற்படும் இன்னலைச் சகித்துக் கொள்ளும் மனோபாவத்தைத் தந்துவிடுவான் ஆண்டவன். அதாவது ஒரே சமயத்தில் நீதிபதியாகஇருந்து தண்டனை விதித்து, அதே சமயத்தில் கருணைமூர்த்தியாகவும் இருந்து அந்தத் தண்டனையைப் பொறுத்துக் கொள்ளும் பக்குவத்தையும் தன்னை அண்டினோருக்கு அளித்து விடுகிறான்.

மூன்றாவதாக,

வேதாந்தப்படி இந்தக் கர்மம் என்பதே இறுதியில் கிடையாது. பரம் பொருள் தனது மாயா விலாசத்தால் இத்தனை உலகப் பொருட்களாகவும் தோன்றுகிறது. அந்தத் தோற்றத்தில் நிகழும் நிழல் காட்சிகள்தான் எல்லாக் கர்மமும். மாயை நீங்கினால் நாமே பரம்பொருள் என்பது தெரியும். அப்புறம் செய்ய வேண்டிய கர்மம் எதுவுமே கிடையாது. பரம்பொருளோடு கர்மமற்ற நிலையில் லயித்து விடவேண்டியதுதான். எனவே இறுதியில் இல்லாத இந்தத் தாற்காலிகமான கர்மத்தைப் பற்றியும் அதைக் கடவுள் நீதிப்படிஇயக்குகிறாரா, கருணைப்படி நடத்துகிறாரா என்பதைப் பற்றியும் விவாதிப்பதெல்லாமே பயனற்றவை தானே? நம்மை நாம் உண்மையாக நினைத்தாலும் பரம்பொருளின் கோணத்திலிருந்து நோக்கினால் நாம் வெறும் கற்பனைதானே? கதாசிரியன் ஒருவன் சோகக் கதை எழுதுவது எப்படி அநீதி என்று சொல்ல முடியாதோ அப்படித்தான் ஆண்டவன் தனது கற்பனை உலகில் சோகங்களைப் பரப்புவதும்.



ராஜாஜிகள் தமிழ் நாட்டில்ப் பூர்வத்திலும் இருந்திருக்கிறார்கள். இரண்டாயிரம் வருஷத்துக்கு முன் அவர்கள் வளமாய் இருந்திருப்பார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது. இதற்குத் திருவள்ளுவர் வாய் மொழியில்ச் சான்று இருக்கிறது.

புடம் வைக்கவைக்கப் பொன் நன்றாகப் பிரகாசிக்கும் காரியத்தைத் திருவள்ளுவர் பார்த்திருக்கிறார். உயர்ந்த லட்சியங்களில் கருத்தை வைத்துச் சாதனம்செய்கிறவர்களுடைய (நோற்கிற்பவர்) உள்ளத்தைப் புடம் போடுவது எப்படி என்பதையும் அறிந்திருக்கிறார். இரண்டையும் ஒப்பிட்டுத் திருவள்ளுவர் சொல்கிறார்.

'' சுடச்சுடரும் பொன்போல்,-
ஒளிவிடும், துன்பம்
சுடச்சுட நோற்கிற்
பவர்க்கு''

துன்பத்தின் மூலமாக அரிய ஆழமான உண்மைகள் உள்ளத்தில்ப் பிரகாசிக்கும் என்று திருவள்ளுவர் சொன்னார். அந்தச் சொல்லுக்கு வியாக்கியானம் வேண்டாமா? அது தான் ராஜாஜி. —டி. கே. சி.

ஆனாலும் கதாசிரியனின்று வேறாகப் பாத்திரங்களுக்கு உயிரில்லையே! நாமோ கடவுளினின்று வேறாக இருப்பதாக மயங்கித் துயர்ப்படுகிறோமே! எல்லாவற்றிலும் உள்ள ஈசன்தான் ஓரிடத்தில் சுகத்தையும் இன்னோரிடத்தில் சோகத்தையும் அநுபவிக்கிறான் என்று காணாமல் நம்முடைய ஜீவபாவமே இறுதி வரை உண்மைபோல் நினைத்துச் சுகமும் சோகமும் நம்முடையதாகக் கருதுகிறோமே! இந்நிலையில் அன்பு வடிவமான கடவுள் படைப்பில் எப்படித் துன்பங்கள் இருக்க முடியும் என்று எண்ணத்தான் தோன்றும். இந்தத் தத்துவத்தைப் புரிந்து கொண்ட கவி பாரதியோ

அன்பு வடிவாகி நிற்பள்
துன்பமெலாம் அவள்
இழைப்பள்

என்றும்

இன்ப வடிவாகி நிற்பள்
துன்பமெலாம் அவள்
இழைப்பள்

என்றும் உள்ளத்தைத் தொடுமாறு பாடுகிறார். அன்பு வடிவமான அன்னை ஏன் துன்பங்கள் கூட்டி வைக்கிறாள் என்பதையும் அந்தக் கவி பக்தர் சொல்கிறார்:

இஃதெல்லாம் அவள்
புரியும் மாயை—அவள்
ஏதுமற்ற மெய்ப்
பொருளின் சாயை

ஆம், இந்த உலகத்தில் நாம் காணும் இன்பம், துன்பம் எல்லாமே மாயை. ஆனால் அது மாயை என்பதை நமக்கெப்படித் தெரிவிப்பது? துன்பத்தின் மூலம்தான். துன்பங்களின் மூலம்தான் உலகில் விரக்தி ஏற்பட்டு, இன்பங்கள் என நாம் எண்ணுபவையும் உண்மையில் துன்பங்களே என்ற விவேகம் ஏற்பட முடியும். துன்பமே இல்லாமல் இன்ப மயமாக நம் வாழ்வு அமைந்தால் ஆண்டவனை நாம் நினைக்கவே மாட்டோம். 'விபத்துக்கள்

நிகழ்ந்து கொண்டே யிருக்க நீ அருள்வாய்' என்று கண்ணனைக் குறித்துக் குந்திதேவி பிரார்த்தித்தது இதனால்தான். தொடக்கத்தில் லௌகிக காரணங்களுக்காகத்தான் கடவுளை நினைக்கிறோம். இதுவே அவனை அவனுக்காகவே நினையும் பான்மைக்கு முதல்படியாக உதவும். 'அன்பு காரணமாகவேதான் தேவி துன்பம் தருகிறாள்' என்ற கவி வாக்கு இப்போது புரிகிறதல்லவா?

ஆனால் விவேகாநந்தர் இப்படிப்பட்ட விளக்கம் எதுவும் தரவில்லை. வார்த்தைகளால் விளக்க முடியாத — வேதாந்த சாஸ்திரம் மாயை குறித்துச் சொல்வது போல, 'அநிர்வசனீயமான' - முறையால் ஆண்டவனின் கருணையையும், நீதி முறைமையையும் நரேந்திரர் புரிந்துகொண்டிருப்பாரோ என்னவோ? அப்படி மட்டுமேதான் அதனைப் புரிந்து கொள்ள முடியுமோ என்னவோ?

அவ்வாறு புரிந்துகொண்ட பின் நரேந்திரர் என்ன வானார் என்பதை அவருடைய வார்த்தைகளிலேயே கேளுங்கள்:

''அன்றிலிருந்து உலகாயதமான மக்களின் வந்தனை நிந்தனை இரண்டுக்கும் நான் செவி சாய்க்கவில்லை. சாமானிய மக்களைப் போல் பணம் ஈட்டியும், பெண்டு பிள்ளைகளை வைத்துப் பராமரிக்கவும் நான் பிறக்கவில்லை; புலன் இன்பங்களுக்காகப் பிறக்கவேயில்லை — என்று எனக்கு உறுதி ஏற்பட்டது. என்னுடைய பாட்டனாரைப் போலவே உலகத்தைத் துறக்க நான் ரகசியமாகத் தயாரானேன். துறவியாகக் கிளம்ப ஒரு நாளையும் நிச்சயம் செய்துவிட்டேன்.

''அன்றைக்கே குரு மஹராஜ் கல்கத்தா வரப்போகிறார் என்றறிந்து, மகிழ்ந்தேன். 'என்ன அதிர்ஷ்டம் குருவின் ஆசியுடனேயே உலகத்தைத் துறக்கலாம்' என்று எண்ணிக் கொண்டேன். அதே போல் நான் குருமஹராஜைக் கண்டேன்.

''அவரோ எடுத்த எடுப்பிலேயே என்னைத் தட்சிணேசுவரத்துக்கு வந்து அன்றிரவைக் கழிக்குமாறு வற்புறுத்தினார். நான் ஏதேதோ சாக்குப் போக்குகள் காட்டினேன். பயனில்லை. அவரோடு நான் செல்ல வேண்டியதாக ஆயிற்று. வண்டியில் போகும்போது அதிகமாக ஏதும் பேசிக்கொள்ளவில்லை. தட்சிணேசுவரம் அடைந்தோம். மற்றவர்களுடன் நானும் அவரது அறையில் அமர்ந்தேன்.

''அவர் சமாதியில் ஆழ்ந்தார். அப்படியே என்னை அணுகி வந்தார். மிக மிக மிருதுவாக என்னைத் தீண்டியவாறே பாடலானார். அவரது கண்களில் நீர் நிறைந்தது. இவ்வளவு காலம் நான் என்னுடைய உணர்ச்சிகளை அழுத்தி வைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் இப்போது அந்த உணர்ச்சிகள் கண்ணீரில் வழிந்தன.

''பாட்டின் பொருள் மிகவும் வெளிப்படையாகப் புரிந்தது — என் எண்ணங்கள் அவருக்குத் தெரிந்துவிட்டன. எங்களிருவரிடையே நடைபெற்ற இந்த உணர்ச்சிப் பரிவர்த்தனையைக் கண்டு கூடியிருந்தோர் பேராச்சரியமுற்றனர். குரு மஹராஜ் சகஜ நிலைக்கு வந்தவுடன் அவர்களில் சிலர் இதற்குக் காரணம் என்ன என்று கேட்டார்கள். அவர் புன்னகை பூத்த

"ஐந்தோடு ஆறு?"

ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரின் தர்மபத்தினி 1915ம் ஆண்டில் காலமானார். அப்போது ஆச்சாரியாருக்கு வயது முப்பத்தெட்டுத்தான். முப்பத்தெட்டு வயதில் அவ்வளவு பெரிய அந்தஸ்தில் உள்ள ஒருவருக்கு மனைவி இறந்து போனால் இரண்டாந் தாரம் மணம் செய்து வைக்க எவ்வளவோ பேர் முன்வராமல் இருப்பார்களா?

சாதாரணமாகச் சொன்னால் ஆச்சாரியார் ஒருவேளை கேட்கமாட்டார் என்று எண்ணிச் சில நண்பர்கள் ஒரு அருமையான காரணமும் சொன்னார்கள். ''தங்களுக்கோ ஐந்து குழந்தைகள், வீட்டில் வயதான ஸ்திரீ யாருமில்லை. ஐந்து குழந்தைகளையும் எப்படி வளர்ப்பீர்கள்? குழந்தைகளை உத்தேசித்தாவது மறு கலியாணம் செய்துகொள்ள வேண்டியதுதான்'' என்று போதனை செய்தார்கள். அதற்கு ஆச்சாரியார் என்ன பதில் சொன்னார் என்று தெரியுமா?

''நீங்கள் சொல்வது உண்மையே. ஐந்து குழந்தைகளைப் பார்த்துக் கொள்வது கஷ்டமான காரியம்தான். ஆனால் அது என் கடமை. நீங்கள் சொல்லும் யோசனை என்னுடைய கடமையை இன்னும் கடினமாக அல்லவா செய்கிறது? ஐந்து குழந்தைகளோடு இன்னொரு ஆறாவது குழந்தையையும் பராமரிக்கும் பொறுப்பை யல்லவா என் தலையில் சுமத்தப் பார்க்கிறீர்கள்?''

- 'கல்கி' எழுதிய 'நாட்டுக்கொரு புதல்வர்'

"காரணம் சொல்லுங்கள்!"

ஸ்ரீ ஈ. வே. ராமசாமியாரும் ராஜாஜியும் ஒரு காலத்தில் அரசியல் வாழ்க்கையில் பரிபூரணமாக ஒத்துழைத்தார்கள்.

ஒரு சமயம் தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டியில் ஏதோ ஒரு பிரேரணை வந்தது. அதை ராஜாஜி விரும்பவில்லை. "நாயக்கர்! இந்தப் பிரேரணையைத் தாங்கள் எதிர்த்துப் பேச வேண்டும்!" என்றார் ராஜாஜி. "ஆகட்டும்; ஆனால் என்ன காரணங்களுக்காக எதிர்க்கச் சொல்லுகிறீர்கள்?" என்று ஸ்ரீ ஈ. வே. ரா. கேட்டார். "முதலில் எதிர்த்துப் பேசுங்கள். அப்புறம் காரணங்களைச் சொல்கிறேன். இப்போது நேரமில்லை" என்றார் ஆச்சாரியார். நாயக்கர் பிரேரணையை எதிர்த்துப் பேச ஆரம்பித்தார். பேசப் பேசப் பிரேரணைக்கு எதிரான வாதங்களெல்லாம் ஸ்ரீ ராமசாமி நாயக்கருக்குத் தோன்றிக் கொண்டேயிருந்தன. தோன்றியதையெல்லாம் சொல்லிக் கொண்டே போனார். அவருடைய பேச்சின் பயனாகப் பிரேரணை தோற்றுப் போயிற்று.

பிறகு, ஸ்ரீ ஈ. வே. ரா. "சரி, பிரேரணை தோற்றுவிட்டது; இப்போது காரணங்களைச் சொல்லுங்கள்!" என்றார்.

"நீங்கள்தான் எல்லாக் காரணங்களையும் சொல்லி விட்டீர்களே? அவைதான் என் மனத்திலும் இருந்தன!" என்றார் ராஜாஜி.

- 'கல்கி' எழுதிய 'நாட்டுக்கொரு புதல்வர்'

வாறே 'ஓ. அதுவா? அது எனக்கும் அவனுக்குமிடையே மட்டும் ஏதோ ஒன்று' என்று கூறிவிட்டார்.

"இரவு மற்றவர்களுக் கெல்லாம் விடை கொடுத்தனுப்பிய அவர் என்னைத் தம் பக்கலுக்கு அழைத்துக் கொண்டார். 'அம்பிகையின் காரியத்துக்காக நீ வந்திருக்கிறாய் என்று எனக்குத் தெரியும். எனவே உன்னால் இந்த உலகத்தில் பொருந்தி யிருக்க முடியாது. என்றாலும் எனக்காக, நான் உயிரோடிருக்கும் அளவு நீ இங்கிரு' என்று கூறினார். மீண்டும் கண்ணீரில் கரையலானார்.

"மறுநாள் அவரது அனுமதியுடன் நான் வீடு திரும்பினேன். வீட்டுப் பராமரிப்புக் குறித்து ஓராயிரம் எண்ணங்கள் என்னைத் துளைத்தன. மறுபடியும் வேலை தேடி அலையலானேன். வழக்கறிஞர் ஒருவரின் அலுவலகத்தில் ஒரு வேலை கிடைத்தது. சில புத்தகங்களை மொழிபெயர்த்தேன். இதனால் கைக்கும் வாய்க்கும் ஏதோ உபாயமாகக் கிடைத்தது. ஆனால் இது நிரந்தரமாக இல்லை. என் அன்னையையும் சகோதரர்களையும் வைத்துக் காப்பாற்ற நிரந்தரமான வருமானம் ஏதும் இல்லை.

"ஒரு நாள் திடீரென ஓர் எண்ணம் உதித்தது. 'ஆண்டவன்தான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் பிரார்த்தனைகளைக் கேட்கிறானே! நான் ஏன் என்னுடைய பொருளின்மை விலகுமாறு அவரைப் பிரார்த்திக்கச் சொல்லக்கூடாது? நிச்சயமாக எனக்கு இந்த உபகாரம் செய்யக் குருநாதர் மறுதலிக்க மாட்டார்' என்று எண்ணினேன்.

"தட்சிணேசுவரத்துக்கு விரைந்தேன். என்னுடைய குடும்பத்தின் சார்பில் அவர் பிரார்த்திக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூறினேன். அவர் சொன்னார், 'என் குழந்தாய்! இப்படியெல்லாம் கோரிக்கை விடுக்க என்னால் முடியாது. அது கிடக்கட்டும். ஏன் நீயே போய் அம்பிகையிடம் பிரார்த்திக்கக் கூடாது? உன்னுடைய துன்பங்களுக்குக் காரணமே அவளை நீ மதிக்காததுதான்' என்று.

" 'எனக்கு அம்பிகையைத் தெரியவில்லையே. தயவு செய்து என் பங்கில் நீங்கள் பேசித்தானாக வேண்டும்' என்றேன். 'என் அன்புக் குழந்தாய், நான் திருப்பித் திருப்பி அப்படிச் சொல்லியாயிற்று. ஆனால் நீ அவளை ஒப்புக்கொள்ள மாட்டேன் என்கிறாயல்லவா? அதனால் அவள் என் பிரார்த்தனைகளை ஈடேற்றுவதில்லை. அதெல்லாம் சரி. இன்றைக்கு மங்கள வாரம். இன்றிரவு காளி ஆலயத்துக்குப் போ. அம்பிகையின் முன்னால் தண்டனிடு. உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள். அது நிறைவேற்றப்படும். கைவல்ய ஞானமாகிய அவளே பிரம்மத்தின் விளக்கவொண்ணாத சக்தி. தனது சங்கல்ப மாத்திரத்தில் இந்தப் பிரபஞ்சத்தையெல்லாம் பிறப்பித்தவள் அவள். எதையும் அருளும் ஆற்றல் அவளிடம் உள்ளது' என்றார் ஸ்ரீ ராமகிருஷ்ணர்."

நரேந்திரரின் வாழ்க்கையில் மகத்தானதொரு திருப்பத்தை நிகழ்விக்கப் பரமஹம்ஸர் மனம் கொண்டுவிட்டார். ஆனால் அந்த மகத்துவம் வெளிப்படாமலே சாமானியமாகப் பேசினார்.

அவர் சொன்னபடியே பிரார்த்திப்பது என்று நரேனும் தீர்மானம் செய்து கொண்டார். (தொடரும்)



அபாயம் அழைக்கிறது!

முதலில் உங்களுக்கு என்னை நானே அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. ஒரு பிரபல வழக்கறிஞரின் காரியதரிசி நான். கண்ணபிரானைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்க முடியாது. ஏனென்றால் அவர் பெயரை நான் மாற்றியிருக்கிறேன் இங்கு. ஜார்ஜ் டவுனில் லிங்கிச் செட்டித் தெருவிலுள்ள ஒரு பழங்காலத்துக் கட்டிடத்தில் இரண்டாவது மாடியில் பத்துக்குப் பத்து, பதினாலுக்குப் பன்னிரண்டு அளவில் இரண்டு அறைகள்தான் அவருடைய காரியாலயம். இது நிஜமான விலாசம் இல்லை என்பதை நீங்கள் இதற்குள்ளாக ஊகித்திருப்பீர்கள். அது ஒருபுறமிருக்க இந்த இரண்டு அறைகளுள் சிறிய உள் அறையில் கண்ணபிரானுக்கும் விசாலமான வெளி அறையில் எனக்கும் மேஜை நாற்காலிகளும், 'கிளையண்டுகள்' வந்தால் உட்கார வசதியான சில ஆசனங்களும் போடப்பட்டுள்ளன. சில காரியாலயங்களில் அலங்காரமாக இருக்கட்டும் என்று ஓரிரு பெண்களை வேலைக்கு அமர்த்திக் கொள்வார்கள். ஆனால் மிஸ்டர் கண்ணபிரான் அந்த ரகத்தைச் சேர்ந்தவரல்ல. ஏகப்பட்ட காரியங்களை என் தலையில் சுமத்தி ரொம்பவும் சிரமப்படுத்திவிடுவார். இன்றைக்கு சுமார் நாலு மணி வரை பசி கூடத் தெரியாத அளவுக்கு எனக்கு வேலைகள் இருக்கின்றன. பிறகுதான் 'டிபன் சாப்பிடக் கிளம்புவோமா? அல்லது பையனை அனுப்பி வாங்கி வரச் சொல்லட்டுமா?' என்று கண்ணபிரானைக் கேட்க நினைத்து எழுந்திருக்கிறேன்.

டெலிபோன் மணி அடிக்கிறது. ரிஸீவரை எடுத்து ''எஸ்'' என்கிறேன்.

''கண்ணபிரானின் காரியாலயம்தானே? நான் சிவப்பிரகாசம் பேசுகிறேன். என்னுடைய உயிலை....''

''உம், சொல்லுங்கள்!.... ஹல்லோ..... ஹல்லோ! ஹல்லோ!''

கண்ணபிரான் நான் போடுகிற கூச்சலைக் கேட்டுத் தம் அறையை விட்டு வெளியே வருகிறார். என் முகத்தில் பீதி நிலவுவதைப் பார்த்துவிட்டு, ''என்ன, என்ன விஷயம்?'' என்று விசாரிக்கிறார்.

''சிவப்பிரகாசம் பேசினார். தம்முடைய உயிலைப் பற்றி ஏதோ சொல்ல ஆரம்பித்தார். சட்டென்று அவர் பேச்சுத் தடைப்பட்டது.....''

''பிறகு வேறு ஏதாவது கேட்டதா?''

''மேஜையைத் தட்டுவதுபோல் ஓசை கேட்டது. ஏதோ முனகுவது போலவும் இருந்தது. எனக்கு நிச்சயமாகச் சொல்லத் தெரியவில்லை. ஒரு போராட்டம் நிகழ்ந்திருக்கலாம் என்று தோன்றுகிறது.''

''சரி, நாம் உடனே சிவப்பிரகாசத்தைப் பார்த்துவிட்டு வருவோம். கிளம்பு.''

சிவப்பிரகாசத்தின் உயிலைச் சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்னும்தான் கண்ணபிரான் தயாரித்துத் தந்திருக்கிறார். அவர் சொன்னபடி அதை டைப் அடித்துக் கொடுத்திருப்பதும் நானேதான்.

தமது செல்வத்தை யெல்லாம் தமது ஒரே மகள் வத்சலாவுக்கு என்றே எழுதி வைத்துவிட விரும்பினார் சிவப்பிரகாசம். உயில் எழுத முற்பட்டதற்குக் காரணமும் உண்டு. அப்போதுதான் ஒரு தீவிரமான 'ஹார்ட் அட்டாக்கி'லிருந்து தப்பியிருந்தார் அவர். 'இந்த அதிர்ஷ்டம் நீடிக்குமா? அடுத்த தரம் மாரடைப்பு என்று ஏற்பட்டால் பிழைப்போமா?' என்ற சந்தேகம் அவருக்கு. டாக்டர்களும் ரொம்ப ஒன்றும் தைரியம் சொல்லவில்லை. அதனால்தான் கண்ணபிரானை அழைத்து உயில் எழுதச் சொன்னார் அவர்.

சிவப்பிரகாசத்துக்கு ஒரே பெண்ணும் ஒரே பிள்ளையும்தான். மனைவி இறந்து பல வருஷங்களாகி விட்டன என்று அவர் சொல்லியிருக்கிறார். மாணிக்கம் பிறந்த சில மாதங்களில் அவள் திடீரென்று ஏதோ வியாதியால் பீடிக்கப்பட்டு இறந்துவிட்டதாய்க் கேள்வி. ''மாணிக்கத்துக்கு உயிலில் ஒன்றுமில்லாமல் செய்துவிட்டீர்களே?'' என்று கண்ணபிரான் கேட்டபோது, ''அந்தக் காலிப் பயலுக்குச் சல்லிக் காசு வைப்பேனா?'' என்று சீறினார் சிவப்பிரகாசம். பிறகு ''வத்சலா அவனைக் கவனித்துக் கொள்வாள். அவ்வப்போது அவனது அவசியத் தேவைகளுக்கு ஏற்ப ஏதாவது பணம் தந்து உதவுவாள். அப்படியின்றி, அவனுக்கென்று ஏதேனும் சொத்து எழுதி வைத்தால் நாலே நாட்களில் எல்லாவற்றையும் பறக்க அடித்துவிட்டு நடுத் தெருவில் நிற்பான்'' என்றார் சிவப்பிரகாசம்.

அவர் விருப்பப்படி உயில் எழுதி ரிஜிஸ்தரும் ஆகிவிட்டது. ஆனால் அன்றைக்கே கண்ணபிரான் சொன்னார், ''இது இத்துடன் முடிகிற கதையில்லை. இன்னும் இரண்டொரு வாரங்களில் சிவப்பிரகாசத்தின் மனம் மாறிவிடும். என்னதானிருந்தாலும் பிள்ளைப் பாசம் யாரை விடும்? உயிலை மாற்றத்தான் போகிறார், பார்!'' என்று.

அதற்கேற்ற மாதிரியேதான் இன்று சிவப்பிரகாசமும் டெலிபோனில் உயிலைப் பற்றிப் பேச்செடுத்தார். ஆனால் அவர் பேச்சு பாதியில் தடைப்படும்படி அவருக்கு என்ன நேர்ந்திருக்கும்? மீண்டும் மாரடைப்பா?


ஜெயந்தி

சிவப்பிரகாசத்தின் வீட்டில் வத்சலா ஓரேயடியாகக் கதறி அழுது கொண்டிருக்கிறாள். கண்ணபிரானைப் பார்த்ததும் அவள் புலம்பல் அதிகமாகிறது.

''ஐயோ! தப்பெல்லாம் என் பேரில்தான். அப்பாவுக்கு உடம்பு சரியில்லை என்று நன்றாகத் தெரியும். தம்பி ஊர் சுற்றக் கிளம்பி விடுவானென்றும், சமையல்காரன் சங்கரன் லீவு எடுத்துக் கொண்டு தன் அண்ணா வீட்டுக்குப் போயிருக்கிறான் என்பதும் எனக்குத் தெரியும். அப்படி இருந்தும் கவனிப்பாரில்லாமல் அப்பாவைத் தனியே விட்டு விட்டு சினிமாவுக்குப் போனேனே, சினிமாவுக்கு!'' என்று தலையில் படீர் படீர் என்று அடித்துக் கொள்கிறாள். அவள் கணவன் காளமேகம் அவள் தோள்களைப் பற்றிச் சமாதானம் செய்ய முற்படுகையில் அவரை உதறித் தள்ளிவிட்டு அப்பால் பாய்கிறாள் அவள். ''நீங்கள்தான் என்னை சினிமா நன்றாக இருக்கும் என்று சொல்லி வற்புறுத்தி அழைத்துப் போனீர்கள். உங்களால்தான் என் அப்பா அனாதை போல் பக்கத்தில் யாரும் இல்லாமல் செத்துப் போனார். என் அப்பாவைக் கொண்டு வாருங்கள்!'' என்று பித்துப் பிடித்தாற்போல் கத்துகிறாள்.

எனக்கு அவள் கூப்பாட்டைக் கேட்கவும் அவள் கையையும் காலையும் உதைத்துக் கொள்வதைப் பார்க்கவுமே அருவருப்பாயிருக்கிறது. 'என்னதானானால் என்ன? இப்படியா பிசாசு பிடித்தது போல்....ஒருவேளை இது எல்லாமே நடிப்போ?'

''சுமார் பதினைந்து நிமிஷங்களுக்கு முன்னால் சிவப்பிரகாசம் எனக்குப் போன் செய்ததாக என் காரியதரிசி சொல்கிறாள். உயிலைப் பற்றி அவர் பேச முற்பட்டார் என்றும், அவர் பேச்சுப் பாதியில் தடைப்பட்டது என்றும் ஏதோ போராட்டம் நடப்பது போல் கேட்டதென்றும் கூறுகிறாள். இதைப் பற்றிப் போலீசார் மேலும் ஆராயாமல் விடமாட்டார்கள்'' என்று கூறியபடியே போலீஸுக்குப் போன் செய்கிறார் கண்ணபிரான்.

போலீஸார் வருவதற்கு முன்பாகவே மாணிக்கத்தின் மோட்டார் சைக்கிள் வருகிற ஓசை கேட்கிறது. உடனே காளமேகம் அவனைச் சந்திக்க கேட்டுக்கு வெளியேயே போய் விடுகிறார். அங்கேயே அவனை நிறுத்தி ஆதரவாகத் தோளை அணைத்தபடி அவன் தகப்பனார் இறந்து போன விவரத்தை மெல்லத் தெரிவிக்கிறார்.

திடுமென ரௌத்திராகாரமடைகிறான் மாணிக்கம். தன் பாக்கெட்டிலிருந்து ஒரு துப்பாக்கியை எடுத்து காளமேகத்தை நோக்கிக் குறி பார்க்கிறான்.

''அயோக்கியப் பயலே அப்பாவின் மனம் மாறி எங்கே உயிலை மாற்றி விடுவாரோ என்ற பயத்தில் அவரைக் கொன்று விட்டு மாரடைப்பினால் செத்துப் போனார் என்று வேஷம் போட்டுக் கண்ணீர் விடுகிறாய்! உன் ஜால வித்தையெல்லாம் என்னிடம் பலிக்காது. என் மீது அன்பையும் அனுதாபத்தையும் சொரிவது போல் நடிக்கிறாயா? இப்போதே தொலைத்து விடுகிறேன், உன்னை'' என்று கத்துகிறான்.



அப்போது கண்ணபிரான் பாய்ந்து போய் பின்பக்கத்திலிருந்து மாணிக்கத்தின் கையைப் பற்றிச் சடாரென்று மேல் நோக்கித் தூக்குகிறார். அந்த வேகத்தில் துப்பாக்கியுடன் கூடிய மாணிக்கத்தின் கரம் காளமேகத்தின் முகவாயைத் தாக்க அவர் தடுமாறி விழுகிறார். துப்பாக்கி வெடிக்கிறது. ஆனால் ஆகாயத்தை நோக்கித்தான்.

கண்ணபிரான் மட்டும் அப்படி சமயோசிதமாய் செயலாற்றி இருக்க வில்லையானால் நிச்சயம் இன்னொரு மரணம் இங்கு இன்று சம்பவித்திருக்கும். நல்ல வேளை, இதற்குள் போலீஸாரும் வந்து விடுகிறார்கள். அவர்கள் தலையைக் கண்டதும் பெட்டிப் பாம்பாக மாறுகிறான் மாணிக்கம். அவன் துப்பாக்கியையும் அவர்கள் பறிமுதல் செய்து கொண்டு விடுகிறார்கள்.

ஃ ஃ ஃ

மறு நாள் காலையில் பேப்பரில் கொலை சம்பந்தமான தகவல்கள் வெளிவந்து விடுகின்றன. சிவப்பிரகாசம் பணக்காரரே ஒழிய அப்படி ஒன்றும் பிரபலஸ்தர் இல்லை. அதனால் செய்திக்கு ரொம்ப முக்கியத்வம் தரப்படவில்லை. அதோடு அகில உலக முக்கியத்துவம் வாய்ந்த சில கொலைகளைப் பற்றிய செய்திகள் வெளிவந்து இதை ஒரேயடியாய் அமுக்கிவிடுகின்றன. ஒரு பக்கத்தில் ''ராயப்பேட்டையில் கொலை'' என்ற தலைப்பில் சுருக்கமாக விஷயம் வெளியாகி இருக்கிறது. சிவப்பிரகாசத்தின் மகனும் மாப்பிள்ளையும் போலீஸ் பாதுகாப்பில் இருப்பதாகக் கண்டிருக்கிறது.

டெலிபோன் மணி அடிக்கிறது.

''கண்ணபிரான் இருக்கிறாரா?''

''இருக்கிறார். பேசுவது யார்?''

''இன்ஸ்பெக்டர் சேஷாசலம். அவரைப் பார்க்க வந்து கொண்டிருக்கிறேன். அவரை எங்கேயும் போக வேண்டாமென்று சொல்லி வையுங்கள்.''

''நீங்கள் எப்படியும் வருவீர்கள் என்று எதிர்பார்த்துத்தான் அவர் ஆபீஸிலேயே காத்திருக்கிறார்'' என்கிறேன் நான்.

பத்து நிமிஷங்களில் வந்து விடுகிறார் சேஷாசலம்.


''கண்ணபிரான்! உங்கள் ஒத்துழைப்பு எங்களுக்குக் கிடைக்குமென்று நம்புகிறேன். உங்களுக்குத் தெரிந்ததையெல்லாம் சொல்லுங்கள்'' என்கிறார்.

கண்ணபிரான் உயிலைப் பற்றியும் டெலிபோனில் என்னிடம் சிவப்பிரகாசம் பேசியது குறித்தும் குறிப்பிடுகிறார்.

''புதிதாக ஒன்றுமில்லை. ஏற்கெனவே எனக்குத் தெரிந்த விஷயங்கள்தான்.''

''கொலை என்பது நிர்மாணம்தானே?''

''இறந்தவர் வயிற்றில் ஒரு யானையைக் கொல்லக் கூடிய அளவுக்கு விஷம் இருந்தது. சிவப்பிரகாசம் மது அருந்த லைசென்ஸ் வைத்திருந்தார். மதுவில் தூக்க மருந்தை ஏராளமாகக் கலக்கிக் கொடுத்திருக்கிறார்கள். மது வாடையில் மருந்து கலந்திருப்பது தெரியவே தெரியாது''



சிரஞ்சீவி Lt. S. ராஜன் - சௌ. இந்திரா

காலஞ்சென்ற ஸ்ரீ பி. கே. ராம ஐயர் (of M/s. R. Hanumanthappa & Son, Coimbatore) அவர்களின் குமாரியும், ஸ்ரீ வி. பி. சேஷாத்ரி (of M/s T. T. (P) Ltd., Bangalore)யின் மைத்துனியுமான சௌ. இந்திராவுக்கும்; காலஞ்சென்ற ஸ்ரீ பி. வி. சுப்ரமணியம் (of Lawrence School, Lovedale) அவர்களுடைய குமாரரும், கேப்டன் பி. எஸ். வாஞ்சீஸ்வர் (of Mercantile Marine Dept., Ministry of Transport, Calcutta) அவர்களின் சகோதரருமான சிரஞ்சீவி Lt. எஸ். ராஜனுக்கும் சென்ற 30-10-63 அன்று பெங்களூரில் விமரிசையாக திருமணம் நடந்தேறியது.

''மத்தியானம் ஒன்றரை மணி ஆட்டத்துக்கு சினிமா போய்விட்டு நாலு மணி சுமாருக்கு வீடு திரும்பிய போதே சிவப்பிரகாசம் டெலிபோன் இருக்கும் மேஜை அருகே இறந்து விழுந்து கிடந்ததாய் வத்சலாவும் காளமேகமும் சொல்கிறார்கள்; என்ன நடந்ததென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?''

''சிவப்பிரகாசம் உயிலை எழுதியதும் அவர் பையன் மாணிக்கம் வருத்தப்பட்டுப் பேசியிருக்கிறான். நல்ல பையனாய் நடந்து கொள்வதாய் வாக்களித்திருக்கிறான். இரண்டு மூன்று நாட்கள் விடாமல் அவரிடம் பேசி அவர் மனத்தை மாற்றியிருக்கிறான். இதை வத்சலாவும் அவள் கணவனும் கவனித்து வந்திருக்கிறார்கள். உயிலை அவர் மாற்றினால் சொத்தில் அவர்களுடைய பங்கு இப்போதுள்ளதை விட மிகவும் குறைந்து போகும். அல்லது ஒரேயடியாய் ஒன்றுமே இல்லாமல் போய்விடலாம் என்று உணர்ந்திருக்கிறார்கள். அவர்கள் சினிமாவுக்குப் போய்விட்டு நாலு மணிக்குத் திரும்பி வந்தார்கள். சிவப்பிரகாசம் அவர்களிடம் தாம் உயிலை மாற்ற முடிவு செய்து விட்டதாய்த் தெரிவித்திருக்கிறார். அந்தத் தீர்மானத்தை அவர் நிறைவேற்றி வைக்கு முன்னர் மாப்பிள்ளை மதுவில் எக்கசக்கமாய்த் தூக்க மருந்தைக் கரைத்துக் கொடுத்திருக்கிறார். அதை அருந்திவிட்டு உங்களுக்கு உயிலைப் பற்றி டெலிபோன் செய்ய முற்பட்ட சிவப்பிரகாசம் தாம் கூற வந்ததைக் கூறி முடிக்கு முன்னதாகவே இறந்து விழுந்து விட்டார். மாப்பிள்ளை மேலே பேச விடாமல் அவரைத் தடுத்துமிருக்கலாம். விஷமும் வேலை செய்திருக்கிறது. மேஜை மீது அவர் உடல் மோதிப் பிறகு தரையில் விழுந்த சத்தத்தை உங்கள் காரியதரிசி கேட்டிருக்கிறான். டெலிபோனில் பாதியில் தடைப்பட்ட சிவப் பிரகாசத்தின் குரலைக் கேட்டதால் கவலை கொண்டு நீங்கள் கண்டிப்பாய் அவரைத் தேடி வருவீர்கள் என்று அவர்களுக்குத் தெரியும். ஆகவே மதுக் கிண்ணங்களை யெல்லாம் சுத்தமாய்க் கழுவி வைத்துவிட்டு வாசலில் உட்கார்ந்து அழுது புலம்பி யிருக்கிறார்கள். மாரடைப்பினால் சிவப்பிரகாசம் மாண்டு போனதாக நீங்கள் முடிவு கட்டுவீர்கள் என்றே அவர்கள் எண்ணி யிருந்தார்கள். 'டாக்டரை, இனி அழைத்துப் பயனென்ன? மேற்கொண்டு ஆக வேண்டியதைக் கவனிக்கலாம்' என்று மயானத்துக்கு உடலைத் தூக்கிப் போகும் யோசனையைச் சொல்லவும் காளமேகம் தயங்கி யிருக்க மாட்டார். ஆனால் அவர்கள் போதாத காலம் நீங்கள் போலீஸுக்குப் போன் செய்துவிட்டீர்கள்!''

''சொந்த அப்பனைக் கொல்ல மகன் உடந்தையாக இருப்பதா? என்ன சொல்கிறீர்கள் நீங்கள்?''

''பணம் எதையும் சாதிக்கும் என்று நான் அனுபவத்தில் கண்டிருக்கிறேன், கண்ணபிரான்! அவன் தந்தை பலவீனமான இதயம் கொண்டவர். 'எப்படியும் அவர் வாழ் நாட்கள் விரல் விட்டு எண்ணக் கூடியவைதான். அவர் முடிவு சில நாட்கள் முன்னதாகவே நிகழுமாறு சற்றுத் துரிதப்படுத்துகிறோம் அவ்வளவுதான்' என்று காளமேகம் எடுத்துக் கூறி யிருப்பான். அதோடு நீங்கள் இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். எந்த ஒரு பெண்ணும் தன் தகப்பனார் இறந்து போவதைக் கூடச் சகித்துக் கொள்வாள். ஆனால் தான் அமங்கலியாவதைத் தாங்கவே மாட்டாள்!''

''அதனால்?''

''தன் கணவன் இந்தக் காரியத்தைச் செய்துவிட்ட போதிலும் தன் அப்பாவாயிற்றே என்று கூட நினையாமல் கணவனைத் தூக்கு மேடையிலிருந்து காப்பாற்றுவதையே முக்கியமாகக் கருதுவாள். அவனைக் காட்டிக்கொடுக்கவே மாட்டாள்!''

''இதெல்லாம் உங்கள் ஊகம்தானே? சாட்சியம்?''

''அதைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன். கேட்கிறபடி கேட்டால் கிடைக்க வேண்டியது கிடைக்கும். கவலைப்படாதீர்கள்!''

''தனக்குச் சொத்து எழுதி வைக்கவில்லை என்பதால் கோபப்பட்டு மகன் மாணிக்கம் இக் காரியத்தைச் செய்திருக்கக் கூடாதோ?''

''இருக்கவே முடியாது. நாலு மணிக்குச் சிவப்பிரகாசம் உங்களுக்கு போன் செய்திருக்கிறார். அப்போதே இறந்து விழுந்திருக்கிறார். ஆனால் மாணிக்கம் மாலை இரண்டு மணி முதல் நாலரை மணி வரை கிளப்பில் சீட்டாடிக் கொண்டிருந்திருக்கிறான் நண்பர்களோடு.''

''நடுவே எழுந்து போகவே இல்லையாமா?''

''எழுந்து போனான்; ஆனால் அது பாத்ரூமுக்குத்தான். பத்து நிமிஷத்தில் சீட்டாட மேஜைக்குத் திரும்பி விட்டான். பத்து நிமிஷத்தில் அடையாறிலிருந்து ராயப்பேட்டை வந்து கொலை செய்து விட்டுத் திரும்ப முடியுமா?''

''முடியாது தான்'' என்கிறார் கண்ணபிரான்.



தமிழ் நாட்டை இன்னும் கொஞ்சம் மேம்படச் செய்ய நாம் யோசிக்க வேண்டும். ஒருவரோடு ஒருவர் தோழர்களாகக் கங்கணம் கட்டிக் கொண்டு போட்டிகளையும் வெறுப்புக்களையும் தூவென்று தள்ளி, 'தமிழ் நாட்டு ஆண்களும், பெண்களும் மிக நல்லவர்கள், பொய்யும் பித்தலாட்டமும் அவர்களிடம் கிடையாது; அவர்கள் புத்திசாலிகள்; நகைச்சுவை பொங்கி யொழுகப் படைத்தவர்கள்; படபடப்பு கிடையாது; அகம்பாவம் இல்லை; துன்மார்க்கத்தை வெறுக்கிறார்கள்; அவர்களை எப்போதும் நம்பலாம்' என்று நம்முடைய நாட்டுக்குப் பெயர் சம்பாதிக்க வேண்டும். இது கஷ்டமில்லை. ஆண்டவனை உள்ளமுருக வேண்டிக் கொண்டால் நிச்சயமாக உண்டாகும்.

— ராஜாஜி

இன்ஸ்பெக்டர் விடை பெற்றுக்கொண்டு போய்விடுகிறார்.

''நாமும் கிளம்புவோமா?'' என்கிறார் கண்ணபிரான்.

''எங்கே?''

''சிவப்பிரகாசம் வீட்டுக்குப் போய் மாணிக்கத்தைப் பார்த்துவிட்டு வரலாம்.''

''நினைத்தேன்!''

''என்னவென்று?''

''பெண்கள் என்றாலே உங்களுக்குப் பரிவு அதிகம். அதாவது என் ஒருத்தியைத் தவிர. அப்படி யிருக்கும்போது வத்சலாவை அபாயம் அணைக்கிற சமயத்தில் நீங்கள் விட்டுக் கொடுத்து விடுவீர்களா?''

''எந்தப் பெண்ணிடம் பரிவு காட்டினாலும் அர்த்தமே இல்லாமல் உனக்கு ஒரு பொறாமை!'' என்ற கூறிய கண்ணபிரான் காரில் ஏறினார்.

சமையல்காரன் சங்கரனும் மாணிக்கமும் வீட்டிலேதான் இருக்கிறார்கள். கண்ணபிரானைக் கண்டதும் சங்கரன், ''ஐயாவுடைய கறுப்புப் பணத்தைப் பற்றி இவங்க யாரும் ஒண்ணும் பேசவில்லை. திருடனுக்குத் தேள் கொட்டின மாதிரி வாயை கப்சிப் பென்று மூடிக்கொண்டிருக்கிறார்கள். போலீஸ் சோதனையிலும் அது அகப்படவில்லை. அவர்களுக்கு ஐயா கறுப்புப் பணம் சேர்த்துவைத்திருந்தது தெரியவும் நியாயமில்லை. அதனால் அவர்கள் அதைத் தேடப் போகிறதும் இல்லை. ஆனால் நான் குட்டை உடைத்துவிடப் போகிறேன். 'ஐயா பிஸினஸ்ஸிலே கணக்கிலே வராத கறுப்புப் பணம் நிறைய வைத்திருந்தார். வீட்டிலே யாருக்கு என்ன வேணுமானாலும் அந்தப் பணம்தான் செலவாகும். அதனாலே யார் கத்தை கத்தையாக நூறு ரூபாய் நோட்டுக்களை ஒளித்து வைத்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள்தான் ஐயாவைக் கொலை செய்தது' என்று சொல்லிவிடப் போகிறேன்'' என்கிறான்.

கண்ணபிரான் மாணிக்கத்தைப் பார்த்து, ''விஷயம் எனக்குப் புரிந்து விட்டது. உன் அப்பா உனக்கு உயிலில் ஒன்றும் எழுதி வைக்கவில்லை என்ற ஆத்திரத்தில் அவரைக் கொன்றுவிட்டுக் கறுப்புப் பணத்தையெல்லாம் சுருட்டிக் கொண்டாய். உன் அக்கான் மீது கொலைக் குற்றம் சுமத்தினால் எல்லாச் சொத்துமே உனக்குத்தான் சேரும். அத்தான் மீது குற்றம் சுமத்தினாலோ உனக்குக் கறுப்புப் பணம் வரைக்குமாவது மிஞ்சும். அதுதானே உன் திட்டம்?'' என்று கேட்கிறார். ''உன் அப்பாவுடைய நல்ல பெயருக்குப் பங்கம் ஏற்படுகிற மாதிரியாகக் 'கறுப்புப் பணத்தைக் காணோம்' என்று யாரும் வாய் திறந்து சொல்லவே மாட்டார்கள். அப்படித் தானே நீ எதிர்பார்த்தாய்?''

மாணிக்கம் சிரிக்கிறான். ''திருட்டுப் பட்டம் வேணுமானாலும் என்மீது சுமத்துங்கள். கொலைக் குற்றம் சுமத்தப் பார்க்காதீர்கள். உங்களுக்குத் தோல்விதான் கிட்டும்!''



''எந்தத் தைரியத்தில் அப்படிச் சொல்கிறாய்?''

''நீங்களேதான் போலீஸாரிடம் நாலு மணி சுமாருக்கு அப்பா இறக்கும் தறுவாயில் உங்களுடன் பேசியதாகச் சொன்னீர்கள். நான்தான் இரண்டிலிருந்து நாலரை வரை கிளப்பில் சீட்டாடிக் கொண்டிருந்தேனே நண்பர்களுடன்?''

''நான் போலீஸாரிடம் அப்படிச் சொல்லவில்லை. 'சிவப்பிரகாசம் டெலிபோனில் பேசியதாக என் காரியதரிசி சொன்னாள்' என்றேன்.''

''இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?''

''நிறைய வித்தியாசம் இருக்கிறது. நீ இடையில் பத்து நிமிஷங்கள் உன் நண்பர்களுடன் இல்லை. பாத்ரூம் போவதாகச் சொல்லிவிட்டு அவர்களைப் பிரிந்தாய். ஆனால் உண்மையில் என் காரியாலயத்துக்குப் போன் பண்ணி உன் அப்பா பேசுவது போன்ற குரலில் ஆரம்பித்து, 'உயிலை....' என்று முடித்தாய். பிறகு முனகுவது போல் ஒலி எழுப்பினாய். கீழே விழுவது போல் அந்த 'பப்ளிக் டெலிபோன் பூத்' சுவரைத் தட்டிச் சத்தம் கிளப்பினாய். அப்புறம் நண்பர்களுடன் சேர்ந்து கொண்டாய். உன் அக்கான், அத்தான் இவர்கள் மீது சந்தேகம் உண்டாக 'உயிலை...' என்று இழுத்தாற் போல் சொல்லி நிறுத்தினாய். என் காரியதரிசி மட்டும் பதற்றம் அடையாமல் சற்று உற்றுக் கவனித்திருந்தாளானால் அவளுக்குப் பத்தும் ஐந்துமான நயா பைசா நாணயங்கள் விழும் ஓசை கூடக் கேட்டிருக்கும் டெலிபோனில். உன் நண்பர்களைக் கேட்டால் நீ சரியாக நாலு மணிக்குத்தான் எழுந்து போனாய் என்பார்கள். அந்த நேரத்தில் தான் சினிமா முடிந்து உன் அக்காவும் அத்தானும் வீடு திரும்புவார்கள் என்று உனக்குத் தெரியும்! சற்றுப் பொறுத்து நீயும் வீட்டுக்கு வந்து முன் யோசனைப்படி உன் அத்தான் மீது பாய்ந்து ரகளை செய்தாய்!''

மாணிக்கம் விழித்தான். ''அப்பாவுக்குத் தெரியாமல் கறுப்புப் பணத்தை நான் எடுத்தது என்னவோ வாஸ்தவம்தான். ஆனால் சத்தியமாக நான் அப்பாவுக்கு ஒரு தீங்கும் இழைக்கவில்லை. இவர் சொல்வது அத்தனையும் அபாண்டம்.''

''அது எப்படியோ போகட்டும். நீ கறுப்புப் பணத்தை எங்களுடன் பங்கு போட்டுக் கொள். நாங்கள் அது விஷயமாய் ஊமைகளாகி விடுகிறோம்'' என்கிறான் சங்கரன்.

மாணிக்கம் தோட்டத்துப் பக்கம் போய் ஓரிடத்தைத் தோண்டுகிறான். ஒரு பெட்டியில் கத்தை கத்தையாக நூறு ரூபாய் நோட்டுக்கள் இருக்கின்றன.

''உள்ளே போய் எண்ணிப் பார்த்துவிட்டுப் பங்கு போட்டுக் கொள்ளலாம். இங்கே பக்கத்து வீட்டு மனிதர்கள் பார்த்துத் தொலைப்பார்கள்'' என்ற சங்கரன் பெட்டியைத் தூக்கிக் கொண்டு 'குடுக்'கென்று ஓடிப் போய்ச் சமையலறையில் கதவைச் சாத்திக் கொண்டு விடுகிறான்.

கதவைத் தட்டி ரகளை செய்ய மாணிக்கத்துக்குப் பயம். 'என்ன? ஏது?' என்று அண்டை அயலாருடைய கேள்விகள் பிறப்பதை அவன் விரும்பவில்லை.

பதினைந்து நிமிஷமாகிறது. சங்கரன் கதவைத்திறக்கிறான்.

''எங்கே என் பங்கைக் கொடு'' என்கிறான் மாணிக்கம்.

ஒரு பிடி சாம்பலை அடுப்பிலிருந்து எடுத்து நீட்டுகிறான் சங்கரன்.

''கேவலம் அந்தக் காகிதம் தானே உன்னைக் கொலை செய்யவும் தூண்டியது? அதனால் அத்தனையையும் நெருப்பிலே போட்டு விட்டேன்'' என்கிறான்.

''அடப் பாவி!'' என்று கத்தியபடி மாணிக்கம் சாம்பலை அள்ளி அள்ளி மேலேயெல்லாம் போட்டுக் கொள்கிறான், பித்துப் பிடித்தவன் போல்.

''கவலைப்படாதே மாணிக்கம்! அத்தனையும் சல்லிக்காக பெறாத கள்ள நோட்டுக்கள்தான்'' என்கிறார் கண்ணபிரான்.

''என்ன?'' என்று அதிசயத்துடன் வினவுகிறான் மாணிக்கம்.

''கள்ளநோட்டுத் தயாரிப்பாளருடன் தொடர்பு கொண்டு சிவப்பிரகாசம் ஒரு நல்ல நோட்டுக்குப் பத்துப் பதினைந்து கள்ள நோட்டுக்கள் விதம் வாங்கிச் சேகரித்திருப்பார். கள்ள நோட்டுக்களை ஒவ்வொன்றாய் அவ்வப்போது மாற்றிப் பல பொருள்களை வாங்கியிருப்பார். இல்லாது போனால் எப்படி உன் அப்பா இத்தனை பணக்காரராஞர் என்று எண்ணுகிறாய்? சங்கரன் கள்ள நோட்டுத் தயாரிப்பாளருக்கும் சிவப்பிரகாசத்துக்கும் இடையே நோட்டுப் பரிவர்த்தனை செய்யப்போய் வந்திருப்பான். சிவப்பிரகாசம் இறந்ததும் எங்கே கள்ள நோட்டு வியாபாரம் வெளியாகிவிடுமோ என்று பயந்திருக்கிறான். நல்ல வேளையாகப் போலீஸார் கண்களில் படாதவாறு அந்த நோட்டுக்களை நீ எடுத்துப் பத்திரப்படுத்தி யிருக்கிறாய். தனக்குக் கிடைத்த முதல் சந்தர்ப்பத்தில் அத்தனையையும் கொளுத்தி விட்டான் சங்கரன். 'பணத்தாசைதானே கொலை செய்யவும் தூண்டுகிறது என்பதால் எரித்துவிட்டேன்' என்று முற்றும் துறந்த ஞானி போல் பேசுகிறான். கிட்டத்தட்ட லட்சம் ரூபாயை நெருப்பிலே போடத் துறவிக்குக் கூட மனம் வராதே!''

சங்கரன் சிரிக்கிறான். ''பலமான குற்றச்சாட்டுத்தான்.''

''அதை நிரூபிக்க முடியாதென்பதையும் உணர்ந்திருக்கிறேன், சங்கரன்! நீ கெட்டிக்காரன்'' என்கிறார் கண்ணபிரான்.

''போயும் போயும் கள்ளநோட்டுக்காகவா அப்பாவைக்.....''

''ஏன் நிறுத்திவிட்டாய்? '...அப்பாவைக் கொலை செய்தேன்' என்றுதானே சொல்ல வந்தாய்?''

முன்காலத்தில் பிரார்த்தனையின் சக்தியில் ஒரு நிலையான நம்பிக்கை கொள்ளும் வழக்கம் இருந்தது. பிரார்த்தனையின் சக்தியில் நம்பிக்கையில்லாத ஒரு பகுதியினரின் நடவடிக்கைகள், பிரசாரம் காரணமாக அதை இப்போதெல்லாம் மறந்து விட்டோம். இழந்த பழக்கத்தில் ஓரளவாவது மீண்டும் ஏற்படுத்தும் பொறுப்பு உங்களுடையது. ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்தவுடன் பிரார்த்தனை செய்வதை முதல் வேலையாக வைத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய இருதயத்தைத் தூய்மைப்படுத்துமாறும், நம்முடைய முயற்சிகள் வெற்றிபெற ஆசிர்வதிக்குமாறும் கடவுளைப் பிரார்த்திக்க வேண்டும். நீங்கள் இதைச் செய்தீர்களானால் உங்கள் முயற்சிகள் யாவும் இறுதியில் வெற்றி பெறும் என்பதில் சந்தேகமே இல்லை.

— ராஜாஜி

''அப்பாவாம் அப்பா! அவர் ஒன்றும் என் அப்பா இல்லை. என் சொந்த அப்பாவாக இருந்தால் சல்லிக் காக எனக்கு எழுதிவைக்காமல் நடுத் தெருவில் நிற்க வைப்பாரா? நான் யார்? யாரோ ஒருவனுக்கும் யாரோ ஒருத்திக்கும் மகனாகப் பிறந்தவன். அந்த யாரோ ஒருத்தியுடன் இவர் கள்ள நட்பு வைத்திருந்ததால் என்னைப் போனால் போகட்டும் என்று எடுத்து வளர்த்தாராம். இத்தனை நாட்களாக என்னைப் பஞ்சணை மெத்தையில் பணக்கார வீட்டுப் பிள்ளையாக வாழ வைத்துவிட்டுத் திடீரென்று என்னைச் சாக்கடையில் புரளுமாறு தள்ளினால் எனக்கு எப்படி இருக்கும்? நான் ஏழையாகவே வாழ்ந்திருந்தால் எனக்கு இந்த ஏமாற்றம் ஏற்பட்டிருக்குமா? உயிலை மாற்றுங்கள் என்று பத்து நாட்களுக்கு மேலாக நான் கெஞ்சியபோதெல்லாம் 'ஆகட்டும் பார்க்கலாம், யோசிக்கிறேன்' என்றெல்லாம் ஆசை காட்டிவிட்டுத் திடுமென, 'உண்மையைச் சொல்லத் தீர்மானித்து விட்டேன்; நீ என் மகனே இல்லை. அதனால் உனக்கு என் சொத்தில் பங்கில்லை' என்றார். என்னால் பொறுக்க முடியவில்லை; பொறுக்கவே முடியவில்லை! அவரைப் பழிக்குப் பழி வாங்கிவிட்டுப் பணத்தையும் புதைத்து வைத்தேன். டெலிபோனில் நான் பேசியது பற்றி உங்கள் ஊகமெல்லாம் சரிதான், ஸார்! — திருப்திதானே? சொல்லுங்கள், திருப்திதானே?'' என்று கதறிக் கொண்டே மாடிப் படிகளில் ஓடுகிறான் மாணிக்கம்.

கண்ணபிரான் போலீஸுக்குப் போன் செய்கிறார். காரில் ஏறிக் காரியாலயத்துக்கு வந்து சேர்கிறோம்.

உள்ளே நுழைகையில் டெலிபோன் மணி அடித்துக்கொண்டிருக்கிறது. இன்ஸ்பெக்டர் சேஷாசலம் பேசுகிறார்.

''என்ன இது? எங்களுக்கு டெலிபோன் செய்துவிட்டு ஆள் கிளம்பிவிட்டாரே! இங்கே வந்து பார்த்தால் மாணிக்கம் ஒரு பாட்டில் தூக்க மருந்தைச் சாப்பிட்டுவிட்டு இறந்து கிடக்கிறான்....?''

''யார் வேண்டும் உங்களுக்கு? கண்ணபிரானா? அவர் இங்கே இல்லையே? ஒன்றரை மணி ஆட்டத்துக்கு மினர்வா டாக்கீஸ் போயிருக்கிறார்'' என்கிறேன் நான்.

''பேஷ்! சரியான யோசனை! கிளம்பு. போகலாம்'' என்கிறார் கண்ணபிரான்.

மர்மக் கதை

பத்தினிக் கோட்டம்



அத்தியாயம் முப்பத்தொன்று

ஜனநாயகன்

"சிந்திப்பதற்கு இனி இடமே இல்லை, அரசே! ஏனென்றால் நாம் எதிர்பார்த்ததைவிட நிலைமை வெகு வேகமாகச் சீர்குலைந்து போய்க்கொண்டிருக்கிறது!"

தம்மை மீறிய துடிப்பும் வெடிப்புமாக இவ்வாறு கூறிக்கொண்டே ஆசனத்தை விட்டு 'விருட்'டென்று எழுந்த பெரும்பிடுகு முத்தரையர் பொறுமையிழந்த குரலில் மேலும் படபடத்தார்: "அரசாங்கத்தின் அன்றாட அலுவல்களும் உத்தரவுகளும்கூடச் சரிவரச் செயல்பட முடியாத அளவுக்கு நிலைமை மோசமடைந்து விட்டது. உயர்தர ஆளுங்கணத்தார் முதல் சிறுதர வாரியங்கள் வரை மன்னரவர்களின் திருமண முடிவை ஆதரிப்போர் ஒரு கட்சியாகவும் எதிர்ப்போர் ஒரு கட்சியாகவும் பிளவுபட்டு ஒருவரோடு ஒருவர் மனவேறுபாடு கொண்டு தத்தமது கடமைகளில் நாட்டம் செலுத்தாமல் பிணங்கி நிற்பதாலேயே அத்தகைய ஸ்தம்பித நிலை உருவாகியிருக்கிறது. சிற்றூர்களிலும், சிறு சிறு குடும்பு (பிர்க்கா)களிலும் மட்டுமே முதலில் தலைதூக்கிய இந்தப் பிளவு நிலைமை மெல்ல மெல்லப் பேரூர்களிலும் பெரிய பெரிய நகரங்களிலுமாகப் பரவி இப்போது நாடே இரண்டுபட்டு நிற்க ஆரம்பித்து விட்டது. இதனால் இதுகாறும் அடங்கியொடுங்கிக் கிடந்த சமூக விரோத சக்திகள், சைவ — சமணப் பூசல்களைக் கிளப்பி விட்டு மக்களிடையே வீணான விரோத குரோதங்களை வளர்க்கத் தொடங்கி விட்டன. தினம் தினம் இதுபோன்ற கலவரங்களும், குழப்பங்களும், சண்டை சச்சரவுகளும் ஆங்காங்கே நடைபெறுவதாகச் சேதிகள் வந்த வண்ணம் இருக்கின்றன. நேற்றிரவு இந்தத் தலைநகரான காஞ்சியின் அறப்பணைச் சேரித் தெருவிலும், சாத்தன் குட்டைத் தெருவிலும் கூடப் பயங்கரக் கலகம் ஒன்று மூண்டு அடங்கியதாகக் கேள்விப்பட்டேன். இப்படி நாடே அல்லோலகல்லோலப் பட்டுக் கொண்டிருந்தாலும் நான் அதிகமாகக் கவலைப்படுவது ஒன்றே ஒன்றுக்காகத்தான். அதாவது, நாட்டு மக்க

ஜெகசிற்பியன்

விடையே ஏற்பட்டிருக்கும் இந்தப் பிளவு நிலை நமது படைவீரர்களிடையேயும் புகுந்து அவர்களுடைய ஒற்றுமைக்கும் கட்டுப்பாட்டுக்கும் உலை வைத்து விடுமோ என்றுதான் பெரிதும் அஞ்சுகிறேன். இவ்வளவுக்கும் மூலகாரணஸ்தர்கள் அந்தப் பழையாறைச் சோழரும், அவரது இழுப்புக் கெல்லாம் இழுபட்டுக் கொண்டிருக்கும் இளவரசர் கோவிந்தவர்மருமேதான்!''

திருப்பருத்திக் குன்றத்திலிருந்து காஞ்சிக்கு வந்த நாள் முதலே பேசும் சக்தியை இழந்த ஊமை போல் யாரிடமும் எவ்விதப் பேச்சும் வைத்துக் கொள்ளாமல், எந்த அவசர அலுவல்களிலும் கவனம் செலுத்தாமல், சோகமே வடிவமாய் — சஞ்சலமே உருவாய் — சதா தனிமையிலும் சிந்தனையிலுமாக மூழ்கிக் கிடந்து, இன்றுதான் இந்த ஆலோசனைக் கூடத்துக்கு வந்து பிரமை பிடித்தவன் போல் உட்கார்ந்திருந்த பரமேசுவரவர்மன், இவ்வளவு நேரம் தாம் சொன்ன விவரங்களைக் கேட்ட பிறகும் அவற்றால் எத்தகைய சலனமோ பரப்போ அடையாமல் அமைதியாக இருப்பதைக் கண்டு உள்ளூற ஆத்திரம் பொங்கியவராய்த் தமது குரலை உயர்த்தி மேலும் படபடப்பாகப் பேசினார் முத்தரையர்:

''நமக்குள்ளிருந்தே நம் எதிரிகளாக முளைத்திருக்கும் அந்தப் பழையாறைச் சோழரும், கோவிந்தவர்மரும் இந்நாள் வரை நமக்கு எதிராக நாட்டு மக்களிடையே சொல்லி வந்த விஷயம் வேறு. அதாவது, சமண சமயத்தைச் சார்ந்தவரான ஆந்திர இளவரசி உத்தமசீலி பல்லவ நாட்டின் பட்டத்து ராணியானால் வெகு விரைவிலேயே தமிழகத்திலிருந்து சைவம் அழிக்கப்பட்டு விடும் என்றும், ஆகவே அவரைப் பல்லவ மன்னர் திருமணம் செய்து கொள்ள ஒருபோதும் விடக் கூடாது என்றும் சொல்லி வந்த அவர்கள் அவ்விஷமத்தனமான பிரசாரத்துக்கு மேலும் வலிவு தரும் வகையில் இப்போது ஒரு புதிய விஷயத்தையும் சேர்த்



துக் கொண்டிருக்கிறார்கள். சளுக்கிய எதிரிகளால் தம் இல்லத்தை இழந்து தவித்துக்கொண்டிருந்த நமது மதிப்புக்குரிய சேதியக் கலைஞர் பரவாதிமல்லருக்குத் தாங்கள் கூரம் கிராமத்திலே ஓர் இ ப்பிடம் அமைத்துக் கொள்ள நிலமும் பொருளும் முற்றூட்டாக அளித்தீர்கள் அல்லவா? அந்த முற்றூட்டுச் சாஸனத்தை அவர் துஷ்பிரயோகம் செய்து அரண்மனை போன்ற மாபெரும் மாளிகை யொன்றை இரகசியமாகக் கட்டி வருகிறார் என்றும், பல்லவ நாட்டைச் சளுக்கியர்கள் மீண்டும் பறித்துக் கொள்வதற்கான சதி வேலைகள் செய்வதற்கு உதவுபடியாக இருக்கவே அவர் அந்த மாளிகையை அமைத்து வருகிறார் என்றும், அவ்விவரத்தை யறியாமல் பல்லவ அரசாங்கம் அவருக்கு ஏராளமான பொன்னும் பொருளும் அளித்து வருகிறது என்றும் அவர்கள் இப்போது தீவிரப் பிரசாரம் செய்து வருகிறார்கள். இதிலே இன்னொரு வேடிக்கை என்னவென்றால், இந்நாட்டுக்குப் பேராபத்து விளைவிக்கக் கூடிய அந்தப் பெருஞ் சதிக் காரியத்தில் ஆந்திர இளவரசி உத்தமசீலியாருக்கும், சமண சங்கத் தலைவர் சமந்தபத்திரருக்கும், சந்திரலேகைச் சிற்றரசனான எனக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு என்றும், பல்லவ மன்னருக்கு எதிராக நாங்கள் திட்டமிட்டே பரவாதிமல்லர் மூலம் அந்த மாளிகையை இரகசியமாக நிர்மாணித்து வருகிறோம் என்றும், இந்தத் துரோகச் செயலைத் தெரிந்து கொள்ளாமல் ஆந்திர இளவரசியின் காதலில் அரசர் மயங்கிக் கிடக்கிறார் என்றும் அவர்கள் நாக் கூசாமல் பேசி வருகிறார்கள். இத்தகைய விபரீதப் பிரசாரத்தைக் கேட்டுத்தான் நாட்டு மக்கள் அப்படிக் கொந்தளித்துக் குமுறிக் கொண்டிருக்கிறார்கள். இதன் முடிவு என்ன ஆகும் என்பதை என்னால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை.......''

இவ்வளவு நேரம் எழுதி வைத்த சித்திரம்போல் அமர்ந்திருந்த பரமேசுவரவர்மன் இந்த விவரத்தைக் கேட்டு உள்ளூறத் திகில் அடைந்தவனாய்ப் புருவங்களை நெரித்துக்கொண்டு மெல்லத் தலை நிமிர்ந்து அவரைப் பார்த்தான்.

''அந்தப் பொறாமைக்காரர்களின் இப் புதிய பிரசாரத்தில் ஏதேனும் உண்மை இருக்குமோ என்று சந்தேகப்பட்ட நான் அதனை அறிய நம் இளங்காரிக்குடையானை உடனடியாகக் கூரத்துக்கு அனுப்பி வைத்தேன். அவன் வந்து சொன்ன சேதியைக் கேட்டு எனக்கே ஆச்சரியமாகி விட்டது. ஏனென்றால், துரதிர்ஷ்டவசமாக அந்த

மெய் வருத்தம் பாரார் !



1942 ஆகஸ்டு இயக்கத்தில் ராஜாஜி கலந்து கொள்ளவில்லை; சிறைப்படவும் இல்லை. வெளியிலிருந்த வண்ணம் தமது கொள்கையைப் பிரசாரம் செய்து வந்தார். காந்திஜியின் பெயராலும், காங்கிரஸின் பெயராலும் பலாத்காரச் செயல்கள் நடைபெறுவதைக் கண்டித்தார்.

அப்போது நாட்டில் ஏற்பட்டிருந்த ஆவேசத்தில் ராஜாஜியின் எச்சரிக்கையைப் பெரும்பாலோர் பொருட்படுத்தவில்லை. அதற்கு மாறாக ராஜாஜியின் பேரில் கோபமும் கொண்டார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் ராஜாஜி தேசமெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்து இந்தியாவின் சுயராஜ்யப் பிரச்னைக்கு முடிவு காண இதுவே ஏற்ற சந்தர்ப்பம் என்பதை விளக்கிக் கூறி வந்தார்.

கல்கத்தாவில் ஒரு பொதுக் கூட்டத்தில் ''ஜெர்மானியரும், ஜப்பானியரும் ஜெயிப்பார்கள் என்று எண்ணுவது பகற்கனவு. பிரிட்டிஷ் அமெரிக்கர்கள்தான் வெற்றி அடையப் போகிறார்கள்!'' என்று அவர் பகிரங்கமாகக் கூறினார். அதற்குள் ஹிந்து–முஸ்லிம்கள் சமரச ஒப்பந்தம் செய்து கொண்டு இந்தியாவின் சுதந்திரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இந்தச் சுற்றுப் பிரயாணத்தின்போது ஒரு முறை ராஜாஜி பூனாவுக்குச் சென்றார். அங்கே நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தபோது வெறி பிடித்த மனிதன் ஒருவன் அவர் மீது தாரை ஊற்றினான். ஒரு பாதி முகத்திலும், ஒரு பாதி கண்ணிலும் தார் விழுந்து வடிந்தது. கூட்டத்திலிருந்தவர்கள் அலறிப் போனார்கள். அந்த நிலைமையிலும் மனம் கலங்காமல் இருந்தவர் ராஜாஜி ஒருவர்தான். முகத்தில் வழிந்திருந்த தாரை அங்கவஸ்திரத்தினால் துடைத்துக் கொண்டே தொடர்ந்து பேசினார். முக்கால் மணி நேரம் பேசித் தாம் சொல்ல விரும்பியதை யெல்லாம் சொன்ன பிறகே முடித்தார்.

- 'கல்கி' எழுதிய 'நாட்டுக்கொரு புதல்வர்'

விஷமக்காரர்களின் கூற்றிலும் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது'' என்று அடைத்த குரலில் சொன்ன முத்தரையர் முகத்தைச் சுளித்துக்கொண்டு மேலும் கூறினார்: ''ஆம், அரசே! கூரத்தில் நிர்மாணமாகி வரும் பரவாதி மல்லரின் இல்லத்தில் ஏதோ ஒரு மர்மம் இருப்பதாகவே தோன்றுகிறது. ஏனென்றால் அதை அவர் யாருமே பார்க்க முடியாதபடி கூரைப் பந்தல் போட்டு மறைத்துக்கொண்டு அத்தனை இரகசியமாகக் கட்டி வருகிறாராம். நமது நம்பிக்கைக்கு உரிய இளங்காரிக்குடையானைக்கூட அந்த மாளிகையைக் காண அநுமதிக்கவில்லையாம்.''

விநோதமான சேதியொன்றைக் கேள்விப்பட்டவன்போல் மெல்லத் தலையசைத்துப் புன்னகை பூத்துக்கொண்டான் பரமேசுவரவர்மன்.

முத்தரையரோ அவனது மௌனத்தைச் சகிக்க மாட்டாதவராய் மீண்டும் படபடத்தார்: ''இதுதான் இப்படியென்றால் அந்தப் பழையாறைச் சோழர் இப்போது இன்னொரு விஷயம் பற்றியும் மக்களிடையே தவறான பிரசாரம் செய்து வருகிறார், அரசே! சளுக்கியத் தளபதி வில்வேலி தம் கடைசிக் காலத்தில் மனம் திருந்தித் தங்கள் மடியில் உயிர் நீத்ததையும், அவரைத் தாங்கள் மன்னித்து மிகுந்த மரியாதையுடன் தங்கள் கையாலேயே ஜலசமாதி செய்ததையும் எப்படியோ தெரிந்துகொண்டு, தங்களின் அந்தச் செயல் நாட்டுக்கே பெரிய அவமானத்தைத் தந்து விட்டது என்றும், அதனால் எதிரிகள் நம்மை எள்ளி நகையாடுவதுமல்லாமல் நம்முடைய பலவீனமாக அதனைக் கருதி நம்மீது மீண்டும் படை திரட்டி வர வழிகோலி விடுமென்றும், அப்படித் தாங்கள் நடந்துகொள்ள ஆந்திர இளவரசியின் தூண்டுதல்தான் காரணம் என்றும், ஆகவே அவரை இந்நாட்டை விட்டு விரட்டியடிக்க வேண்டும் என்றும் அவர்கள் ஊர் ஊராகப் போய்க் கூட்டம் கூட்டிப் பேசி வருகிறார்களாம்.''

இதைக் கேட்ட பரமேசுவரவர்மன் கவலை தேங்கிய இளநகையுடன் அமைதியாகச் சொன்னான்: ''மனித இதயத்துக்கு மதிப்புத் தராதவர்கள் தாம் அவ்வாறு பேச முடியும். அதைக் கேட்டு ஆத்திரப்படுகிறவர்களும் அத்தகையவர்களாகவே இருப்பார்கள். உண்மையில் அந்த மாவீரரை மன்னித்து என் சகோதரராக ஏற்றுக்கொண்டு என்னுடைய கையாலேயே அவருக்கு ஜலசமாதி செய்ததோடு நான் திருப்திப்பட வில்லை; அவர் மறைந்த இடத்தில் ஒரு வீரக் கல் நாட்டி அவருடைய நினைவை என்றும் போற்றிக் காக்க வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் சளுக்கியத் தளபதியான அந்த மாமனிதர் என்னளவில்தான் மதிப்பும் மன்னிப்பும் பெற்றாரே தவிர என் நாட்டு மக்களால் மன்னிக்கப்பட்டவராக வில்லை. அவர்களுக்கோ, அவர்கள் தேசத்துக்கோ அவரால் எள்ளத்தனை நன்மையும் விளையவில்லை. மாறாக மலையளவு தீமைகளே ஏற்பட்டன. அப்படிப்பட்ட ஒரு மனிதருக்கு நினைவுச் சின்னம் எடுப்பிக்க வேண்டுமென்ற என் சுய விருப்பத்தை மக்களின் மேல் சுமத்தி நிறைவேற்ற முனைவது எனக்குரிய இராஜாதிகாரத்தை நான் துஷ்பிரயோகம் செய்வதுபோலாகி விடுமே என்பதால்தான் அவ்விருப்பத்தைக் கைவிட்டேன். இல்லையென்றால் இது காறும் பெருவளநல்லூர் சிற்றாற்றங்கரை மேட்டில் வில்வேலியின் பெயரைத் தாங்கிக்கொண்டு ஒரு வீரக்கல் எழும்பி நின்றிருக்கும்.''

அத்தியாயம் முப்பத்திரண்டு

என்ன முடிவோ?

வியப்பு மேலிட்டவராய் அவனை விழியசைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த முத்தரையர் மெல்லப் பெருமூச்சு விட்டுக் கரகரத்த குரலில் சொன்னார்: ''பல்லவ மன்னரின் மனிதாபிமானமிக்க இதயம் இப்படி நினைக்கிறது, பேசுகிறது! ஆனால், சளுக்கிய நாட்டில் நடப்பதோ?... தளபதி வில்வேலிக்கு மைந்தனொருவன் இருக்கிறானாம். அவனுடைய பெயரும் வில்வேலிதானாம். அந்த இளைய வில்வேலி, தன் தந்தை செய்த துரோகத்துக்குப் பிராயச்சித்தமாகத் தனது குடும்பத்தோடு தீக்குளிக்கப் போவதாக அறிவித்தானாம். அவனுடைய தேச பக்தியையும் இராஜ பக்தியையும் மெச்சிய சளுக்கிய விக்கிரமாதித்தன் அவனையே தன் நாட்டுப் படைகளுக்குத் தளபதியாக நியமித்து விட்டானாம். அதனால் உற்சாகம் தலைக்கேறிய அந்த இளைய வில்வேலி, இங்கே இன்னமும் தலைமறைவாகத் திரிந்து கொண்டிருக்கும் இளவரசன்

விநயாதித்தன் வாதாபிக்கு வந்ததும் அவனுடைய தலைமையில் மறுபடியும் பல்லவ நாட்டின் மேல் படையெடுத்துச் செல்லத் திட்டமிட்டு இப்போதே படை திரட்டும் வேலையில் மும்முரமாக முனைய ஆரம்பித்து விட்டானாம். இந்த விவரங்களை நமது ஒற்றனொருவன் அறிந்து வந்து நேற்றுத்தான் என்னிடம் சொன்னான்.''

''இதில் ஒன்றும் அதிசயமில்லை, அன்பரே! இப்படியெல்லாம் நடக்குமென்று நான் ஏற்கனவே எதிர்பார்த்ததுதான்.''

''சரி; இதற்குத்தான் மன்னரவர்கள் இவ்வாறு பதில் சொல்லி விட்டார். ஆனால் பரவாதிமல்லரின் விஷயம்? அவர் ஏன் நம்மிடம்கூட அறிவிக்காமல் தம் இல்லத்தை அத்தனை இரகசியமாக நிர்மாணித்து வர வேண்டும்? இருக்கிற தொல்லை போதாதென்று அவர் வேறு ஏன் நமக்குச் சங்கடம் ஏற்படும்படி நடந்து கொள்ள வேண்டும்?''

''அவருடைய அந்தச் செயலுக்கு ஏதேனும் நியாயமான காரணம் இருக்கலாம். அவரை நேரில் சந்தித்து விசாரித்த பிறகுதான் அதுபற்றி என் அபிப்பிராயத்தைச் சொல்வேன்.''

''பழையாறைச் சோழரும் கோவிந்தவர்மரும் நமக்கு விரோதமாகக் கலகக் கொடி தூக்கியதை நான் முதலில் தெரிவித்தபோது கூட மன்னரவர்கள் இப்படித்தான் அவர்கள் மீது அபார நம்பிக்கை வைத்துப் பேசினார்! அதாவது, அவர்கள் ஏதோ ஒரு நன்மையான இலட்சியத்தை மனத்தில் கொண்டே அவ்வாறு போலியாகப் பிரசாரம் செய்து வருகிறார்கள் என்று சொன்னார்!''

''மனிதர்மேல் மனிதர் நம்பிக்கை கொள்வது தவறு அல்ல; நண்பரே! அது மனிதரிடம் இருக்கவேண்டிய ஒரு நல்ல பண்பு. ஆனால் அவர்கள்மீது அன்று நான் வைத்திருந்த அபிப்பிராயத்தை இப்போது அடியோடு மாற்றிக்கொண்டு விட்டேன். உண்மையாகவே அவர்கள் எனக்கு எதிரான நடவடிக்கையில்தான் ஈடுபட்டிருக்கிறார்களென்பதை, மாமண்டூர் குகைக் கோயில் அருகில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை நேரில் கண்ட பிறகு தெரிந்து கொண்டேன். அத்துடன், திருப்பருத்திக் குன்றத்துச் சமணப் பள்ளியில் நான் தங்கியிருந்த தினத்தன்று, பழையாறைச் சோழர் அல்லூருக்குவந்து என்னைப் பற்றிய எதிர்ப்புப் பிரசாரக் கூட்டம் ஒன்றை நடத்தப் போகிறார் என்று கேள்விப்பட்டே, என் இதய ராணியான உத்தமசீலியைக்கூடச் சந்தித்துப் பேசாமல் — அவளுடைய நலன்களைச் சமந்த பத்திரரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டதோடு திருப்தியடைந்து — காஞ்சிக்குப் புறப்பட்டு வந்து விட்டேன். எனவே, இனி அவர்களை நான் நம்பப் போவதில்லை.''



பக்தர்கள் கடவுளை எந்த உருவம், எந்தப் பெயர் வைத்துத் தியானித்துப் பக்தி செய்தாலும் ஒன்றே. சம்பிரதாய வேறுபாட்டினால் கெடுதல் ஒன்றுமில்லை. வழக்கப்பட்டு வந்த முறையில் பக்தி செய்தால் பக்தர்களுடைய உள்ளம் கரையும். உள்ளம் கரைவதுதான் முக்கியம். அதுவே பயன் தரும்.

''அப்படியானால் மன்னரவர்கள் இந்த இக்கட்டான நிலைமைக்கு என்ன பரிகாரம் காணப் போகிறார்? பழையாறைச் சோழரின் நோக்கத்துக்கிசையத் தமது திருமண முடிவைக் கைவிட்டு, வீராபிஷேக முடிசூட்டு விழாவைமட்டும் நடத்தப் போகிறாரா? அல்லது அந்தப் பொறாமைக்காரர்களுடையவும் நாட்டு மக்களுடைய ஒரு சாராருடையவும் அச்சுறுத்தலான அபிப்பிராயத்தைப் பொருட்படுத்தாமல் ஆந்திர இளவரசி உத்தமசீலியாரின் கரம் பற்றித் தமது காதல் திருமண வைபவத்தை நடத்தி முடித்துக் கொள்ளப் போகிறாரா?''

ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியவனாய்ச் சிறுபொழுது மௌனமாயிருந்த பரமேசுவர வர்மன் நெடிய பெருமூச்சு விட்டுக் கொண்டே எழுந்து ''என்னுடைய முடிவுதானே? அதைத் தெரிவிக்கிறேன், வாருங்கள்!'' என்று தணிந்த குரலில் கூறியவாறு அரண்மனை மேன்மாடத்தை நோக்கி அமைதியாக நடந்தான். ஆவலும் திகிலுமாக அவனைப் பின்தொடர்ந்தார் முத்தரையர்.

சாந்தமயமான தோற்றத்துடன் எழிலுற விளங்கிய அந்த விசாலமான அறையில் சிவப் பழமாக ஒரு சிறிய ஆசனத்தில் வீற்று, அப்பர் பெருமானின் திருப்பாக்களை மெல்லிய குரலில் வாய்விட்டு ஓதிக்கொண்டிருந்த பல்லவ



ஆஹா, என்ன குளிர்ச்சியளிக்கிறது

பின்னியின்

மொகோலின்

இந்த கோடை வெய்யிலில் நாள் முழுவதும் குளுமையாகவும், புத்துணர்ச்சியுடனும், சுகமாகவும் இருக்க என்ன ஷர்ட்டிங் அணிவதென்று யோசித்துக் கொண்டிருக்கிறீர்களா? ஏன், பின்னியின் மொகோலின் அணிந்து பாருங்களேன்! ஓடியாடி வேலை செய்பவர்களுக்கு உகந்த ஷர்ட்டிங் அது. சந்தேகமில்லாமல் உங்களைக் குளிர்ச்சியாக இருக்க உதவுகிறது.

BINNY'S FABRICS

BINNY & CO. (MADRAS) LTD.

உங்களுக்குத் தேவையான பின்னி துணிகளை இந்த அடையாளம் காணும் எங்களது அனுமதி பெற்ற விற்பனையாளரிடமிருந்து கண்ட்ரோல் விலைக்கே வாங்குங்கள்.

பக்கிங்ஹாம் & கர்னாடிக் கம்பெனி லிமிடெட்

பின்னி & கம்பெனி (மதராஸ்) லிமிடெட் ஸ்தாபனத்தின் ஒரு கிளை

JWT/BC/MK-2276a

மகாராணி காடவன்மாதேவி, தமது மைந்தனும், சந்திரலேகைச் சிற்றரசரும் வருவதையறிந்து வியப்பும் மகிழ்ச்சியுமாக நிமிர்ந்து ''வா, மகனே! வாருங்கள், முத்தரையரே! இப்படி அமருங்கள்!'' என்று வாஞ்சைப் புன்முறுவலுடன் வரவேற்றார்.

அன்னையின் பாதங்களைப் பணிவுடன் தொட்டு வணங்கிய பரமேசுவரவர்மன் அவரருகிலேயே முழங்கால்களை மடக்கிப் போட்டு அமர்ந்து கொண்டான். மகாராணியாருக்கு வணக்கம் செலுத்திய முத்தரையர் சற்றுத் தள்ளிப் போய் ஒரு தூணில் சாய்ந்து நின்றுகொண்டார்.

சில விநாடி மௌனத்துக்குப் பின், ''சந்திரலேகைச் சிற்றரசர் என்னைச் சந்திக்க வந்திருப்பது பற்றி நான் அத்தனை வியப்படையவில்லை; ஆனால் பல்லவ மாமன்னனுக்குத் தன் தாயைப் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் எழுந்ததோடல்லாமல் அவனை இவ்வளவு தூரம் அழைத்து வந்துவிட்டுமிருக்கிறதே, அதுதான் ஆச்சரியம்!'' என்று மகிழ்ச்சி மேவிய குறும்புச் சிரிப்புடன் அவ்விருவரையும் மாறி மாறிப் பார்த்தவாறு சொன்னார் மகாராணி காடவன்மாதேவி.

முத்தரையர் இதைக் கேட்டு மெல்லச் சிரித்துக் கொண்டார்.

''என் மைந்தன்மீது குற்றம் சுமத்துவதாக நினைக்க வேண்டாம். அவன் இதயத்தில் எனக்கென்று ஒதுக்கியிருந்த இடத்தில் இப்போது வேறொன்று நிறைந்திருக்கிறது; அதனால்தான் அவனுக்கு என்னைப் பற்றிய நினைவு அதிகமாக எழுவதில்லை. ஆயினும் அதற்காக நான் வருந்தவுமில்லை. அதை என் தவப் பலிதமாக எண்ணி மகிழ்ச்சியடையவே செய்கிறேன்'' என்று மீண்டும் அதே மென்னகையுடன் சொன்னார் மகாராணி.

நாணத்தால் முகம் சிவக்கச் சிறு பிள்ளைபோல் தலை குனிந்தான் பரமேசுவரவர்மன். மறுகணமே அவன் முகத்தில் வேதனையும், சஞ்சலமும் சூழ்ந்து கவிந்தன. தன் தாயை இதமாக ஏறிட்டு நோக்கியவாறு, ''அம்மா!'' என்றான்.

''ஏன் மகனே? என்ன சொல்ல விரும்புகிறாய்?'' என்று பரிவுடன் வினவினார் காடவன்மாதேவி. (தொடரும்)

கல்லைக் கனிவித்தார்

பிரிட்டிஷ் பிரதம மந்திரி ராம்ஸே மக்டனல்டின் வகுப்புத் தீர்ப்பு வெளியாயிற்று. இதன்படி ஹரிஜனங்களை ஹிந்து சமூகத்திலிருந்து தனியே பிரித்துத் தேர்தல் தொகுதிகள் வழங்கப்பட்டன. சிறையிலிருந்த மகாத்மா காந்தி இதை அறிந்தார். ஹிந்து சமூகத்தைப் பிளவு செய்யும் மேற்படி தீர்ப்பை எதிர்த்துச் சாகும் வரையில் உண்ணாவிரதம் இருக்கப் போவதாகத் தெரிவித்தார். பிரிட்டிஷ் சர்க்கார் உடனே மகாத்மாவை விடுதலை செய்து, ஹரிஜனத் தலைவர்களுடன் சமரசம் பேசி ஒப்பந்தம் செய்துகொள்ளும் பொறுப்பை ஹிந்து சமூகத் தலைவர்களின் மேல் சுமத்தினர்.



ஹரிஜனத் தலைவர்களிலே முக்கியமாக டாக்டர் அம்பேத்காரைச் சரிக்கட்ட வேண்டியிருந்தது. அது சுலபமான காரியமாயில்லை. டாக்டர் அம்பேத்கார் யாருடைய வாதத்துக்கும் மசியவில்லை; செவி சாய்க்கவில்லை; மகாத்மாவின் உயிர் நஷ்டமாகி விடலாம் என்பதையும் அவர் பொருட்படுத்தவில்லை. தாம் பிடித்ததே பிடி என்று உட்கார்ந்திருந்தார்.

அப்படிப்பட்ட விடாக் கண்டரைச் சரிக்கட்டி ஒரு சமரஸ ஒப்பந்தத்துக்கு வரச் செய்தவர் நமது தலைவர் ராஜாஜியேயாவார். எத்தனையோ பேரின் வற்புறுத்தலுக்கும் வேண்டுதலுக்கும் இணங்காத அம்மனிதரை அரை மணி நேரப் பேச்சில் மசியச் செய்து தனித் தொகுதியை விட்டுக் கொடுக்கச் செய்தார். இதன் மூலம் மகாத்மாவின் உயிரை ஒரு நெருக்கடியான சமயத்தில் ராஜாஜி காப்பாற்றினார் என்பதை, பாரத நாடு ஒரு நாளும் மறக்க முடியாது. அந்தச் சமயம் பூனாவிலிருந்து பார்த்தவர்கள் ஒவ்வொரு நிமிஷமும் மகாத்மாவின் உயிர் ஒளி மங்கி வந்ததையும், நிமிஷத்துக்கு நிமிஷம் ஸ்ரீ தேவதாஸ் முதலியவர்கள் ஓடி வந்து, ''ஏதாவது முடிந்ததா?'' என்று கேட்டதையும், சமரசப் பேச்சு நடத்திய தலைவர்கள் முகத்தில் ஈயாடாமல் உட்கார்ந்திருந்ததையும், கடைசியாக ராஜாஜி வந்து ''காரியம் முடிந்தது!'' என்று சொன்னவுடனே அனைவரும் தங்களை மறந்து களிக்கூத்தாடியதையும் வர்ணிக்கக் கேட்டோமானால் யாருக்கும் உடம்பு புல்லரிக்காமல் இருக்க முடியாது.

— 'கல்கி' எழுதிய 'நாட்டுக்கொரு புதல்வர்'

உங்கள் கூந்தலின் உண்மை அழகை வெளிப்படுத்த

காஸ்கேட்

பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில் உபயோகியுங்கள்



உங்களுக்குப் பிடித்தமான கூந்தல் அலங்கரிப்பு எதுவாயினும், காஸ்கேட் காஸ்டர் ஹேர் ஆயிலைத் தவறாமல் தேய்த்து வருவது கூந்தல் அடர்த்தியாக அழகுடன் வளர்வதற்கு இன்றியமையாதது!

தினந்தோறும் காஸ்கேட் காஸ்டர் ஹேர் ஆயிலை மயிர்க்காலி லும், கேசத்திலும் தேய்த்துக் கொள்வது லக்ஷக்கணக்கான குடும்பங்களில் இப்பொழுது குளிக்குமுன் செய்யும் அவசிய மான பழக்கமாகிவிட்டது. இவ் வெளிய பழக்கத்தினால் உங்கள் கூந்தல் அடர்த்தியாக நீண்டு பளபளப்புடன் வளருவதுடன், இளமைத் துடிப்பின் காந்தி யோடும் அற்புத ஜ்வலிப்போடும் விளங்குவதைக்கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள்.

எல்லோரும் அதிசயிக்கும் வண்ணம் உங்கள் கூந்தலின் உண்மையழகை வெளிப்படுத்த காஸ்கேட் உதவுகிறது.







மகிழ்ச்சிதரும் நறுமணம்
உங்கள் குடும்பம் முழுவதும் அதை விரும்பும்!

காஸ்கேட்

பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்

ECHO.G.4.TAM.

நிமிஷக் கதைகள்

''அம்மா! அம்மா!'' மாலதி மகிழ்ச்சியுடன் பள்ளிக்கூடத்திலிருந்து ஓடி வந்தாள்.

''என்னடி, அம்மாவுக்கு வச்சிருக்கே, மண்டு!'' என்று தாயார் எரிந்து விழுந்தாள்.

''இன்னிக்குப் பள்ளிக்கூடத்திலே எனக்கு இந்தப் புத்தகம் பரிசாகக் கிடைத்ததம்மா!''

''எதற்குப் பரிசு?''

''நெருப்புக் கோழிக்குக் கால் எத்தனைன்னு கேட்டாங்க. நான் மூணுன்னு சொன்னேன்.''

''அடி, மக்கு! நெருப்புக் கோழிக்குக் கால் இரண்டு தானேடி!''

''அது சரிதாம்மா! அப்புறம் எனக்கும் தெரிஞ்சு போச்சு! ஆனால் என் விடைதான் கிட்டத்தட்ட சரியாயிருந்தது. மத்தவங்களெல்லாம் நாலு – அஞ்சுன்னு எத்திக்கிட்டே போய்க்கிட்டிருந்தாங்க!''



ஃ ஃ ஃ

நோயாளி ஒருவனுக்கு ஆபரேஷன் நடந்தது. மூர்ச்சை தெளியாமலே அவன் வார்டில் கிடந்தான். வெகு நேரம் கழித்து மூர்ச்சை தெளிந்தபோது பக்கத்துப் படுக்கையில் கிடந்த இரு நோயாளிகள் பேசுவது இலேசாக அவன் காதுகளில் விழுந்தது.

''இந்த டாக்டர்களுக்கு ரொம்ப ஞாபக மறதி. ஒரு தடவை என்ன ஆயிற்று தெரியுமா? ஒரு நோயாளிக்கு ஆபரேஷன் செய்து தைக்கும்போது ஒரு சிறு ஆயுதத்தையே ஞாபக மறதியாக வயிற்றில் வைத்துத் தைத்துவிட்டார்கள்!'' என்றான் ஒருவன்.



''சில வருஷங்களுக்கு முன் கல்கத்தாவிலே என்ன நடந்தது, தெரியுமா? ஒரு டாக்டர் தன் கைக்குட்டையையே நோயாளியின் வயிற்றுக்குள் வைத்துத் தைத்துவிட்டாராம். பல நாட்களுக்கு அப்புறம்தான் அவருக்கு நினைவு வந்ததாம்'' என்றான் இன்னொருவன்.

இதே சமயம் ஒரு டாக்டர், ''என் தொப்பியை யாராவது பார்த்தீர்களா?'' என்று கேட்டுக் கொண்டே அந்த வார்டுக்குள் நுழைந்தார். அவ்வளவுதான், மூர்ச்சை தெளிந்து கொண்டிருந்த நோயாளிக்கு மீண்டும் மூர்ச்சை போட்டு விட்டது.



ஃ ஃ ஃ

பாபு ராஜேந்திரப் பிரசாத் ஒரு முறை ரயிலில் தமது கிராமமான ஜீராதேயிக்குப் போய்க் கொண்டிருந்தார். வழியில் ஒரு சக பிரயாணி சிகரெட்டைப் பற்ற வைத்துப் புகையை ஊதித் தள்ளினார். சிகரெட் புகை தாளாமல் ராஜேந்திரப் பிரசாதுக்கு இருமல் வந்து விட்டது. எத்தனையோ வழிகளில் இருமலை அடக்கிப் பார்த்தார்; முடியவில்லை. சிகரெட் புகைத்தவரும் அவர் படும் அவதியைக் கண்டு சிகரெட்டை அணைக்கவில்லை. ராஜேந்திர பாபு அவரிடம், ''இந்த சிகரெட் உங்களுடையதுதானே?'' என்றார்.



'' என்னுடையது இல்லாமல் உங்களுடையதோ?''

''கோபித்துக் கொள்ளாதீர்கள். சிகரெட் உங்களுடையது என்றால் அதன் புகையும் உங்களுடையது தானே? அதை உங்களிடமே வைத்துக் கொள்ளாமல் பிறர் மீது ஏன் விடுகிறீர்கள்?'' என்று சாந்தமாகக் கேட்டார் ராஜேந்திர பாபு.

கூட்டுப் பயணி அப்போது தான் தமது செய்கைக்கு வெட்கிச் சிகரெட்டைத் தூர விட்டெறிந்தார்.

ஃ ஃ ஃ

சங்கரன்: ரங்கா! என்னடா இது கல்யாணம் பண்ணிக் கொண்ட பின் உன்னை ஆளையே காணோம்! குடும்ப யோக க்ஷேமங்கள் எல்லாம் எப்படி?

ரங்கன்: அதை ஏன் கேட்கிறே? கல்யாணம் ஆன புதிசிலே நான் பேசினேன், பேசினேன்; அப்படிப் பேசினேன். அவள் கேட்டுக் கொண்டே யிருந்தாள். கொஞ்ச நாட்களுக்கப்புறம் அவள் பேசினாள், நான் கேட்டுக் கொண்டிருந்தேன். இப்பொழுது என்னடா வென்றால், அவளும் பேசுகிறாள்; நானும் பேசுகிறேன். பக்கத்து வீட்டார்கள் எங்கள் இருவர்பேச்சையும் ரசித்துக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.



ஃ ஃ ஃ

கடிகாரம் தோன்றிய காலம் அது. தனவந்தர் ஒருவர் தம் வீட்டுச் சுவரில் மாட்டக் கடிகாரம் ஒன்று வாங்கினார். தம் வீட்டுக் கூடத்தில் கொண்டுபோய் மாட்டினார். 'கிளிக், கிளிக்' என்ற ஒலியுடன் 'பெண்டுலம்' ஆடி மணியையும் தெரிவிக்கவே, அவர் மனம் பூரித்தார்.

ஏழு நாட்கள் வஞ்சிசாக ஓடிக் கடிகாரம் எட்டாவது நாள் நின்று விட்டது. தனவந்தருக்குக் கடிகாரம் நின்ற காரணம் விளங்கவில்லை;

தாமே ஒரு ஸ்டூலை எடுத்துப் போட்டுக் கொண்டு கடிகாரத்தைத் திறந்து பார்த்தார். அதற்குள் ஒரு வண்டு செத்துக் கிடந்தது.

'இனி கடிகாரம் எப்படி ஓடும்? பாவம், அதை ஓட்டும் டிரைவர் தான் செத்துக் கிடக்கிறதே!' என்று வருத்தத்துடன் மனத்துள் முணுமுணுத்துக் கொண்டார்.



ஹ்யூலெட்ஸ் மிக்சர்

அஜீரணத்தை விரைவில் அகற்றுகிறது



உங்கள் உழைப்பு சிரமமிக்கது. குடும்பப் பொறுப்புகள் ஒரு பக்கம்; குழந்தைகளின் பராமரிப்பு ஒரு பக்கம். உங்கள் அலுவல்கள் மிகவும் சிரமமானதுதான். இவ்வாறிருக்க, அஜீரணத்தினால் அடிக்கடி தொந்தரவேற்பட்டால் மிகவும் கஷ்டமல்லவா? ஆனால் நீங்கள் அவ்வாறு கஷ்டப்படவேண்டியதில்லை. ஹ்யூலெட்ஸ் மிக்சர் வயிற்று உபாதையை விரைவில்போக்கி, நிரந்தரமாக குணமளிக்கிறது; வாயுண்டாகும் அமிலங்களை அகற்றி, ஜீரணகோசத்திற்கு அதன் வேலையை சரிவர செய்வதற்கேற்ப பாதுகாப்பளிக்கிறது.

ஹ்யூலெட்ஸ் மிக்சர்குழந்தைகளின் வயிற்றுக் கோளாறுகளுக்கும்கூட உத்தமமானது. வயிற்றுப் போக்குக்கு அபினி சேர்ந்த ஹ்யூலெட்ஸ் மிக்சர் குணமளிக்கும்.

ஹ்யூலெட்ஸ் மிக்சர் ஜீரணத்திற்கு சிறந்தது

C. J. ஹ்யூலெட் & ஸன் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்

86/A, நைனியப்ப நாயக் தெரு, மதராஸ்-3

JWT/CJH/1930





இதயத்தில் ஒரு தீ

சுஜமகன்

நீலாவதி அலுவலகத்துக்கு வரும்போது மணி பத்தரையாகி விட்டது. குதிகால் உயர்வு காலணி 'டக், டக்' என்று குதிரைக் குளம்பொலி போல் ஓசை கேட்க மிடுக்குடன் அவள் நடந்து வந்ததை அந்தப் பிரிவிலுள்ள அத்தனை ஆண் பெண் கண்களும் நோக்கின. தன்னை இவ்வளவு பேர் கவனிக்கிறார்கள் என்ற உணர்வு அவளை இன்னும் தலை நிமிர வைத்தது. ''என்ன கர்வம்? என்ன மமதை? ஆனாலும் ஒரு பெண்ணுக்கு இவ்வளவு ஆணவம் கூடாது'' என்று குமாரி வித்தியாவின் வாய் முணுமுணுத்தது.

நீலாவதி தனி அறையில் மேஜைக்கு முன்னால் நளினமாக அமர்ந்தாள்.

''வித்யா!'' என்று குயில் கூவுவது போல் அழைத்தாள்.

அந்தக் குரல்தான் அவளுக்குச் சம்பத்து. அவள் நடை உடை பாவனைகள் எப்படி இருந்தபோதிலும் அந்தக் குரலுக்கு வசப்படாதவர்கள் எவருமே கிடையாது.

பத்துப் பேர் அடங்கிய அந்த அலுவலகப் பிரிவுக்கு அவள் தான் தலைவி. அவள் தலைமையில் எட்டு ஆண்களும் இரண்டு பெண்களும் வேலை பார்த்தார்கள். அவளுடைய உடை அலங்காரத்தையும் நடையின் அகம்பாவத்தையும் கண்டு எல்லோரும் அவளை வெறுக்கவே செய்தார்கள். வேலையில் கண்டிப்பும் கறாருமாக இருப்பாள். அதே சமயம் குரலில் நயம் சொட்டும். அதை எதிர்க்கும் துணிவு எவருக்கும் கிடையாது. அலுவலகத்திலேயே மிகவும் திறமை உடைய பிரிவு நீலாவதியுடையதுதான்.

வேலை வாங்குவதில் கண்டிப்பாக இருந்தாலும் சலுகை அளிப்பதில் அவளுக்கிருந்த தாராளம் யாருக்கும் வராது. ஒரு சாதாரணத் தலைவலி என்று யாராவது சொல்லி விட்டால் போதும், உடனே மாத்திரை வரவழைத்துக் காப்பி கொண்டு வரச் சொல்லி மிகவும் அன்போடு அருந்தச் சொல்லி உபசரிப்பாள். முகத்திலே சிரிப்பே வராத ஒரு ஜீவன் இத்தனை இளகிய நெஞ்சம் படைத்ததா என்று எல்லாரும் ஆச்சரியப்படுவார்கள்.

என்றுமே நேரம் கழித்து வராத தலைவி அன்று வர ஏன் நேரமாகி விட்டது என்று அந்தப் பிரிவினர் தமக்குள்ளே சர்ச்சை செய்து கொண்டிருந்த வேளையில்தான் நீலாவதி பிரவேசித்து வித்யாவை அழைத்தாள். வித்யா அவள் அருகில் வந்தாள்.

''வித்யா! நேற்று நான் கொடுத்த வேலையெல்லாம் பூர்த்தியாகி விட்டதா?''

''செய்து முடித்து விட்டேன்.''

''அப்படியானால் நீ வீட்டுக்குப் போய் உன் அம்மாவைக் கவனி. அம்மாவின் உடம்பு குணமானபின்பு வரலாம்.''

வித்யா திடுக்கிட்டாள். தன் தாயாருக்கு உடம்பு அசௌக்கியம் என்று இவளிடம் யாரும் சொல்லவில்லையே! இவளுக்கு எப்படித் தெரிந்தது?

அழகைப் பார்த்து ஆனந்தப்படுவதே ஒரு பிரயோசனம். அந்த ஆனந்தம் நிர்மலமான ஒரு மகிழ்ச்சி. உடலுக்கு அன்னத்தைப் போல், ஆனந்தமானது உள்ளத்துக்குச் சக்தியும் ஒளியும் தருகிற உணவு.

●

இசையும், பொருளும், பக்தியும் மூன்றும் கலந்தாலேதான் மனம் உருகும். இசையில்லாத பாட்டைப் படித்துப் பரீட்சையில் தேறலாம். ஆனால் பக்தி என்கிற ஏணியில் ஏறுவதற்கு இசை வேண்டும்.



''என்ன வித்யா தயங்குகிறாய்?''

''எனக்கு லீவே கிடையாது......''

''அதனால் என்ன? சம்பளமில்லாமல் லீவு எடுத்துக் கொண்டால் போயிற்று!''

''என் குடும்ப நிலை அதற்கு இடம் கொடாது!''

''எனக்குத் தெரியும், வித்யா. நீ போ என்றால் போ!''

அதற்கு மேல் அங்கு அவளால் நிற்க முடியவில்லை. வித்யா தன் மேஜை மேலிருந்த 'பைல்'களை யெல்லாம் ஒழுங்குசெய்து விட்டு விடு விடென்று கிளம்பிச் சென்றாள்.

''மிஸ்டர், சற்குணம்! மிஸ் வித்யாவின் வேலைகளை இரண்டு நாட்களுக்கு நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள்.''

''சரி அம்மா!'' என்றார் சற்குணம்.

அன்று நீலாவதி வழக்கமான சுறுசுறுப்புடன் இல்லை. அவள் முகத்தில் ஏதோ கவலை படர்ந்திருந்தது.

வித்யா போய் அரை மணி நேரம் இருக்கும். நீலாவதியின் அறையில் டெலிபோன் மணி அடித்தது.

''வித்யாவா? உன் அம்மாவுக்கு ஜுரம் இறங்கி விட்டதா? ரொம்ப சந்தோஷம். நன்றி கின்றி எல்லாம் ஆண்டவனுக்குச் சொல்லு. உன் வேலையைப் பற்றிக் கவலைப் படாதே! அம்மா சுகமடைந்த பிறகு நீ வந்தால் போதும்.''

டெலிபோனைக் கீழே வைத்து விட்டு நிம்மதிப் பெருமூச்சு ஒன்று விட்டாள் நீலாவதி. அவள் முகத்தில் இருந்த கவலை ரேகை மறைந்து விட்டது.

வித்யா ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவள். தாயாரும் பத்து வயதுத் தங்கையும் தான் இந்த உலகத்தில் அவளுக்கு உறவினர்கள். மகளைப் படிக்க வைத்து அந்தப் படிப்பையே ஒரு சொத்தாக விட்டு அவள் தந்தை மறைந்து விட்டார். அதனால் அந்தக் கல்விச் சொத்தையே முதலாக வைத்து வித்யா வேலையில் சேர்ந்தாள். அவளது வருவாய் மூன்று பேர்களுக்கும் போதுமானதாக இருந்தது.

நீலாவதியின் பிரிவில் அவளை வேலைக்குப் போட்டபோது 'ஒரு பெண்ணிடம் வேலை செய்வது சற்றுக் கஷ்டமாயிற்றே!' என்று நினைத்தாள். அவள் நினைத்தபடிதான் நடந்தது. நீலாவதி ஒரு கடினமான எஜமானியாகத்தான் இருந்தாள். ஆனால் அந்தக் கடினத்துக்கு அடியில் இளகிய உள்ளம் ஒன்று உண்டு என்பது நாளாவட்டத்தில் தெரிய வந்தது.

அந்த அலுவலகத்தில் சற்குணம் ஒருவர்தான் நீலாவதியுடன் சற்று உரிமையோடு பேசக் கூடியவர். சற்குணம் தான் 'அந்தப் பிரிவில் எல்லாரையும்விட அனுபவம் உடையவர் என்பதுடன் வயதிலும் பெரியவர்.

இடைவேளையின் போது எல்லாரும் சிற்றுண்டி அருந்தப் போய் விட்டார்கள். நீலாவதியும் சற்குணமும் மட்டும் போகவில்லை.

''மிஸ்டர் சற்குணம்! 'லஞ்ச'க்குப் போகவில்லையா?'' என்றாள் நீலாவதி பரிவுடன்.

''அதே கேள்வியை உங்களை நான் கேட்க விரும்புகிறேன்!'' என்றார் சற்குணம்.

''நீங்களும்' வாருங்கள். போகலாம்'' என்று இருவருமாக அலுவலகத்தை விட்டுப் புறப்பட்டார்கள்.

''எங்கே போகப் போகிறீர்கள்?'' என்று சற்குணம் கேட்டார்.

''என் வீட்டுக்கு!''

''உங்கள் வீட்டுக்கா?''

''ஏன், என் வீட்டுக்கு நீங்கள் வரக் கூடாதா?''

''தடை ஏதும் கிடையாது. ஆனால் இன்று உங்கள் காரியங்களே விசித்திரமாயிருக்கின்றனவே என்றுதான் யோசிக்கிறேன். எப்போதும் சரியான நேரத்தில் ஆபீசுக்கு வரக் கூடியவர்கள் அரை மணி நேரம் தாமதமாக வந்தீர்கள். வந்ததும் வராததுமாக வித்யாவை அவள் வீட்டுக்கு அனுப்பினீர்கள்.''

''எல்லாமே அதிசயந்தான் மிஸ்டர் சற்குணம். இந்த ஆபீஸில் நான் ஐந்து வருஷங்களாக வேலை செய்கிறேன். உங்கள் ஒருவருடன் தான் ஏதோ பேசுகிறேன். மற்றவர்களுடன் அநாவசியமாக ஒரு வார்த்தை பேசுவதில்லை. பத்துப் பேரும் என்னை ஏதோ அதிசயப் பிறவியைப் பார்ப்பது போல் — பார்த்து ஒதுங்கிப் போகிறார்கள்!''

''இலாகாவின் தலைவி என்ற மரியாதை காரணமாக ஒதுங்கிப் போகலாம். அத்துடன் உங்களுடைய நவநாகரிக உடை அலங்காரங்களெல்லாம் நீங்கள் யாரோ பெரிய இடத்துப் பெண், அருகே நெருங்க முடியாத நிலையில் இருப்பவர்கள் என்று எடுத்துக் காட்டியிருக்கும். அதுவும் தவிர நீங்கள் வேலையில் கண்டிப்பாக இருப்பதால் பழகுவதிலும் கண்டிப்பாக இருப்பீர்கள் என்று நினைத்திருக்கலாம்.....''

''அதெல்லாம் ஒன்றுமில்லை, மிஸ்டர் சற்குணம்! பெண் ஒருத்தி நமக்குத் தலைவியாக இருப்பதாவது, இவளுக்கு அடங்கி நாம் போக வேண்டியிருக்கிறதே என்ற மனக் குமைச்சல்தான் இத்தனைக்கும் காரணம். ஆண்கள்தான் அப்படி விலகி நின்றார்கள்

என்றால் அந்த இரண்டு பெண்களுக்கு என்ன என்று கேட்கிறீர்களோ? அது இனப் பொறாமை. ஆண் அதிகாரியாக இருந்தால் நாம் எவ்வளவோ சலுகைகள் பெறலாமே, இவள் நம்மை இப்படி வேலை வாங்குகிறாளே என்ற ஆத்திரம்தான் அவர்கள் ஒதுங்கிப் போவதற்குக் காரணம். உண்மையில் மிஸ்டர் சற்குணம், எனக்கு எல்லோருடனும் நெருங்கிப் பழகி நாம் ஒரு குடும்பம் போல் வாழ வேண்டும் என்றுதான் விருப்பம். ஆனால் இந்த ஆபீஸ் சூழ்நிலை என்னை அதற்குச் சிறிதும் அனுமதிக்கவில்லை. உங்களுக்குத் தெரியும், நமது பிரிவில் ஒருவருக்குக் கஷ்டம் வந்து விட்டால் நான் எப்படி நடந்து கொண்டிருக்கிறேன் என்று. அப்படி யிருந்தும் என்னை ஒதுக்கியே வைத்திருக்கிறீர்கள்.

''என் நாகரிக உடைகளைப் பற்றிச் சொன்னீர்கள். உண்மையில் அவை வெறும் பகட்டே தவிர விலை உயர்ந்தவை அல்ல. நான் மாற்றி மாற்றிப் போட்டுக் கொண்டு வரும் காதணிகள் கூடப் போலிகள். என்னை நெருங்கிப் பார்த்தீர்களானால் சூட்டு வெளிப்பட்டிருக்கும். குழந்தை முதல் இந்த ஆடம்பர மோகம் எனக்கு உண்டு. அதற்கும் என் குணத்துக்கும் சம்பந்தமே கிடையாது. ஆபீஸில் வேலை நன்றாக நடக்க வேண்டும், அதற்குக் கண்டிப்பாய் நடக்க வேண்டும் என்ற கொள்கை உடையவள் நான். அதற்காக என்னை நீங்கள் அறவே ஒதுக்கி விடுவீர்கள் என்று நினைக்க வில்லை.''

''மிஸ். நிலாவதி! உங்களை நான் என்றோ புரிந்து கொண்டு விட்டேன். ஆனால் ஆபீஸில் உள்ள மற்றவர்கள் புரிந்துகொள்ளவில்லை.''

''புரிய வைக்கிறேன் மிஸ்டர் சற்குணம். அதற்கான காரியங்கள்தான் இன்று நடந்திருக்கின்றன. இன்று நான் ஆபீசுக்கு நேரம் சென்று வந்தது, மிஸ் வித்யாவை வீட்டுக்குப் போகச் சொன்னது எல்லாம் என் இதயத்திலே கனன்ற தீயை அணைப்பதற்கான நீராகப் பயன்படப் போகின்றன.''

இருவரும் ஓர் ஆட்டோ ரிக்ஷாவிலிருந்து இறங்கினார்கள்.

''இதுவா உங்கள் வீடு?'' என்றார் சற்குணம் ஒரு பழைய கட்டடத்தைப் பார்த்து.

''ஏன்? இந்த வீட்டில் நான் வசிக்கக் கூடாதா? இந்த முழு வீட்டில்கூட நாங்கள் வசிக்கவில்லை. ஒரு பகுதிதான் எங்கள் குடியிருப்பு'' என்று சற்குணத்தை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றாள். காரை பெயர்ந்து, தரை பெயர்ந்து இருளடைந்து கிடந்த பகுதிகளை யெல்லாம் கடந்து பின் பகுதிக்கு அவர்கள் சென்றார்கள். அங்கே பளிச்சென்று சூரிய வெளிச்சம் பட்ட ஒரு பகுதி துப்புரவாக இருந்தது. இரண்டு அறைகள் கொண்ட அந்தப் பகுதி மட்டும் அழகு மிகுந்து காணப்பட்டது.

''இது என்ன குப்பையில் மாணிக்கம் போல் இந்தப் பாழ் வீட்டில் இந்தப் பகுதி மட்டும் ஒளி வீசுகிறதே! ஆபீஸ் நிர்வாகத்தில்தான் நீங்கள் திறமைசாலி என்றால் குடும்ப நிர்வாகத்திலும் மகா திறமைசாலி போல இருக்கிறதே!'' என்றார் சற்குணம்.

''மிஸ்டர் சற்குணம்! உங்கள் பாராட்டுக்கு நன்றி. சுற்றுப்புறம் எப்படி இருந்தாலும் நாம் இருக்கிறபடி இருந்தால் எதுவும் நன்றாகத்தான் இருக்கும். குடும்ப நிர்வாகத்தில் எனக்கு ஏற்பட்ட அனுபவம்தான் ஆபீஸ் நிர்வாகத்தில் கை கொடுத்து உதவியது. ஆனால் என் குடும்ப நிர்வாகத் திறமையையோ, பார்க்க வேண்டியவர்கள் பார்க்கவில்லை. அதுதான் எனக்கு ஆறாத் துயரம். அந்தத் துயரத்தை மறந்து உற்சாகம் கொள்வோமே என்றுதான் வேலையில் சேர்ந்தேன். ஆனால் வேலை பார்க்கும் இடத்திலோ என்னை எல்லோரும் ஒதுக்கி வைத்து விட்டார்கள்!''



விக்கிரகம் கடவுளே என்று நீ சொல்லலாம். கடவுள் விக்கிரகம் மட்டுமே என்று எண்ணும் தவற்றை மட்டும் தவிர்ப்பாய்! - சுவாமி விவேகானந்தர்

''தங்களுடன் யார் இருக்கிறார்கள்?''

''என்னுடன் என் வயோதிகத் தந்தை இருக்கிறார். எனக்காக அவரும் அவருக்காக நானும் வாழ்கிறோம்.''

'' ஒன்று கேட்பேன், வித்தியாசமாக நினைத்துக் கொள்ள மாட்டீர்களே!''

''தாராளமாகக் கேளுங்கள்.''

''நீங்கள் ஏன் கலியாணம் செய்துகொள்ளவில்லை.....?''

''அது எப்படி உங்களுக்குத் தெரியும்?''

''மிஸ் நீலாவதி என்று சொல்கிறீர்களே!''

''ஆமாம். மிஸஸ் நீலாவதியாக இரண்டு வருஷங்கள் இருந்தேன். பிறகு பழைய பட்டம் என்னை வந்தடைந்து விட்டது......''

''அப்படியானால் தங்கள் கணவர் விவாகரத்து செய்து விட்டாரா?''

''என்னை ஒதுக்கி வைத்து விட்டதாகச் சொல்லிப் போனார். மறு கல்யாணத்துக்கு என் சம்மதம் வேண்டுமென்றார். கொடுத்து விட்டேன்'' என்றாள் நீலாவதி.

''ஏன் கொடுத்தீர்கள்....?''

''இஷ்டம் இல்லாதவரைக் கட்டுப்படுத்த எனக்கு உரிமை ஏது மிஸ்டர் சற்குணம்?'' என்றாள்.

''கல்யாணம் செய்து கொள்ளும்போது இஷ்டப்பட்டுத்தானே செய்துகொண்டார்?''

''ஆமாம். பிறகு பிடிக்கவில்லை.''

''காரணம்?''

''என்னைவிட அழகான குணவதி ஒருத்தியைப் பார்க்க நேர்ந்தது. அவளுக்கும் இவரைப் பிடித்து விட்டது. அவர்களுடைய அன்பைக் கெடுப்பதற்கு நான் யார்? ஒதுங்கி விட்டேன்.....''

''இப்படி ஒதுங்கிச் செல்லும் குணம்தான் உங்களைக் காரியாலயத்தவரும் ஒதுக்கி வைக்கும்படி வைத்து விட்டது. நீங்கள் உங்கள் பதவியைக் கொஞ்சம் மறந்து விட்டுக் கீழே இறங்கி வந்தீர்களானால் உங்களுடன் எல்லோரும் நட்புக் கொண்டிருப்பார்கள்....''

''மிஸ்டர் சற்குணம்! நான் என் பதவியைப் பற்றி நினைத்ததே கிடையாது. நீங்கள் எல்லோரும் தப்புக் கணக்குப் போட்டு விட்டீர்கள். இன்று முதல் நான் உங்களில் ஒருத்தி. நீங்கள் என் மன நிலையை எடுத்து எல்லோருக்கும் சொல்ல வேண்டும். அதற்குத்தான் உங்களை இங்கு அழைத்து வந்தேன்......''

''இன்று என்ன இந்தத் திடீர் ஞானோதயம்.....?''

''அதையும் சொல்கிறேன். எனக்கு என்ன வயதிருக்கும்?''

''என்ன, முப்பது வயதிருக்கலாம்.''

''தப்பு. நாற்பது வயது......''

''ஆச்சரியம்தான். நாற்பது வயதிலா இந்த உடை அலங்காரங்களெல்லாம்?''

''அலங்காரத்துக்கும் வயசுக்கும் என்ன சம்பந்தம்? உண்மையில் என் வயதை மறைப்பதற்கு ஒரு உபாயமாகவும் என் அலங்காரத்தை நான் கருதி வந்தேன்.... ஆனால் அதெல்லாம் இன்றுடன் சரி....''

''ஏன்?''

''நான் சாதாரணமாக வந்தால் உங்கள் அபிமானத்தைப் பெறலாம் என்பதைத் தெரிந்து கொண்டு விட்டேன். இனி அப்படியே என் ஒப்பனைகளை விட்டுவிடுகிறேன். நான் சொல்ல வந்த விஷயத்துக்கு வருகிறேன்... இன்று காலை ஒன்பதரை மணிக்கு வழக்கம் போல பஸ்ஸுக்கு நின்று கொண்டிருந்தேன். அப்போது பத்து வயதுப் பெண் தள்ளாடித் தள்ளாடி வந்து கொண்டிருந்த தன் தாயைப் பிடித்துக் கொண்டு வந்தாள். அந்த அம்மாள் நல்ல அழகி. பார்த்தால் மனத்தைக் கவரும் உருவம். ஜுரத்தால் கண்ணும் முகமும் செக்கச் செவேலென்று சிவந்து போயிருந்தன. பார்த்தால் பரிதாபமாக இருந்தது. 'ஏனம்மா பாட்டியை இப்படி நடத்தி அழைத்து வருகிறாய்? ஒரு வண்டி, அல்லது டாக்ஸியில் அழைத்துக் கொண்டு வரக் கூடாதா?' என்று கேட்டேன்.

'அதுக்கெல்லாம் வக்கேதம்மா!' என்று அந்த அம்மாள் பதிலளித்தாள்.

''நான் உடனே ஒரு டாக்ஸியைக் கூப்பிட்டு அவளை ஏற்றிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போய், மருந்து வாங்கிக் கொடுத்து, வீட்டில் கொண்டு விட்டேன்.

'ஏனம்மா, உங்களுக்கு வேறு துணையில்லையா?' என்று அந்த அம்மாளிடம் கேட்டேன்.

'இருக்காம்மா! வித்யான்னு ஒரு பொண்ணு ஆபீஸுக்குப் போறாள். அவ அதிகாரி ஒரு பொண்ணாம்; மகா முசுடு. ஒருத்தர் கூடவும் பேசமாட்டாளாம். இவளுக்கோ லீவு கிடையாது. அவளிடம் அனுமதி கேட்பதற்குப் பயம்...' என்று அந்த அம்மாள் சொன்னதும் என் உள்ளத்திலே கனன்று கொண்டிருந்த நெருப்பு திடீரென்று பற்றி எரிய ஆரம்பித்தது. என்னைப் பற்றி இப்படியா அபிப்பிராயம் இருக்கிறது? என்று அவமானத்தால் குன்றிப் போனேன். ஆபீஸுக்கு வந்ததும் வித்யாவை வீட்டுக்குப் போகச் சொன்னேன்.''

''வித்யா கொஞ்ச நேரத்துக்கெல்லாம் உங்களுக்கு டெலிபோன் செய்தாளே?''

''ஆமாம்; அவள் தாயாரிடம் சொன்னேன். 'அம்மா உங்கள் பெண்ணின் அதிகாரி நான்தான். உங்கள் உடல் குணமாகிற வரை அவள் ஆபீஸுக்கு வரவேண்டாம்' என்று. 'இவ்வளவு நல்லவர்களை அந்தப் பெண் முசுடு என்றாளே!' என்று அரற்றினாள் அந்த அம்மாள். அதுதான் மிஸ்டர் சற்குணம் என் ஞானோதயத்துக்குக் காரணம்'' என்று முடித்தாள் நீலாவதி.

ஆனால் நீலாவதி சற்குணத்திடம் சொல்லாத ரகசியம் ஒன்று உண்டு. அதுதான் அவள் வித்தியாவின் வீட்டில் பார்த்த போட்டோ. அதிலே வித்தியாவின் தாயாரும், நீலாவதியின் முன்னாள் கணவரும் நின்று கொண்டிருந்தார்கள்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon